படிக்காசுப்புலவர்

இயற்றிய

தண்டலையார் சதகம்

97/2.144

உரையாசிரியர்

திரு. புலவர் 'அரசு' அவர்கள்

1 APR 1958
MADRAS

கழக வெளியீடு

தண்டலையார் சதகம்

- மூலமும் உரையும் -

மூலம்:

படிக்காசுப் புலவர் அவர்கள்

உரை:

திரு. புலவர், அரசு அவர்கள்

கழக வெளியீடு: ௬௮௧

பழமொழி விளக்கம்

என்னும்

தண்டலையார் சதகம்

திரு. புலவர், 'அரசு' அவர்கள்

எழுதிய

[illegible]

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி — சென்னை-1

பதிப்புரை

நம் செந்தமிழ் மொழிக்கண் விளங்கும் தொண்ணூற்றறுவகை நூல் தொகுதிகளுள், சதகவகையும் ஒன்றாம். இது கடவுளர்களையோ தாம் குறிக்கோளாகக்கொண்ட ஏனையரையோ பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடப் பெறுவதாகும். இம்முறையில் கடவுளரைத் தலைவராகக் கொண்ட சதகவகைகளே வழக்கில் இருப்பனவாகும். அவைகள் கடவுளரை வாழ்த்துவதாக மட்டும் அமையாது மக்கள் உலகில் நன்னெறியறிந் தொழுகுதற்காம் அறமுறைகளையே நீதிநூல்கள்போல் உணர்த்துவனவாம்.

இக் குறிக்கோளுடன் அமைந்தனவே குமரேச சதகம், அறப்பளீசுர சதகம் போன்றவைகளும் இத் **'தண்டலையார் சதக'**மும் ஆகும். இதில் பண்டுதொட்டு மக்கள் வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளை மக்கள் அறிவறிந்து நடந்து நலம்பெற எளியமுறையில் வழங்கும் பழமொழிகளிற் சிலவற்றை எடுத்து அதற்கொத்த அறமுறைகளை ஆசிரியர் கோத்துத் திறம்பட இனிய எளிய மெல்லிய சொற்களால் அழகிய சதகமாக ஆக்கித் தந்துள்ளார்.

இவ்வரிய நூலுக்குப் புலவர் **திரு. அரங்கு** அவர்களைக் கொண்டு நல்லுரை எழுதுவித்து அழகிய முறையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளோம்.

தமிழக மாணவரும், கணக்காயரும், ஏனையரும், கற்றும் கற்பித்தும் வையத்துள் வாழ்வாங்குவாழ்ந்து பெருந்திருவினராவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உ

திருச்சிற்றம்பலம்

பழமொழி விளக்கம்

என்னும்

தண்டலையார் சதகம்

மூலமும் உரையும்

காப்பு—க

விநாயகர்

சீர்கொண்ட கற்பகத்தின் வாதாவி நாயகனைத்
தில்லை வாழும்
கார்கொண்ட கரிமுகனை விகடசக்ர கணபதியைக்
கருத்துள் வைப்பாம்
பேர்கொண்ட ஞானநாயகிபாகன் தண்டலையெம்
பெருமான் மீதில்
ஏர்கொண்ட நவகண்டம் இசைந்தபழமொழிவிளக்கம்
இயம்பத் தானே.

(தொடர் உரை.) பேர்கொண்ட ஞானநாயகி பாகன் தண்டலை எம்பெருமான் மீதில் - புகழ்பெற்ற ஞான நாயகி அம்மையை இடப்பக்கத்திற் கொண்டவராகிய தண்டலை நீள்நெறி என்னும் திருப்பதியில் எழுந்தருளிய எம் இறைவரான சிவபெருமான்மேல், ஏர்கொண்ட நவகண்டம் இசைந்த பழமொழி விளக்கம் இயம்ப - அழகிய ஒன்பது கண்டங்களிலும் வழங்கிய பழமொழிகளுக்கு விளக்கம் கூற, சீர்கொண்ட கற்பகத்தின் - சிறப்பினையுடைய கற்ப

கத்தினைப் போன்ற, வாதாவி நாயகனை - வாதாவி விநாய கரை, தில்லை வாழும் கார்கொண்ட கரிமுகனை - தில்லையில் எழுந்தருளிய மேகம் போன்ற யானைமுகக் கடவுளை, விகட சக்ர கணபதியை - விகட சக்கர கணபதி என்னும் திருப் பெயர் கொண்டருளியவரை, கருத்துள் வைப்பாம் - நினை வில் அமைப்போம்.

(விளக்கவுரை) தண்டலை யென்பது தண்டலை நீள்நெறி யென்னுந் திருப்பதியைக் குறிக்கும். அங்கு வீற்றிருக்கும் சிவ பெருமான் திருப்பெயர் நீள்நெறி நாதர்; நின்றநெறி நாதர் எனவும் கூறுவர். அம்மையார் திருப்பெயர் ஞானாம்பிகை. 'தண்டலை நீணெறி' இப்போது 'தண்டலைச்சேரி' எனப்படுகிறது. சோழ நாட்டில் திருத்துறைப்பூண்டிப் புகைவண்டி நிலையத்துக்கு வடக்கே 2½-கல் தொலைவில் உள்ளது. அரிவாள் தாய நாயனார் இறைவனை வழிபட்ட இடம். அவர் திருப்பதியான கணமங்கலம் கிழக்கே ½-கல்லில் உளது.

சதகம்

நூறு செய்யுட்களால் உலகியலைத் தெரிவிக்கும் சிறு நூல். தண்டலை யென்னும் திருப்பதியில் எழுந்தருளிய நீணெறி நாதரைத் தலைவராகக்கொண்டு உலகியலாக வழங் கும் பழமொழிகளுக்கு விளக்கந்தரும் முறையில் எழுதப் பட்டதால், இதற்குப் பழமொழி விளக்கம் என்னும் தண் டலையார் சதகம் என்று பெயரிட்டுள்ளனர். எளிய இனிய நடையில் ஆழ்ந்த கருத்துக்களுடன் எழுதப்பெற்றுள்ளது.

நூலாசிரியர்

சிலர் படிக்காசுப் புலவர் என்கின்றனர். சிலர் சாந்த லிங்கக் கவிராயர் என்பர். வாதாவி விநாயகர்: திருப்புக லூரில் எழுந்தருளியவர். விகடசக்கர கணபதி: காஞ்சியில் உள்ளவர். ஞானநாயகி: தண்டலை நீள்நெறியில் எழுந் தருளிய அம்மையார். நவகண்டம்: (உலகின்) ஒன்பது பிரிவுகள். அவை: கீழ்பால் விதேகம், மேல்பால் விதே கம், வடபால் விதேகம், தென்பால் விதேகம், வடபால் இரேபதம், தென்பால் இரேபதம், வடபால் பரதம், தென் பால் பரதம், மத்திம கண்டம். தில்லை: ஒருவகை மரம்.

தில்லைவனம் : சிதம்பரத்தின் மற்றொரு பெயர். தில்லை மரங்கள் நிறைந்திருந்ததால் அப்பெயர் சிதம்பரத்திற்கு வந்தது. நாளடைவில் 'தில்லைவனம்' என்பது 'தில்லை' ஆயிற்று.

காப்பு—உ

வேதநெறி விளம்பியசொல் ஆகமநூல்
　　விளம்பியசொல் மிகுபு ராணம்
ஏதுவினிற் காட்டியசொல் இலக்கணச்சொல்
　　இசைந்தபொருள் எல்லாம் நாடி,
ஆதிமுதல் உலகுதனில் விளங்குபழ
　　மொழிவிளக்கம் அறிந்து பாடச்
சோதிபெறும் மதவேழ முகத்தொருவன்
　　அகத்தெனக்குத் துணைசெய் வானே.

(தொ - ரை.) வேதநெறி விளம்பியசொல் - மறைவழி கூறிய சொற்களையும், ஆகமநூல் விளம்பியசொல் - ஆகம நூல்கள் கூறிய சொற்களையும், மிகுபுராணம் ஏதுவினில் காட்டியசொல் - மிகுதியான புராணங்கள் காரணத்துடன் விளக்கிய சொற்களையும், இசைந்த பொருள் எல்லாம்நாடி - இவற்றிற் பொருந்திய பொருள்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து, உலகுதனில் ஆதிமுதல் விளங்கு பழமொழி விளக்கம் அறிந்து பாட - உலகத்தில் தொன்றுதொட்டு வழங்கிவரும் பழமொழிகளுக்கு விளக்கத்தைத் தெரிந்து பாடுவதற்கு, சோதிபெறும் மதவேழ முகத்து ஒருவன் அகத்து எனக்குத் துணைசெய்வான் - ஒளி பொருந்திய மதயானை முகத்தையுடைய ஒப்பற்ற முதல்வன் என் உள்ளத்திலிருந்து துணைசெய்வான்.

(வி - ரை.) வேதம் : நான் மறைகள். ஆகமம் : மறையின் உறுப்பாக உள்ளவை. ஏது - காரணம், ஆதாரம். வேத, ஆகம, புராணங்களிலே கூறப்பட்ட சொற்களையும் பொருள்களையும் நாடிப் பழமொழிகளுக்கு விளக்கம் கூறுவதாகக் குறிப்பிட்டார். ஒருவன் - ஒப்பற்றவன். செய்வானே : ஏ : ஈற்றசை. புராணம் - பழைமை.

அவை அடக்கம்

வள்ளுவர்நூ லாதிபல நூலிலுள
அரும்பொருளை வண்மை யாக
உள்ளபடி தெரிந்துணர்ந்த பெரியவர்கள்
முன்நானும் ஒருவன் போலப்
பள்ளமுது நீருலகிற் பரவுபழ
மொழிவிளக்கம் பரிந்து கூறல்
வெள்ளைமதி யினன்கொல்லத் தெருவதனில்
ஊசிவிற்கும் வினைய(து) ஆமே.

(தொ - ரை.) வள்ளுவர்நூல் ஆதி பலநூலில் உள அரும் பொருளை - திருக்குறள் முதலான பல நூல்களில் இருக்கும் அரிய பொருள்களை, வண்மையாக உள்ளபடி தெரிந்து உணர்ந்த பெரியவர்கள்முன் - சிறந்த முறையில் உள்ளவாறு ஆராய்ந்து அறிந்த சான்றோர்களுக்கு எதிராக, நானும் ஒருவன் போல - நானும் ஒரு புலவன் என்று எண்ணி, பள்ளமுதுநீர் உலகில் பரவு பழமொழி விளக்கம் பரிந்து கூறல் - ஆழமான பழைய நீரையுடைய உலகில் வழங்குகின்ற பழமொழிகளின் விளக்கத்தை விரும்பிக் கூறுதல், வெள்ளை மதியினன் கொல்லத் தெருவதனில் ஊசி விற்கும் வினையது ஆம் - அறிவு இல்லாதவன் கொல்லர்களின் தெருவிற்சென்று ஊசிவிற்கும் தொழிலாக ஆய்விடும்.

(வி - ரை.) முதுமை+நீர் : முதுநீர் (கடல்) கொல்லர் : இரும்புவேலை செய்யும் கம்மியர். 'கொல்லத் தெருவில் ஊசி விற்க முடியாது' என்பது பழமொழி. கொல்லத் தெருவில் ஊசி வாங்குவார் இல்லாமற் போவதுபோலப், புலவர் குழுவில் இவர் நூலை ஏற்பார் இல்லாமற் போய்விடுவர் என்பதாம். ஊசியை மதிப்பிடுதல்போல், இவர் நூலையும் மதிப்பிடுவதனாற் புலவர் உலகு இதன் சிறப்பை உணரும் என்பதும் இச் செய்யுளால் உணரலாம்.

அவை அடக்கம் என்பது புலவருலகுத் தன் நூலை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காகத் தம்மைத் தாழ்த்திக் கூறுதலாகும். அவைக்கு அடக்கம் எனப் பொருள்படும். (நான்காம் வேற்றுமைத் தொகை)

க. திருவிளக்கிட்டார் தமையே தெய்வம் அளித்திடும்

வரம்அளிக்கும் தண்டலையார் திருக்கோயில்
உட்புகுந்து வலமாய் வந்தே
ஒருவிளக்கா யினும்பசுவின் நெய்யுடன்தா
மரை நூலின் ஒளிர வைத்தால்,
கருவிளக்கும் பிறப்பும்இல்லை! இறப்பும்இல்லை!
கைலாசம் காணி ஆகும்!
திருவிளக்கிட் டார்தமையே தெய்வம்அளித்
திடும்!வினையும் தீருந் தானே!

(பொ - ரை.) வரம் அளிக்கும் தண்டலையார் திருக்கோயில் உட்புகுந்து வலமாய் வந்து - நலம் அருளும் தண்டலையிறைவரின் திருக்கோயிலின் உள்ளே சென்று, வலம் வந்து (வணங்கி), ஒருவிளக்காயினும் பசுவின் நெய்யுடன் தாமரை நூலின் ஒளிர வைத்தால் - ஒரு விளக்கேனும் ஆவின் நெய்வார்த்துத் தாமரை நூலிலே ஒளிதரும்படி வைத்தால், கருவிளக்கும் பிறப்பும் இல்லை - (மறுமுறையும்) கருவிலே துலங்கும் பிறவித்துன்பம் இல்லை, இறப்பும் இல்லை - இறுதியும் வாராது, கைலாசம் காணி ஆகும் - (இறைவன் எழுந்தருளியிருக்கும்) திருக்கயிலை உரிமையாகும். திருவிளக்கு இட்டார் தமையே தெய்வம் அளித்திடும் - திருவிளக்கு வைத்தவர்களையே தெய்வம் காப்பாற்றும், வினையும் தீரும் - பழவினையும் நீங்கும்.

(வி - ரை.) இட்டார் தமையே : தம் : சாரியை. ஏ : பிரிநிலையிடைச்சொல். திரு : உரிச்சொல். ஒருவிளக்காயினும் : உம் : இழிவு சிறப்புப் பொருளில் வந்த இடைச்சொல். தெய்வம் : இருதிணைக்கும் பொதுவான பெயர்.

(கருத்து) திருக்கோயில்களுக்குத் திருவிளக்கிடுவது நல்லது.

உ. வான்செய்த நன்றிக்கு வையகம் என் செய்யும்?

கூன்செய்த பிறையணியும் தண்டலையார்
    கருணைசெய்து, கோடி கோடி
யான்செய்த வினையகற்றி நன்மைசெய்தால்,
    உபகாரம் என்னால் உண்டோ?
ஊன்செய்த உயிர்வளரத் தவம்தானம்
    நடந்தேற உதவி யாக
வான்செய்த நன்றிக்கு வையகம்என்
    செய்யும்? அதை மறந்தி டாதே.

(நேர் - ரை.) ஊன்செய்த உயிர்வளர - இவ்வுடம்பை உண்டாக்கிய உயிர் வாழவும், தவம் தானம் நடந்து ஏற - (துறவிகளின்) தவமும் (இல்லறத்தாரின்) கொடையும் நடைபெற்று ஓங்கவும், உதவி ஆக வான்செய்த நன்றிக்கு - ஆதரவாக முகில் செய்த நன்மைக்கு, வையகம் என் செய்யும் - உலகம் என்ன (கைம்மாறு) செய்ய இயலும்? அதை மறந்திடாது - அந்த நன்றியை மறவாமல் மட்டும் இருக்கும். (அவ்வாறே), கூன்செய்த பிறை அணியும் தண்டலையார் கருணை செய்து - கூனலான பிறைமதியைச் சூடிய தண்டலையிறைவர் அருள்புரிந்து, கோடி கோடி யான் செய்த வினை அகற்றி - அளவின்றி நான் சேர்த்த வினைகளை நீக்கி, நன்மைசெய்தால் என்னால் உபகாரம் உண்டோ - நலம் அருளினால் (அதற்குப் பிரதியாக) என்னால் என்ன உதவி உண்டு? (ஒன்றும் இல்லை).

(வி - ரை.) கோடி கோடி : அடுக்குத் தொடர்; மிகுதி யென்னும் பொருள்பற்றி வந்தது. 'விசும்பின் துளிவீழின் அல்லால்மற்றாங்கே—பசும்புல் தலைகாண்பு அரிது' 'தானம் தவம் இரண்டும் தங்கா வியன் உலகம்—வானம் வழங்கா(து) எனின்' என்னும் திருக்குறள்களின் கருத்தை உட்கொண்டு 'ஊன் செய்த உயிர் வளரத் தவம் தானம் நடந்தேற உதவியாக வான்செய்த நன்றி' என்றார். 'கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்(டு)—என் ஆற்றுங் கொல்லோ உலகு' என்னும் திருக்குறளை நினைந்து, 'வான்செய்த நன்றிக்கு வையகம் என்செய்யும்?' என்றார்.

இறைவன் நமக்குச் செய்த நன்மைக்கு அதனை நினைந்து வணங்குவதன்றிக் கைம்மாறு செய்ய நம்மால் இயலாது என்பது கருத்து.

௫. இட்டபடியே

அட்டதிசை எங்கணும்போய் அலைந்தாலும்
பாதாளம் அதிற்சென் றாலும்
பட்டமென வானூடு பறந்தாலும்
என்ன? அதிற் பயன்உண் டாமோ?
பிட்டுவர மண்சுமந்த தண்டலையா
ரே! முன்னாள் பெரியோர் கையில்
இட்டபடி யேயொழிய வேறாசைப்
படின்வருவ(து) இல்லை தானே!

(தொ - ரை.) பிட்டுவர மண்சுமந்த தண்டலையாரே - பிட்டை விரும்பி மண்ணைச் சுமந்த தண்டலையிறைவரே! முன்னாள் பெரியோர் கையில் இட்டபடியே ஒழிய வேறு ஆசைப்படின் வருவது இல்லை - முற்காலத்திற் பெரியோர்களின் கையிலே கொடுத்தவாறே தவிர மற்றொருவகையாக ஆசைப்பட்டால் ஒன்றும் வராது. (ஆகையால்), அட்டதிசை எங்கணும்போய் அலைந்தாலும் - எட்டுத் திக்கினும் எங்கும் சென்று திரிந்து உழைத்தாலும், பாதாளம் அதில் சென்றாலும் - பாதாளத்திலே சென்று தேடினாலும், வானூடு பட்டம் எனப் பறந்தாலும் - வானத்திலே காற்றாடி போலப் பறந்து திரிந்தாலும், என்ன அதில் பயன்தான் உண்டோ - என்ன கிடைக்கும்? அவ்வாறு அலைவதனாற் பயனுண்டாகாது.

(வி - ரை.) தான் ஏ: அசைச்சொற்கள். உண்டாமோ?: ஓ: எதிர்மறையிடைச்சொல். இட்டபடியே: ஏ: பிரிநிலை இடைச்சொல். 'ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னோடு' என்பது பழமொழி. பிட்டுக்கு மண்சுமந்தது மதுரையில் வந்தியான ஒரு பிட்டு வாணிச்சிக்காக, சோமசுந்தரக் கடவுள் கூலியாள்போல் வந்து உதிரும் பிட்டைக் கூலியாக விரும்பிப்பெற்று மண் சுமந்தார் என்ற திருவிளையாடல் கூறும்.

பேராசைகொண்டு அலைவதாற் பயனில்லை என்பது கருத்து.

௬. நன்மைசெய்தார் நலம் பெறுவர்

தன்மமது செயல்வேண்டும்; தண்டலைநீள்
 நெறியாரே தயவு செய்வார்!
வன்மவினை செயல்வேண்டாம்; பொய்வேண்டாம்;
 பிறரையொன்றும் வருத்தல் வேண்டாம்;
கன்மநெறி வரல்வேண்டாம்; வேண்டுவது
 பலர்க்கும்உப காரம் ஆகும்;
நன்மைசெய்தார் நலம்பெறுவர்! தீமைசெய்தார்
 தீமைபெற்று நலிவர் தாமே.

(நேர் - ரை.) நன்மை செய்தார் நலம் பெறுவர் - (பிறருக்கு) நலம்புரிந்தவர் (தாமும்) நலம் அடைவர், தீமை செய்தார் தீமை பெற்று நலிவர் - (பிறருக்குத்) தீமை செய்தவர் (தாமும்) தீமை அடைந்து வருந்துவர். (ஆகையால்) வன்மவினை செயல் வேண்டாம் - (உள்ளத்திலே) வஞ்சம் வைத்திருந்து (பிறருக்குத்) தீங்கு செய்தல் கூடாது, பொய் வேண்டாம் - பொய் பேசுதல் கூடாது, பிறரை ஒன்றும் வருத்தல் வேண்டாம் - மற்றோரைத் துன்புறுத்தல் கூடாது, கன்மநெறி வரல் வேண்டாம் - தீவினையீட்டும் வழியிலே நடத்தல் கூடாது, பலர்க்கும் வேண்டுவது உபகாரம் ஆகும் - யாவருக்கும் (செய்ய) வேண்டுவது நன்றியே ஆகும். (ஆகையால்) தன்மமது செயல் வேண்டும் - அறத்தையே புரிதல் வேண்டும், (அவ்வாறு செய்தால்) தண்டலைநீள் நெறியாரே தயவு செய்வார் - தண்டலைநீள் நெறியில் எழுந்தருளிய இறைவரே அருள் புரிவார்.

(வி - ரை.) 'தினைவிதைத்தவன் தினையறுப்பான்; வினைவிதைத்தவன் வினையறுப்பான்' என்பது பழமொழி. 'தண்டலைநீள்நெறி' என்பது தண்டலை என்னும் திருப்பதியின் பெயராகும். 'வேண்டா' என்பது 'வேண்டாம்' என மருவியது.

பிறருக்கு நலமே செய்தல் வேண்டும் என்பது கருத்து.

௫. இல்லறமுந் துறவறமும்

புல்லறிவுக்(கு) எட்டாத தண்டலையார்
வளந்தழைத்த பொன்னி நாட்டில்,
சொல்லறமா தவம்புரியும் சௌபரியும்
துறவறத்தைத் துறந்து மீண்டான்!
நல்லறமாம் வள்ளுவர்போற் குடிவாழ்க்கை
மனைவியுடன் நடத்தி நின்றான்!
இல்லறமே பெரிதாகும்! துறவறமும்
பழிப்பின்றேல் எழில தாமே!

(தொ - ரை.) புல் அறிவுக்கு எட்டாத தண்டலையார் வளம் தழைத்த பொன்னி நாட்டில் - சிற்றறிவுக்கு கிட்டாத தண்டலையாரின் வளம்மிகுந்த காவிரி (பாயும் சோழ) நாட்டில், சொல்அற மா தவம் புரியும் சௌபரியும் - பேச்சின்றிப் பெருந்தவஞ் செய்த சௌபரி என்பவனும், துறவறத்தைத் துறந்து மீண்டான் - துறவறத்தை விட்டுத் திரும்பினான், வள்ளுவர்போல் மனைவியுடன் நல்லறம் ஆம் குடிவாழ்க்கை நடத்தி நின்றான் - திருவள்ளுவரைப்போல இல்லாளுடன் நல்ல அறமாகிய குடிவாழ்க்கையை இனிதே கழித்தான். (ஆகையால்), இல்அறமே பெரிது ஆகும் - மனையறமே சிறந்தது ஆகும், துறவு அறமும் பழிப்பு இன்றேல் எழிலது ஆம் - துறவறமும் (பிறரால்) பழிக்கப் படாமல் இருந்தால் அழகியதாகும்.

(வி - ரை.) எழிலது : அது : பகுதிப் பொருள் விகுதி. ஏ : ஈற்றசையிடைச் சொல்.

'அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்
பிறன் பழிப்ப(து) இல்லாயின் நன்று'

என்னும் திருக்குறளின் பொருள் இங்கு வந்துள்ளது. 'இல்லறம் அல்லது நல்லறம் அன்று' என்பதும் நினைக்கத்தக்கது.

சௌபரி : ஒரு முனிவர்; வேதமித்திரரின் மாணாக்கர். இவர் ஒருமுறை யமுனையாற்றில், தம் குஞ்சுகளினோடு உலவிய மீன்களைக் கண்டு இல்லறத்தில் விருப்புற்றுத் துறவறத்திலிருந்து திரும்பி இல்லறத்தை அடைந்தார்.

க0. கொக்கெனவே நினைத்தனையோ?

முக்கணர்தண் டலைநாட்டிற் கற்புடைமங்
கையர்மகிமை மொழியப் போமோ!
ஒக்கும்எரி குளிரவைத்தாள் ஒருத்தி! வில்வே
டனையெரித்தாள் ஒருத்தி! மூவர்
பக்கம்உற அமுதளித்தாள் ஒருத்தி! எழு
பரிதடுத்தாள் ஒருத்தி! பண்டு
'கொக்கெனவே நினைத்தனையோ? கொங்கணவா!'
என்றொருத்தி கூறி னாளே!

(தொ - ரை.) முக்கணர் தண்டலை நாட்டிற் கற்புடை மங்கையர் மகிமை மொழியப் போமோ - முக்கண்ணர் எழுந்தருளிய தண்டலை யென்னுந் திருப்பதியை உடைய நாட்டிலே கற்புடைய மாதரின் பெருமை விளம்ப முடியுமோ? ஒருத்தி ஒக்கும் எரி குளிர வைத்தாள் - ஒருத்தி (தன்னைப்) போன்ற நெருப்பைக் குளிரச்செய்தாள், ஒருத்தி வில்வேடனை எரித்தாள் - ஒருத்தி வில்லையுடைய வேடனைச் சாம்பலாக்கினாள், ஒருத்தி மூவர் பக்கம் உற அமுது அளித்தாள் - ஒருத்தி முததேவரையும் தன் பக்கத்தில் (குழந்தைகளாக) அமரச்செய்து பாலூட்டினாள், ஒருத்தி எழுபரி தடுத்தாள் - ஒருத்தி (கதிரவனுடைய) ஏழு குதிரைகளையும் தடுத்தாள், பண்டு ஒருத்தி, 'கொங்கணவா! கொக்கு எனவே நினைத்தனையோ' என்று கூறினாள் - முற்காலத்தில் ஒருத்தி, 'கொங்கணவா! (என்னையும் நீ யெரித்த) கொக்கு என்று நினைத்தாயோ?' என்று கூறினாள்.

(வி - ரை.) அச்சம் உண்டாக்குந் தோற்றமுடையோன் என்பது தோன்ற 'வில் வேடன்' என்றார்.

எரி குளிரவைத்தவள் சீதை: அநுமான் இராமன் ஆணைப்படிச் சீதையைத் தேடிச் சென்று இலங்கையிற் கண்டான். அவனை அரக்கர் பற்றிச் சென்று அவன் வாலிலே தீயிட்டனர். இதனை அறிந்த சீதை தீக்கடவுளை வேண்டி அநுமானைச் சுடாதிருக்குமாறு செய்தாள்.

வில்வேடனை எரித்தவள் தமயந்தி: *காட்டில் நளனைப் பிரிந்த தமயந்தி கலக்கமுடன் அலையும்போது ஒரு வேடன் அவளைக் கற்பழிக்க நெருங்கினான். தமயந்தி, 'சீறு விழித்தாள்! சிலை வேடன் அவ்வளவில்—நீறாய் விழுந்தான் நிலத்து!'*

மூவர் பக்கம் உறஅமுது அளித்தவள் அனுசூயை: *பிரமன் திருமால் சிவன் என்னும் முத்தேவரும் அனுசூயை கற்பைச் சோதிக்க எண்ணித் துறவிகளாக வடிவமெடுத்துச் சென்றனர். அனுசூயை அவர்களை அதிதிகளாக வரவேற்றாள். அவர்கள் தங்களுக்கு ஆடையின்றி வந்து உணவளிக்க வேண்டும் என்றனர். அவள் உடனே அவர்களைச் சிறு குழந்தைகளாக்கித் தொட்டிலில் இட்டுத் தன் ஆடைகளைக் களைந்துவிட்டுவந்து பாலூட்டினாள். அவர்கள் அவளுடைய கற்பின் திறமைக்கு வியந்தனர்.*

எழுபரி தடுத்தவள் நளாயினி: *நளன் மகளான இவள் தன் கணவரைக் கூடையில் நள்ளிரவிலே அவர் விரும்பிய தாசி வீட்டிற்குச் சுமந்து செல்கையிற் கழுவிலிருந்த மாண்டவியரின் காலிற் கூடை தட்டியது. வலிபொறுக்கமுடியாத மாண்டவியர் தன் கணவன் பணிவிடையில் உள்ள ஊக்கத்தாலே தன்னைக் கவனியாமற் சென்றாள் என்று சினந்து, 'விடிந்தவுடன் நளாயினி தன் தாலியை இழப்பாள்' எனச் சபித்தார். நளாயினி திடுக்கிட்டுப், 'பொழுது விடியாமற் போகட்டும்' என்று சபித்தாள். அவ்வாறே விடியாமற் போனதால், தேவர்கள் தலையிட்டு நளாயினியின் கணவன் இறவாவண்ணம் மாண்டவியரைக் கூறச்செய்து பொழுது விடியுமாறு நளாயினியைக் கூறச்செய்தனர்.*

'கொக்கென நினைத்தனையோ?' என்றவள் வாசுகி: *கொங்கணவன் (போகரின் மாணாக்கர் என்பர்) என்ற ஒருவன் தவம் புரிந்துகொண்டிருந்தான். நண்பகலிலே ஊருக்குட் சென்று உணவு வாங்கியுண்பது வழக்கம். ஒருநாள் அவ்வாறு செல்கையில், வழியில் ஒரு மரநிழலிலே தங்கினான். ஒரு கொக்கு மரத்திலிருந்து இவன்மேல் எச்சமிட, அவன் அதனை உறுத்துப் பார்த்தான். அக்கொக்கு உடனே எரிந்தது. தன் தவச்சிறப்பை வியந்து தற்பெருமைகொண்ட அவன் திருவள்ளுவர் வீட்டிலே உணவுக்குச் சென்றான். திருவள்ளுவர் மனைவி இவர் வாயிலில் வந்து நின்று கேட்டவுடனே வராமல் தம் கணவருக்கு உணவு படைத்தபின் உணவு கொண்டுவந்தாள். சினங்கொண்ட கொங்கணவர் அவளை உறுத்துப்பார்த்தார். அவள் நகைத்துக், '**கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா!**' என்று கூறினாள். இது ஒரு பழமொழியாக நம் நாட்டில் வழங்குகிறது. ஒழுக்கமே யாவற்றினும் உயர்ந்தது என்பது கருத்து.*

௭. பன்றி பல ஈன்றும் என்ன?

நன்றிதரும் பிள்ளைஒன்று பெற்றாலும்
குலமுழுதும் நன்மை உண்டாம்;
அன்றிஅறி(வு) இல்லாத பிள்ளைஒரு
நூறுபெற்றும் ஆவ துண்டோ?
மன்றில்நடம் புரிவாரே! தண்டலையா
ரே!சொன்னேன்! வருடந் தோறும்
பன்றிபல ஈன்றும்என்ன? குஞ்சரம்ஒன்(று)
ஈன்றதனாற் பயன்உண் டாமே!

(தொ - ரை.) மன்றில் நடம் புரிவாரே - அம்பலத்திற் கூத்தாடும் பெருமானே! தண்டலையாரே - தண்டலையில் எழுந்தருளியவரே! பன்றி வருடந்தோறும் பல ஈன்றும் என்ன - பன்றி ஒவ்வோராண்டினும் பல குட்டிகளை யீன்றாலும் பயன் என்ன? குஞ்சரம் ஒன்று ஈன்றதனால் பயன் உண்டாம் - யானை ஒரு கன்றை யீன்றாலும் மிக்க பயன் உண்டாகும். (ஆகையால்), நன்றிதரும் பிள்ளை ஒன்று பெற்றாலும் குலம் முழுதும் நன்மை உண்டாம் - நலம்தரும் ஒரு மகவைப் பெற்றாலும் மரபுக்கெல்லாம் நலம் கிடைக்கும், அன்றி - அல்லாமல், அறிவு இல்லாத பிள்ளை ஒருநூறு பெற்றும் ஆவது உண்டோ - அறிவு அற்ற நூறுபிள்ளைகளைப் பெற்றாலும் ஏதாவது நன்மையுண்டோ? (இல்லை).

(வி - ரை)

"பொற்பறி(வு)இல் லாதபல புத்திரப்பே(று) எய்தலின்நற்
கற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே—பொற்பிலாப்
பன்றிபல குட்டி பயந்ததனால் ஏதுபயன்?
ஒன்றமையா தோகரிக் கன்(று)? ஒது."

என்றும் நன்னெறியோடு இதனை ஒப்பிடுக.

அறிவே சிறப்புடையது என்பது கருத்து.

அ. நல்லது நாயகனுக்கு

அல்லமரும் குழலாளை வரகுணபாண்
டியராசர் அன்பால் ஈந்தார்!
கல்லைதனில் மென்(று) உமிழ்ந்த ஊன்அமுதைக்
கண்ணப்பர் கனிவால் ஈந்தார்!
சொல்லியதண் டலையார்க்குக் கீரையும்மா
வடுவும்ஒரு தொண்டர் ஈந்தார்!
நல்லதுகண் டாற்பெரியோர் நாயகனுக்(கு)
என்(று)அதனை நல்கு வாரே.

(தொ - ரை) அல்அமரும் குழலாளை வரகுண பாண்டிய ராசர் அன்பால் ஈந்தார்—இருள்போலும் கரிய நிறம் பொருந்திய கூந்தலையுடையவளை வரகுண பாண்டிய மன்னர் அன்புடன் அளித்தார், கல்லைதனில் மென்று உமிழ்ந்த ஊன் அமுதைக் கண்ணப்பர் கனிவால் ஈந்தார்—தேக்கிலைக்கலத்திலே மென்று உமிழ்ந்த இறைச்சியாகிய உணவைக் கண்ணப்ப நாயனார் அன்புடன் காளத்தியிறைவருக்குக் கொடுத்தார், சொல்லிய தண்டலையார்க்குக் கீரையும் மாவடுவும் ஒரு தொண்டர் ஈந்தார்—புகழ்பெறுகிற தண்டலையாருக்குச் செங்கீரையும் மாவடுவும் ஓரடியார் படைத்தார், பெரியோர் நல்லது கண்டால் அதனை நாயகனுக்கு என்று நல்குவார்—சான்றோர்கள் நல்ல பொருளைப் பார்த்தால் அது நம் இறைவனுக்காகட்டும் எனக் கொடுப்பார்கள்.

(வி - ரை) வரகுணபாண்டியர் தாம் மணந்த மனைவி அழகாயிருந்தனாற் சிவபிரானுக்கென்று படைத்தார்; அந்த அம்மையார் சிவலிங்கத்தில் மறைந்தார். ஆனால், இவர் பற்றிய கைமட்டும் மறையாதிருந்தது. வரகுணர் வருந்திச் சிவபிரானை வேண்ட அக்கையும் மறைந்தது. வேடரான திண்ணனார் காளத்தியப்பரைக் கண்டவுடன் தம்மை மறந்து, தாயினும் அன்புடையராய்க், கானவிலங்குகளின் ஊனை நெருப்பில் வதக்கி வாயிலிட்டுச் சுவை பார்த்துக் கல்லையில் வைத்துக்கொண்டுவந்து ஊட்டினார்.

கணமங்கையில் வாழ்ந்த அரிவாள்தாய நாயனர் தண்டலை இறைவர்க்குச் செங்கீரையும் மாவடுவும் (தாம் உணவின்றி யிளைத்த போது கூட) படைத்துப் பரன் அருள்பெற்றார்.

நல்ல பொருளை இறைவனுக்கு அளிப்பர் என்பது கருத்து.

௯. விருந்தில்லாது உணும் சோறு மருந்து

திருவிருந்த தண்டலையார் வளநாட்டில்
இல்வாழ்க்கை செலுத்தும் நல்லோர்
ஒருவிருந்தா யினுமின்றி உண்டபகல்
பகலாமோ? உறவாய் வந்த
பெருவிருந்துக்(கு) உபசாரம் செய்தனுப்பி
இன்னுமெங்கே பெரியோர் என்று
வருவிருந்தோ(டு) உண்பதல்லால் விருந்தில்லா(து)
உணுஞ்சோறு மருந்து தானே?

(நொ - ரை.) திரு இருந்த தண்டலையார் வளநாட்டில் இல்வாழ்க்கை செலுத்தும் நல்லோர்—செல்வம் தங்கிய தண்டலைத் திருநகர் உள்ள செழித்த நாட்டினில் இல்லறம் நடத்தும் பெரியோர்கள், ஒரு விருந்து ஆயினும் இன்றி உண்ட பகல் பகலாமோ — ஒரு விருந்ினரேனும் இல்லாமல் உணவுகொண்ட நாள் (ஒரு) நாளாகுமோ, உறவாய் வந்த பெரு விருந்துக்கு உபசாரம் செய்து அனுப்பி—நட்புடன் வந்த பெரிய விருந்தினருக்கு முதலில் உணவளித்துக் களைப்பாற்றிப் பேசி விடுத்த பின்னர், இன்னும் பெரியோர் எங்கே என்று—மேலும் வரக்கூடிய சான்றோர்கள் எங்கே என்று, வருவிருந்தோடு உண்பது அல்லால்—வரும் விருந்தினருடன் உண்பது அன்றி, விருந்து இல்லாது உணும் சோறு மருந்து தானே—விருந்தினர் இல்லாமல் உண்பது மருந்து போலத் தான் (கசப்பாக) இருக்கும்.

(வி - ரை) 'செல்விருந்[து] ஓம்பி வருவிருந்து பார்த்திருப் பான் நல் விருந்து வானத்தவர்க்கு'—என்பது திருக்குறள். 'மருந்தே யாயினும் விருந்தோடுண்' என்றும் பெரியோர் கூறுவர்.

'விருந்தில்லாத சோறு மருந்து' என்பது கருத்து.

௧௦. சர்க்கரைப் பந்தலிலே தேன்மாரி

பொற்குடையும் பொற்றுகிலும் பொற்பணியும்
　　கொடுப்ப(து)என்ன பொருளோ? என்று
நற்கமல முகம்மலர்ந்தே உபசாரம்
　　மிக்கஇன்சொல் நடத்தல் நன்றே;
கற்கரையும் மொழிபாகர் தண்டலையார்
　　வளநாட்டிற் கரும்பின் வேய்ந்த
சர்க்கரையின் பந்தலிலே தேன்மாரி
　　பொழிந்துவிடும் தன்மை தானே!

(தொ - ரை) கல் கரையும் மொழி பாகர் தண்டலையார் வளநாட்டில்—கல்லும் கரையும் இனிய மொழியை யுடைய உமையம்மையாரை இடப்பாகத்திலுள்ள தண்டலையிறைவரின் வளம்பொருந்திய நாட்டிலே, பொன் குடையும் பொன் துகிலும் பொன் பணியும் கொடுப்பது என்ன பொருளோ—பொன்னாலான குடையும் ஆடையும் அணிகலன்களும் கொடுப்பது என்ன சிறப்புடையதோ? என்று—என அறிந்து, நல் கமலம் முகம் மலர்ந்தே உபசாரம் மிக்க இன்சொல் நடத்தல் நன்றே — அழகிய தாமரைமலரென முகத்திலே மலர்ச்சியுடன் ஆதரித்து மிகுந்த இனிய மொழி கூறுதலே நல்லது, (அவ்வாறு செய்வது) கரும்பின் வேய்ந்த சர்க்கரையின் பந்தலிலே தேன்மாரி பொழிந்துவிடும் தன்மை—கரும்பினுல் ஆக்கப்பட்ட சர்க்கரைப்பந்தலிலே தேன்மழை பொழிந்துவிடுவதுபோல ஆகும்.

(வி - ரை) தான் ஏ: அசை நிலைகள். 'சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தாற் போல.' என்பது பழமொழி. கமல முகம்: கமலம்: பொருளாகு பெயர்.

இனிய மொழியில்லாத கொடை பயனளிக்காது என்பது கருத்து.

௧௧. எறும்பு எண்ணாயிரம்!

குறும்(பு)எண்ணு(து) உயர்ந்தநல்லோர் ஆயிரஞ்
 சொன்னாலும்அதைக் குறிக்கொளாமல்
வெறும்பெண்ணா சையிற்சுழல்வேன் மெய்ஞ்ஞானம்
 பொருந்தியுனை வேண்டேன்! அந்தோ!
உறும்பெண்ணர் அமுதிடம்சேர் தண்டலைநீள்
 நெறியே!என் உண்மை தேரில்
'எறும்பெண்ணா யிரம்அப்பா! கழுதையும்கை
 கடந்த(து)எனும் எண்ணம் தானே!

(தொ - ரை) உறும் பெண்ணர் அமுது இடம் சேர் தண்டலை நீள் நெறியே—சிறந்த பெண்களின் அமுது ஆகிய உமையம்மையார் இடப்பக்கத்தில் உள்ள தண்டலை நீள்நெறி நாதரே! உயர்ந்த நல்லோர் குறும்பு எண்ணாது ஆயிரம் சொன்னாலும்—சிறந்த நற்பண்புடையோர் குறும்பாக நினையாமல் ஆயிரம் கூறினாலும், அதைக் குறிக் கொளாமல்—அவர்கள் கூறுவதை மனத்திற் கொள்ளாமல், வெறும் பெண் ஆசையில் சுழல்வேன்—வீணே பெண்ணின் காமத்தால் அலைவேன், உனை மெய்ஞ்ஞானம் பொருந்தி வேண்டேன்—உன்னை உண்மையறிவுடன் வழிப்படேன், அந்தோ—, என் உண்மை தேரில்—என் உண்மையான நிலையை ஆராய்ந்தால், அப்பா! எறும்பு எண்ணாயிரம்; கழுதையும் கைகடந்தது எனும் எண்ணந் தான்—அப்பா எறும்பு எண்ணாயிரம்; கழுதையும் போய் விட்டது என்போனுடைய எண்ணம் போன்றதே.

(வி - ரை) பெண்ணர் அமுது—பெண்களிற் சிறந்தவர். 'பெண்ணின் நல்லாள்' என்று குறிப்பதுங் காண்க. கழுதையைப் பார்த்துக்கொண்டிருப்போன் எறும்பை எண்ணிக்கொண்டிருந்து கழுதையை விட்டுவிட்டாற்போலப் பெண்ணாசையிலே உள்ளத்தைச் செலுத்தி, இறைவரை வழிபடுவதைக் கைநெகிழ விட்டதாக வருந்துகிறார். 'எறும்பெண்ணாயிரம் அப்பால் கழுதையும் கைகடந்த தென்றோன் எண்ணந்தானே' என்றும் பாடம்.

எவ்வகையினும் நம் வேலையே குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும் என்பது கருத்து.

க௨. தினையளவு பனையளவாகும்!

துப்பிட்ட ஆலம்விதை சிறிதெனினும்
பெரிதாகும் தோற்றம் போலச்
செப்பிட்ட தினையளவு செய்த நன்றி
பனையளவாய்ச் சிறந்து தோன்றும்!
கொப்பிட்ட உமைபாகர் தண்டலையார்
வளநாட்டிற் கொஞ்ச மேனும்
உப்பிட்ட பேர்கள்தமை உளவரையும்
நினைக்கும் இந்த உலகந் தானே!

(தொ-ரை.) கொப்பு இட்ட உமைபாகர் தண்டலையார் வளநாட்டில் - கொப்பு எனும் காதணியை அணிந்த உமையம்மையை இடப்பாகத்திற்கொண்ட தண்டலையிறைவரின் வளம் பொருந்திய நாட்டில், துப்பிட்ட ஆலம்வித்து சிறிது எனினும் பெரிது ஆகும் தோற்றம்போல - துப்பிவிட்ட ஆலம்வித்து சிறியதாயினும் பெரியமரம் ஆகும் காட்சியைப் போல, செப்பிட்ட தினை அளவு செய்த நன்றி பனை அளவாய்ச் சிறந்து தோன்றும் - கூறப்பட்ட தினையின் அளவாகச் செய்த நன்மை (ஏற்கும் இடத்தால்) பனையின் அளவாகச் சிறப்புடன் காணப்படும். இந்த உலகம் கொஞ்சமேனும் உப்பிட்ட பேர்கள்தமை உளவரையும் நினைக்கும் - இந்த உலகம் சிறிதளவாக உப்பு இட்டவரையும் உயிருள்ளவரையும் நினைத்துப் பார்க்கும்.

(வி-ரை.) கொப்பு - ஒரு காதணி. 'துப்பிவிட்ட' என்பது 'துப்பிட்ட' என வந்தது செய்யுள் (தொகுத்தல்) விகாரம். செப்பு: சொல்; (தொல்காப்பியத்தில்) விடை என்னும் பொருளில் வந்துள்ளதால் இது தெலுங்கன்று, உலகம்: இடவாகு பெயர்.

'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்'

என்பது திருக்குறள். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது பழமொழி.

கரு. காட்டுக்கே யெறித்த நிலா!

மேட்டுக்கே விதைத்த விதை, வீணருக்கே
செய்த நன்றி, மேயும் பட்டி
மாட்டுக்கே கொடுத்தவிலை, பரத்தையர்க்கே
தேடியிட்ட வண்மை யெல்லாம்
பாட்டுக்கே அருள்புரியும் தண்டலையார்
வீதிதொறும் பரப்பி டாமல்
காட்டுக்கே யெறித்தநிலா, கானலுக்கே
பெய்தமழை கடுக்குந் தானே

(நோ - ரை.) மேட்டுக்கே விதைத்த விதை - மேட்டிலே தூவிய விதையும், வீணருக்கே செய்த நன்றி - சோம்பேறிகட்குச் செய்த நன்மையும், மேயும் பட்டி மாட்டுக்கே கொடுத்தவிலை - (பயிரையெலாம்) மேய்கின்ற கட்டுக் கடங்காத மாட்டுக் குக் கொடுத்த விலையும், பரத்தையர்க்கே தேடியிட்ட வண்மை - விலைமாதருக்கு உழைத்துக் கொடுத்த கொடையும் (செல்வமும் எனவும் கூறலாம்), எல்லாம் - ஆகிய இவைகள் யாவும், காட்டுக்கே எறித்த நிலா - காட்டிலே (ஒருவருக்கும் பயனின்றிப்) பரப்பிய நிலாவையும், கானலுக்கே பெய்த மழை - கடற்கரையிலே பெய்த மழையையும், கடுக்கும் - ஒக்கும்.

(வி - ரை.) மேட்டில் விதைத்த விதை மழை பெய்தாலும் நீர் பாய்ச்சினாலும் பள்ளத்தில் சென்று விழுந்துவிடும். கட்டுக் கடங்காத மாட்டைப் பட்டி மாடு என்பது வழக்கம். 'காட்டுக்கு எறித்த நிலவும் கானலுக்குப் பெய்த மழையும்' என்பது பழமொழி.

கசு. கங்கையிலே படர்ந்தாலும்....

சங்கையறப் படித்தாலும் கேட்டாலும்
பிறர்க்(கு)உறுதி தனைச்சொன்னாலும்
அங்கண் உலகினிற் சிறியோர் தாமடங்கி
நடந்துகதி அடைய மாட்டார்!

திங்கள் அணி சடையாரே! தண்டலையா
ரே! சொன்னேன் சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச் சுரைக்காய்
நல்லசுரைக் காயா காதே!

(தொ - ரை.) திங்கள் அணி சடையாரே - பிறை முடித்த சடையாரே, தண்டலையாரே - தண்டலையின் எழுந்தருளியவரே! அம்கண் உலகில் சிறியோர் சங்கை அறப்படித்தாலும் கேட்டாலும் பிறர்க்கு உறுதிதனைச் சொன்னாலும் - அழகிய இடத்தையுடைய உலகத்தில் அற்பர்கள் ஐயம் இன்றிப் படித்தாலும் பெரியோர் சொல் வதைக் கேட்டாலும் மற்றவர்களுக்கு நலம் உரைத்தாலும், தாம் அடங்கி நடந்து கதி அடையமாட்டார் - தாங்கள் மட்டும் அடக்கமாக நடந்து நல்லகதி சேரமாட்டார்கள். கங்கையிலே பேய்ச்சுரைக்காய் சிறிது காலம் படர்ந் தாலும் நல்ல சுரைக்காய் ஆகாது - கங்கைக்கரையிலே பேய்ச்சுரைக்காய் கொஞ்சகாலம் படர்ந்தாலும் (கங்கை நீரில் வளர்ந்ததால்) இனிய சுரைக்காய் ஆகாது.

(வி - ரை.) சொன்னேன்: தன்மை அசைச்சொல் 'மறைக்கு மாங் கண்டீா மரம்' என்புழிக் 'கண்டீர்' என்பது முன்னிலை அசைச் சொல் ஆயினாற் போல இதனையும் கொள்க. பேய்ச்சுரை இயல் பாகக் கசக்குந் தன்மையுடையது. தன்னிடம் முழுகுவோரைத் தூய்மைப்படுத்தும் கங்கைநீர்க்குப் பேய்ச்சுரையின் கசப்பை நீக்கும் ஆற்றல் இல்லாமற் போனாற்போல, அறிவையூட்டும் கல்வி யாலும் கேள்வியாலும் பிறர்க்குக் கூறுவதனாலும் மட்டும் இயற்கை யிலே உள்ள தீயபண்பு விலகாது

"கற்பூரப் பாத்திகட்டிக் கத்தூரியெருப் போட்டுக் கமழ்நீர் பாய்ச்சிப் - பொற்பூர உள்ளிதனை விதைத்தாலும் அதன் குணத் தைப் பொருந்தக் காட்டும்"—விவேக சிந்தாமணி.

கரு. மழைவிட்டும் தூவானம் விட்டதில்லை

உழையிட்ட விழிமடவார் உறவுவிட்டும்
வெகுளிவிட்டும் உலக வாழ்விற்
பிழைவிட்டும் இன்னம்இன்னம் ஆசைவிடா(து)
அலக்கழியப் பெற்றேன்! அந்தோ!

தழையிட்ட கொன்றைபுனை தண்டலைநீள்
நெறியே ! என் தன்மை யெல்லாம்
மழைவிட்டும் தூவானம் விட்டதில்லை
யாய் இருந்த வண்மை தானே,

(தொ - ரை.) தழையிட்ட கொன்றைபுனை தண்டலை நீள் நெறியே - செழிப்புடை கொன்றை மலர் அணிந்த, தண்டலையில் எழுந்தருளிய நீள்நெறி நாதரே! உழை இட்ட விழி மடவார் உறவுவிட்டும் - மானின் கண்களைப் போன்ற கண்களையுடைய பெண்களின் நட்பைவிட்டும், வெகுளிவிட்டும் - சீற்றத்தை மாற்றிக்கொண்டும், உலக வாழ்விற் பிழைவிட்டும் - உலகவாழ்க்கையில் நேரும் பிழைகளைத் திருத்திக்கொண்டும், இன்னம் இன்னம் ஆசைவிடாது - மேலும் மேலும் பற்றுவிடாமல், அலக்கழியப் பெற்றேன் - துன்பப் படுகிறேன். அந்தோ - ஐயோ ! என் தன்மை யெல்லாம் - என்னுடைய இயற்கை யெல்லாம், மழைவிட்டும் தூவானம் விட்டது இல்லையாய் - மழை விலகியும், தூவானம் விடாமல், இருந்த வண்ணம் தான் - இருந்த அழகுதான்.

(வி - ரை.) தூவானம்: மழைபெய்தவிட்ட பிறகும் இருக்கும் சிறு தூறல். 'மழைவிட்டும் தூவானம் விடவில்லை' என்பது பழமொழி.

கசு. துர்ச்சனப் பிள்ளைக்கு....

கொச்சையிற்பிள் ளைக்குதவும் தண்டலையார்
வளநாட்டிற் கொடிதாய் வந்த
வச்சிரப்பிள் ளைக்குமுனம் மாதவனே
புத்தி சொன்னான் ! வகையும் சொன்னான் !
அச்சுதப்பிள் ளைக்கும்அந்த ஆண்டவரே
புத்தி சொன்னார் ! ஆத லாலே
துர்ச்சனப்பிள் ளைக்(கு) ஊரார் புத்திசொல்லு
வார் என்றே சொல்லு வாரே !

(தொ - ரை.) கொச்சையில் பிள்ளைக்கு உதவும் தண்டலையார் வள நாட்டில் - சீகாழியில் தோன்றியருளிய திருஞானசம்பந்தருக்கு அருள்புரிந்த தண்டலையிறைவரின் செழிப்புமிக்க நாட்டிலே, முனம் வச்சிரப்பிள்ளைக்கு மாதவனே புத்தி சொன்னான் - முற்காலத்தில் வச்சிரப்படையேந்திய இந்திரனுக்குப் பெருந்தவமுடைய துருவாசனே அறிவு புகட்டினான், வகையும் சொன்னான் - நடந்துகொள்ளும் முறையையும் கூறினான், அச்சுதப்பிள்ளைக்கும் அந்த ஆண்டவரே புத்தி சொன்னார் - திருமாலுக்கும் தண்டலையாராகிய இறைவரே அறிவூட்டினார், ஆதலால் - ஆகையால், துர்ச்சனப் பிள்ளைக்கு ஊரார் புத்தி சொல்லுவார் என்றே சொல்லுவார் - தீய நெறியிலே செல்லும் பிள்ளைக்கு ஊரார் அறிவு புகட்டுவார் என்று அறிவுடையோர் கூறுவார்கள்.

(வி - ரை) இந்திரன் பல முனிவர்களால் திருந்தியிருக்கிறான் இந்நூலாசிரியர் சைவராகையால், இக் கதையெடுத்துக் காட்டப்பட்டது. இந்திரன் ஒருமுறை துர்வாசர் கொடுத்த சிவநிர்மாலியமான மாலையை யானைமீதிருந்தவாறு அங்குசத்தால் ஏற்று யானையின் தலைமீது வைத்தான். அது அம் மாலையை உடனே தன் துதிக்கையால் எடுத்துக் காலில் இட்டு மிதித்தது. அதனைக் கண்ட துர்வாசர் சினந்து இந்திரன் தன் பதவியிழக்கவும், வெள்ளானை காட்டானையாகவும் சபித்தார். அவரே மதுரையிற் சொக்கநாதரை வழிபட்டால் சாபம் நீங்குமெனஅவனுக்கு வகையுங் கூறினார். இது வச்சிரப் பிள்ளைக்குமாதவன் புத்தி கூறியது. திருமால் எடுத்த பத்துப் பிறப்புக்களில் மீன், வராகம், ஆமை, நரசிங்கம், வாமனம் எனும் ஐந்தினும் அவர் கொண்ட செருக்கைச் சிவபிரான் அடக்கினார் என்பது அச்சுதப் பிள்ளைக்கு ஆண்டவன் புத்தி சொன்னது ஆகும். '**வீட்டில் அடங்காத பிள்ளை ஊரில் அடங்கிவிடும்**' என்பது பழமொழி.

௧௭. பொறுத்தவரே அரசாள்வார்!

கறுத்தவிடம் உண்டருளும் தண்டலையார்
வளநாட்டிற் கடிய தீயோர்
குறித்துமனை யாளரையில் துகிலுரிந்தும்
ஐவர்மனம் கோபித் தாரோ?

பறித்துரிய பொருள்முழுதும் கவர்ந்தாலும்
அடித்தாலும் பழிசெய் தாலும்
பொறுத்தவரே அரசாள்வார்! பொங்கினவர்
காடாளப் போவார் தாமே.

(பொ - ரை) கறுத்த விடம் உண்டு அருளும் தண்டலையார் வளநாட்டில் - கரிய நஞ்சினையுண்டு உலகினுக் கருளிய தண்டலையிறைவர் செழித்த நாட்டிலே, மனையாள் அரையில் துகில் கடிய தீயோர் குறித்து உரிந்தும் - தங்கள் மனைவியான துரௌபதியின் இடையிலிருந்த ஆடையை மிகவும் கொடியரான கவுரவர் (இழிவு செய்ய) நினைத்து அவிழ்த்த காலத்திலும், ஐவர் மனம் கோபித்தாரோ - பாண்டவர்கள் மனத்திலே சீற்றங் கொண்டனரோ? (ஆகையால்) உரிய பொருள் முழுதும் பறித்துக் கவர்ந்தாலும் அடித்தாலும் பழி செய்தாலும் - (தமக்கு) உரிமையான எல்லாப்பொருளையும் வலிதில் எடுத்துக் கொண்டாலும் அடித்தாலும் இழிவு செய்தாலும், பொறுத்தவரே அரசு ஆள்வர் பொங்கினவர் காடு ஆளப் போவர் - பொறுத்துக்கொண்டவரே உலகு காப்பர்; மனம் பொறாதவர் காட்டைக் காக்கச் செல்வர்.

(வி - ரை.) 'பொறுத்தவர் பூமியாள்வார்; பொங்கினவர் காடாள்வார்' என்பது பழமொழி. தாம் ஏ: ஈற்றசைகள். 'காடுறைந்து' என்றும் பாடம்.

கரு. பிள்ளைப் பெற்றார்தமைப் பார்த்து....

அள்ளித்தெண் ணீறணியும் தண்டலையார்
வளநாட்டில் ஆண்மை யுள்ளோர்,
விள்ளுற்ற கல்வியுள்ளோர், செல்வமுள்ளோர்,
அழகுடையோர் மேன்மை நோக்கி,
உள்ளத்தில் அழன்றழன்று நமக்கில்லை
எனவுரைத்திங்(கு) உழல்வார் எல்லாம்
பிள்ளைப்பெற் றவர்தமைப் பார்த்(து) இருந்து பெரு
மூச்செறியும் பெற்றி யாரே.

(தொ - ரை.) தெள் நீறு அள்ளி அணியும் தண்டலை யார் வளநாட்டில் - தூய திருநீற்றை எடுத்து அணிகின்ற தண்டலையிறைவரின் வளமுடைய நாட்டில், ஆண்மை உள்ளோர் - வீரம் உடையோர், விள்ளுற்ற கல்வி உள்ளோர் - விளக்கிக் கூறப்படும் கல்வி கற்றோர், செல்வம் உள்ளோர் - செல்வம் உடையோர், அழகு உடையோர் - வனப்புள்ளவர் (ஆகியவரின்), மேன்மை நோக்கி - உயர்வை பார்த்து, நமக்கு இல்லை என உள்ளத்தில் அழன்று இங்கு உழல்வார் எல்லாம் - நமக்குக் கிடைக்கவில்லையே என்று மனத்தில் வெதும்பி வெதும்பித் திரிபவர்கள் எல்லோரும், பிள்ளை பெற்றவர்தமைப் பார்த்து - பிள்ளை பெற்றவர்களை நோக்கி, இருந்து பெருமூச்சு எறியும் பெற்றியார் - அமர்ந்து பெருமூச்சு விடும் தன்மையுள்ளவர்.

(வி - ரை.) ஏ: ஈற்றசை. அழன்றழன்று: அடுக்குத் தொடர். தெண்ணீறு அணிவதை வளநாட்டிற்குக் கூட்டுவது சிறப்பு. பொறுமை: பிறர் செயும் இடையூற்றைத் தாங்கி மன்னிப்பது. பொருமை: பிறர் ஆக்கம் கண்டு மனம் வெதும்புதல். பொறுமைக்குப் பொருமை எதிர்மறை அன்று.

௧௨. எண்ணமெல்லாம் பொய்யாகும்!

மண்ணுலகா ளவும்நினைப்பார், பிறர்பொருள்மேல்
ஆசை வைப்பார், வலிமை செய்வார்,
புண்ணியம்என் பதைச்செய்யார், கடைமுறையில்
அலக்கழிந்து புரண்டே போவார்;
பண்ணுலவு மொழிபாகர் தண்டலையார்
வகுத்தவிதிப் படியல் லாமல்
எண்ணமெல்லாம் பொய்யாகும்! மௌனமே
மெய்யாகும் இயற்கைதானே!

(தொ - ரை.) பண் உலவும் மொழி பாகர் தண்டலையார் வகுத்த விதிப்படி அல்லாமல் - பண்ணென இனிக்கும் மொழியை உடைய உமையம்மையாரை இடப் பங்கிற்

கொண்டவரான தண்டலையிறைவர் பங்கிட்டளித்த கட்டளையின் வண்ணமே நடக்கும் அன்றி, எண்ணம் எல்லாம் பொய் ஆகும் - நினைத்தவை யாவும் நடவாமற் போகும், மௌனமே மெய் ஆகும் இயற்கை - (சிவன் அருளை நினைத்துப்) பேசாதிருப்பதே நலந்தருந் தன்மையுடையது. (ஆகையால்) மண் உலகு ஆளவும நினைப்பார் - நிலவுலகை ஆள நினைப்பவரும், பிறர் பொருள்மேல் ஆசை வைப்பார் - மற்றவர் பொருளுக்கு ஆசைப்படுவோரும், வலிமை செய்வார் - தங்கள் ஆற்றலாற் (பிறர்க்குக் கேடு) செய்வோரும், புண்ணியம் என்பதைச் செய்யார் - சிறிதும் நன்மை செய்யாதவரும், கடைமுறையில் அலக்கழிந்து புரண்டே போவார் - இறுதியிற் கலக்கமுற்றுக் கெட்டழிவார்கள்.

(வி - ரை.) அவரவர் செய்யும் வினைக்கேற்பப் பயன்களை இறைவர் கூட்டுவார். ஆகையால், நாம் நினைத்தவாறே எதுவும் முடியாமல் நம் வினையின் பயனை நோக்கி இறைவர் கூட்டியவாறே முடியும். 'எண்ணமெல்லாம் பொய்! எழுத்தின்படி மெய்' என்பது பழமொழி. பேராசைகொண்டு பிறர்க்குக் கேடு செய்யலாகாது என்பது கருத்து.

உ0. சொன்னத்தைச் சொல்லும் இளங்கிள்ளை

சொன்னத்தைச் சொல்லும் இளங் கிள்ளையென்பார்
    தண்டலையார் தொண்டு பேணி
இன்னத்துக்(கு) இன்னதெனும் பகுத்தறிவொன்(று)
    இல்லாத ஈனர் எல்லாம்
தன்னெறித்துக் கண்டவுடன் காணுமல்
    முறைபேசிச் சாடை பேசி
முன்னுக்கொன் றுயிருந்து பின்னுக்கொன்
    றுய்நடந்து மொழிவர் தாமே.

(நேர் - ரை.) இளங்கிள்ளை சொன்னத்தைச் சொல்லும் என்பார் - இளங்கிளி நாம் சொன்னதே சொல்லும் என்று கூறுவார்கள். (அவ்வாறு) தண்டலையார் தொண்டு

பேணி இன்னத்துக்கு இன்னது எனும் பகுத்தறிவு ஒன்று இல்லாத ஈனர் எல்லாம் - தண்டலையிறைவருக்குத் தொண்டு புரிய விரும்பி இதற்கு இது என்று அறியும் பகுத்தறிவு சிறிதும் பெறாத இழிந்தோர் யாவரும், தன் ஒத்துக் கண்டவுடன் முறைபேசி - தன்னை நேரே பார்த்தவுடன் தகுதிப்படி உரையாடி, காணாமல் சாடை பேசி - காணாத போது குறிப்பாக (இகழ்ந்து கூறி, இவ்வாறு), முன்னுக்கு ஒன்றாய் இருந்து - எதிரில் ஒருவாறு நடந்துகொண்டும், பின்னுக்கு ஒன்றாய் நடந்து - காணாதபோது ஒருவாறு நடந்துகொண்டும், மொழிவர் - (அவ்வாறே முன்னுக்குப் பின் வேறாக) உரைப்பதுஞ் செய்வார்கள்.

(வி - ரை.) தண்டலையார் தொண்டுபேணிப் பகுத்தறிவு பெறாத ஈனர் (தொண்டு பேணுவதனாற் பகுத்தறிவு பெறலாம்)— சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போன்றவர்கள் என்றும், அத்தகையோர் ஒருவரைக் கண்டால் ஒன்றும், காணாதபோது ஒன்றுமாகப் பேசியும் நடந்தும் வருவார்கள் என்றும் கொள்க. 'சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை' என்பது பழமொழி. 'முறை பேசிச் சாடை பேசி' 'முன்னுக் கொன்றாய் இருந்து பின்னுக் கொன்றாய் நடந்து மொழிவர்' என்பன மரபு மொழிகள். தாம் ஏ : ஈற்றசைகள்.

உக. விடியல்மட்டும் மழைபெயினும்........

கொடியருக்கு நல்லபுத்தி சொன்னாலும்
தெரியாது! கொடையில் லாத
மடையருக்கு மதுரகவி உரைத்தாலும்
அவர்கொடுக்க மாட்டார் கண்டீர்!
படியளக்கும் தண்டலைநீள் நெறியாரே!
உலகமெலாம் பரவி மூடி
விடியல்மட்டும் மழைபெயினும் அதின்ஓட்டாங்
குச்சில்முளை விசி டாதே!

(தொ - ரை) படி அளக்கும் தண்டலைநீள் நெறியாரே - உயிர்களுக்குத் தக்க பயனை ஊட்டும் தண்டலையில் எழுந்தருளிய நீள்நெறியாரே! உலகம் எலாம் பரவி

மூடி விடியல் மட்டும் மழை பெயினும் - உலகெங்கும் படர்ந்து கவிந்து காலைவரையில் மழை பெய்தாலும், அதின் ஓட்டாங்குச்சில் முளை விசிடாது - அதனால், ஓட்டாங்குச்சில் முளைக்காது. (ஆகையால்), கொடியருக்கு நல்லபுத்தி சொன்னாலும் தெரியாது - தீயோருக்கு நல்லறிவு கூறினாலும் விளங்காது. கொடையில்லாத மடையருக்கு மதுரகவி உரைத்தாலும் - ஈகைப்பண்பு அற்ற பேதையருக்கு இனிய பாவைப் பகர்ந்தாலும், அவர் கொடுக்கமாட்டார் - அப் பேதையர் ஒன்றும் ஈயமாட்டார்.

(வி - ரை.) படி அளத்தல் : ஊழ்வினைக்கு ஏற்றவாறு பயனை நுகர்வித்தல். கண்டீர் : முன்னிலை அசைச்சொல். 'ஓட்டாங் குச்சில் முளைக்காது' என்பது மரபு மொழி. 'ஓட்டாங் கிளிஞ்சில்' என்றும் பாடம். (ஓட்டாங் கிளிஞ்சில் - ஓட்டைப்போன்ற கிளிஞ்சில்) 'கோடிறும் பேதையும் கொண்டது விடா' என்பது பழமொழி.

உஉ. தன்பாவம் தன்னோடு

செங்காவி மலர்த்தடஞ்சூழ் தண்டலைநீள்
நெறியே! நின் செயலுண் டாகில்
எங்காகில் என்ன? அவர் எண்ணியதெல்
லாம் முடியும்! இல்லை யாகில்,
பொங்காழி சூழுலகில் உள்ளங்கால்
வெள்ளெலும்பாய்ப் போக ஓடி
ஐங்காதம் போனாலும் தன்பாவம்
தன்னுடனே ஆகும் தானே.

(தொ - ரை) செங்காவி மலர்த்தடஞ்சூழ் தண்டலை நீள் நெறியே - சிவந்த குவளைமலர்களையுடைய பொய்கைகள் சூழ்ந்த தண்டலைநீள் நெறியில் எழுந்தருளியவரே! நின்செயல் உண்டாகில் - அடிகளின் நல்ல அருள் கிடைத்தால், எங்குஆகில் என்ன அவர் எண்ணியது எல்லாம் முடியும் - எவ்விடமாயினும் என்ன? அவர்கள் நினைத்தது முற்றும் முற்றுப்பெறும். இல்லை ஆகில் - அடிகளின்

அருள் கிடையாவிட்டால், பொங்கு ஆழிசூழ் உலகில் - நீர் மிகுந்த கடல்சூழ்ந்த உலகத்தில், உள்ளங்கால் வெள்ளெலும்பாய்ப் போக - உள்ளங்காலில் (தசை தேய்ந்து) வெள்ளை எலும்பு தெரியும்படியாக, ஐங்காதம் ஓடிப்போனாலும் தன் பாவம் தன் உடனே ஆகும் - ஐந்துகாத தொலைவு விரைவாகப்போய் அலைவுற்றாலும் தான் செய்த தீவினை தன்னுடனேயே இருக்கும்.

(வி - ரை.) குவளையிற் செங்குவளை கருங்குவளையென இருவகை உள. இறைவன் செயல் நம் ஊழ்வினைக்கு ஏற்றவாறே அமையும். ஆகையால், 'நின்செயல் உண்டாகில் எண்ணிய எல்லாம் முடியும்' என்பதற்கு, 'நின் அருள் நல்வினையின் விளைவாகக் கிடைத்தால் எண்ணிய யாவும் முடியும்' எனப்பொருள் உரைத்துக் கொள்க. 'உள்ளங்கால் வெள்ளெலும்பாய்ப் போக' என்பது மரபுமொழி 'ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னுடனே' என்பது பழமொழி

பேராசை வேண்டாம்; அமைதி வேண்டும்என்பன கருத்து.

௨௫. நாய் அறியாது........

தாயறிவாள் மகளருமை! தண்டலைநீள்
நெறிநாதர் தாமே தந்தை
ஆயறிவார் எமதருமை! பரவையிடம்
தூதுசென்ற(து) அறிந்திடாரோ?
பேயறிவார் முழுமூடர்! தமிழருமை
அறிவாரோ? பேசு வாரோ?
நாயறியா(து) ஒருசந்திச் சட்டிப்பா
னையின்அந்த நியாயந் தானே!

(தெ - ரை.) மகள் அருமை தாய் அறிவாள் - தன் மகளின் அருமையைத் தாயே அறிவாள். எமது அருமை தண்டலை நீள்நெறிநாதர் தாமே தந்தையாய் அறிவார் - (அடியரான) எங்கள் அருமையைத் தண்டலைநீள்நெறி இறைவரே தந்தையாகி அறிவார். பரவையிடம் தூது சென்றது அறிந்திடாரோ - சிவபெருமான் (தம் அடியவரான சுந்தரர் வேண்டுகோளின் வண்ணம்) பரவையம்மை

யாரிடம் தூது நடந்ததை உலகினர் அறியமாட்டாரோ? முழுமூடர் பேய் அறிவார் - முற்றிலும் பேதையர் பேய்த் தன்மையையே அறிவார். தமிழ் அருமை அறிவாரோ - தமிழின் அருமையை உணர்வாரோ? பேசுவாரோ - (தமிழைப்பற்றி) ஏதாவது உரைப்பாரோ? (ஒன்றும் செய்யார்), ஒரு சந்திச் சட்டிப்பானையின் அந்த நியாயம் நாய் அறியாது - ஒருபோது(க்குச் சமைக்கும்) சட்டிப் பானையின் அந்த உயர்வை நாய் அறியாது.

(வி - ரை.) உலகுக்கெல்லாந் தந்தை இறைவரே ஆகையால் 'தண்டலை நீள்நெறி.................எமது அருமை' என்றார். சுந்தரமூர்த்தி நாயனாரின் வேண்டுகோளுக்கிணங்கிப் பரவையின் ஊடலைத் தவிர்க்கச் சென்றது அடியவரின் அருமையையுந் தமிழின் அருமையையும் உணர்ந்தேயாகையால் 'அறிந்திடாரோ?' என்றார். 'பே' என்பது 'பேய்' எனத் திரிந்திருத்தல் வேண்டும். பே என்னும் உரிச்சொல் அச்சப்பொருளைத்தரும். ஆகவே, முழுமூடர் அச்சத்திற்காகக் கொடுப்பரே அன்றித் தமிழருமை அறிந்து கொடார் என்பது கருத்தாகக் கொள்க. 'கொல்லச் சுரப்பதாம் கீழ்' என்றார் பிறரும். ஒரு சந்திப் பானை : நோன்புக்குச் சமைக்கவெனத் தனியே வைத்திருக்கும் சமையற் கலம். நாய்க்கு எல்லாப் பானையும் ஒரேமாதிரியாகத்தான் மதிப்புப்பெறும். அவ்வாறே மூடர் யாவரையும் ஒருதன்மையராகவே கருதுவர். 'நாய் அறியுமோ ஒருசந்திப்பானையை?' 'பெற்றவள் அறிவாள் பிள்ளை அருமை' என்பன பழமொழிகள். ஒருசந்தி - ஒருபோது.

உச. எட்டிமரம் பழுத்தாலும் ஈயாதார் வாழ்ந்தாலும் என்?

கட்டுமாங் கனிவாழைக் கனிபலவின்
கனிகள்உப காரம் ஆகும் ;
சிட்டரும்அவ் வணந்தேடும் பொருளையெல்லாம்
இரப்பவர்க்கே செலுத்தி வாழ்வார் ;
மட்டுலவும் சடையாரே ! தண்டலையா
ரே !சொன்னேன் ! வனங்கள் தோறும்
எட்டிமரம் பழுத்தாலும் ஈயாதார்
வாழ்ந்தாலும் என்உண் டாமே ?

(தொ - ரை.) மட்டு உலவும் சடையாரே தண்டலை யாரே - மணங்கமழும் சடையை யுடையவரே! தண்டலை யிறைவரே! வனங்கள் தோறும் எட்டிமரம் பழுத்தாலும் ஈயாதார் வாழ்ந்தாலும் என் உண்டாம் - காடுகள் எங்கும் எட்டிமரம் பழுப்பதனாலும், (நாடுகள் எங்கும்) கொடைப் பண்பிலார் வாழ்வதனாலும் என்ன பயன் கிடைக்கும்? கட்டு மாங்கனி வாழைக்கனி பலவின் கனிகள் உபகாரம் ஆகும் - (பழுப்பதற்காகக்) கட்டிவைக்கும் மா, வாழை, பலா ஆகிய இவற்றின் பழங்கள் (மற்றவர்க்குப்) பயன்படும். (அவ்வாறே), அவ்வணம் சிட்டரும் தேடும் பொருளை யெலாம் இரப்பவர்க்கே செலுத்தி வாழ்வார் - நல்லோரும் தாம் சேர்க்கும் பொருள் முழுதும் வறியருக்கே அளித்துச் சிறப்புடன் வாழ்வார்கள்.

(வி - ரை.) சிட்டர் (வடமொழி) - நல்லோர். 'எட்டி பழுத்தால் என்? ஈயாதார் வாழ்ந்தால் என்?' என்பன பழமொழிகள்.

உரு. காதவழி பேரில்லான்........

ஓதரிய தண்டலையார் அடிபணிந்து
நல்லவன்என்(று) உலகம் எல்லாம்
போதம்மிகும் பேருடனே புகழ்படைத்து
வாழ்பவனே புருடன் அல்லால்
ஈதலுடன் இரக்கமின்றிப் பொன்காத்த
பூதமெனா இருந்தால் என்ன?
காதவழி பேரில்லான் கழுதையோ(டு)
ஒக்கும்எனக் காண லாமே!

(தொ - ரை.) ஓத அரிய தண்டலையார் அடிபணிந்து - புகழுக்கு எட்டாத தண்டலையிறைவரின் திருவடிகளை வணங்கி, உலகம் எல்லாம் நல்லவன் என்று போதம்மிகும் பேருடனே - உலகமெங்கும் 'இவன் நல்லவன்' என்று கூறும் அறிவுமிக்க பெயருடன், புகழ் படைத்து வாழ்பவனே புருடன் - புகழும் பெற்று வாழ்வோனே ஆண்

மகன்: அல்லால் - (அவ்வாறு) இன்றி, ஈதலுடன் இரக்கம் இன்றிப் பொன்காத்த பூதம் என இருந்தால் என்ன - கொடையும் அருளும் இல்லாமற் பொன்னைக் காக்கும் பூதம்போல இருப்பதால் யாது பயன்? காதவழி பேரில்லான் கழுதையோடு ஒக்கும் எனக் காணலாமே - காதவழியேனும் புகழில்லாதவன் கழுதைக்குச் சமமாவான் என்று (உலகுரைப்பதை) அறியலாம்.

(வி - ரை.) ஓதுதல் - சொல்லுதல். இறைவரைப்பற்றி ஓதுதலாவது புகழ்தல். எனவே, 'ஓத அரிய' என்பது, 'புகழ்தற்கரிய' எனப் பொருள் தந்தது. 'ஓத' என்பதன் இறுதி 'அகரம்' செய்யுள் விகாரத்தால் தொக்கது.

உகூ. செவிடன் காதினிற் சங்கு குறித்தல்

பரியாமல் இடும்சோறும் ஊமைகண்ட
கனவும்ஒன்றும் பரிசில் ஈயான்
அரிதான செந்தமிழின் அருள்சிறிதும்
இல்லாதான் அறிவு மேதான்
கரிகாலன் பூசைபுரி தண்டலைநீள்
நெறியாரே! கதித்த ஓசை
தெரியாத செவிடன்காதினிற்சங்கு
குறித்ததெனச் செப்பலாமே.

(தொ - ரை.) கரிகாலன் பூசைபுரி தண்டலைநீள் நெறியாரே - கரிகாற் சோழன் வழிபாடு செய்த தண்டலைநீள் நெறியில் எழுந்தருளிய இறைவரே! பரியாமல் இடும் சோறும் - அன்பு இன்றிப் படைக்கும் உணவும், ஊமை கண்ட கனவும் - ஊமையன் கண்ட கனவும், பரிசில் ஒன்றும் ஈயான் - (புலவருக்குப்) பரிசு ஒன்றும் கொடாமல், அரிது ஆன செந்தமிழின் அருள் சிறிதும் இல்லாதான் அறிவும் - அருமையான செந்தமிழின் அருளைச் சற்றும் பெறாதவனுடைய அறிவும், கதித்த ஓசை தெரியாத செவிடன் காதினில் - பேரொலியை அறியாத செவிட

நுமையே காதில், சங்கு குறித்தது எனச் செப்பிலாம் - சங்கு முழங்கியது போலாகும் என்று கூறலாம்.)

(வி - ரை.) சோறும், கனவும், அறிவும், செவிடன் காதினிற் சங்கு குறித்தது எனக் கூட்டுக. புலவருக்குப் பரிசு கொடுத்துச் செந்தமிழின் நயத்தை அவர்கள் வாயிலாக உணராதவனைச், 'செந்தமிழின் அருள் சிறிதும் இல்லாதான்' என்றார். 'ஊமையன் கண்ட கனவு' 'செவிடன் காதினிற் சங்கு' என்பவை மரபு மொழிகள்.

உ௪. மன்னுயிருக் கிரங்குவது

முன்னரிய மறைவழங்கும் தண்டலையார்
ஆகமத்தின் மொழிகே ளாமல்
பின்னுயிரை வதைத்தவனும், கொன்றவனும்,
குறைத்தவனும், பேரு ளோனும்,
அந்நெறியே சமைத்தவனும், உண்டவனும்
நரகுறுவர்; ஆத லாலே
தன்னுயிர்போல் எந்நாளும் மன்னுயிருக்
கிரங்குவதும் தக்க(து) ஆமே.

(நே - ரை.) முன் அரிய மறை வழங்கும் தண்டலையார் ஆகமத்தின் மொழி கேளாமல் - முற்காலத்தில் அருமையான மறையை (உலகுக்கு) அருளிய தண்டலையாரின் ஆகம நூல்களிற் கூறியதைக் கேட்காமல், உயிரை வதைத்தவனும் - உயிருக்கு இடுக்கண் விளைவித்தவனும், கொன்றவனும் - அழித்தவனும், குறைத்தவனும் - (உயிராற்றலைக்) குறைவு படுத்தியவனும், பேர் உளோனும் - (முன் நின்று கொலையாளி எனப்) பெயர் பெற்றவனும், அந்நெறியே சமைத்தவனும் - கொலைவழியிலே நின்று சமையல் செய்தவனும், உண்டவனும - சாப்பிட்டவனும் (ஆகியோர்), நரகு உறுவர் - நரகத்தை அடைவர். ஆதலால் - ஆகையால், எந்நாளும் தன் உயிர்போல் மன் உயிருக்கு இரங்குவதும் தக்கது ஆம் - எப்போதும் தன் உயிரைப்போலப் பிற உயிரையும் நினைத்து இரக்கம் காட்டுவதும் நன்மையாகும்.

(வி - ரை.) ஆகமம் : மறைவழிப்படும் நூல். 'தன் உயிரைப் போல மன் உயிரை நினை' என்பது பழமொழி.

உஅ. குளிர்காய நேரம் இல்லை!

உருவெடுத்த நாள்முதலா ஒருசாணும்
வளர்க்கஉடல் உழல்வ(து) அல்லால்
மருவிருக்கும் நின்பாத மலர்தேடித்
தினம்பணிய மாட்டேன்! அந்தோ!
[1]திருவிருக்கும் மணிமாடத் தண்டலைநீள்
நெறியே! என் செய்தி யெல்லாம்
சருகரிக்க நேரமன்றிக் குளிர்காய
நேரம்இல்லாத் தன்மை தானே!

(தொ - ரை.) திரு இருக்கும் மணிமாடம் தண்டலை நீள் நெறியே - செல்வம் நிலைத்த மணிமாடங்கள் நிறைந்த தண்டலையில் எழுந்தருளிய நீள்நெறியாரே! உரு எடுத்த நாள் முதலா ஒருசாணும் வளர்க்க உடல் உழல்வது அல்லால் - இவ் வுருவைத் தாங்கிய நாள்முதலாக ஒரு சாண் வயிற்றைக் காக்கவே இவ்வுடம்பு உழைப்பதன்றி, மரு இருக்கும் நின் பாதமலர் தேடித்தினம் பணிய மாட்டேன் அந்தோ - மணங்கமழும் தங்களுடைய திருவடி மலரை நாடி ஒவ்வொருநாளும் வணங்காமல் விட்டுவிட்டேன்! (என் செயலை என்னென்பேன்!) ஐயோ! என் செய்தி எல்லாம் - என் செய்கை யாவும், சருகு அரிக்க நேரம் அன்றிக் குளிர்காய நேரம் இல்லாத் தன்மை தானே - (குளிரைப் போக்க எண்ணியவனுக்கு) சருகு அரிக்க நேரமே யொழியக் குளிர்காய்வதற்கு நேரம் இல்லாத இயல்பு போலும்!

(வி - ரை.) ஒருசாண் : ஒருசாண் அளவுடைய வயிற்றைக் குறிப்பதால் அளவையாகுபெயர். அந்தோ : இரக்கப் பொருளைக் குறிக்கும் இடைச்சொல். 'சருகு அரிக்க நேரமே ஒழியக் குளிர் காய நேரம் இல்லை' என்பது பழமொழி.

1. 'திருவிளக்கும்' என்றும் பாடம்.

உ௯. உருத்திராக்கப் பூனை!

காதிலே திருவேடம்! கையிலே
செபமாலை! கழுத்தின் மார்பின்
மீதிலே தாழ்வடங்கள்! மனத்திலே
கரவடம்ஆம் வேடம் ஆமோ?
வாதிலே அயன்தேடும் தண்டலைநீள்
நெறியாரே! மனிதர் காணும்
போதிலே மௌனம்! இராப் போதிலே
ருத்திராக்கப் பூனை தானே.

(தொ - ரை.) வாதிலே அயன் தேடும் தண்டலை நீள் நெறியாரே - (திருமாலுக்கும் தனக்கும் நேர்ந்த) போட்டியிலே நான்முகன் தேடிய தண்டலை நீள்நெறியிறைவரே! காதிலே திருவேடம் - காதில் உருத்திராக்கம் அணிந்த திருக்கோலமும், கையிலே செபமாலை - கையில் செபமாலையும், கழுத்தில் மார்பின்மீதில் தாழ்வடங்கள் - கழுத்திலும் மார்பிலும் உருத்திராக்கத் தாழ்வடங்களும் (உடையராய்), மனத்திலே கரவடம்ஆம் வேடம் ஆமோ - உள்ளத்திலே வஞ்சகம் ஆகிய தோற்றம் தகுமோ? (அவ்வாறிருத்தல்), மனிதர் காணும்போதிலே மௌனம் இராப்போதிலே உருத்திராக்கப் பூனை தான் - மக்கள் பார்க்கும்போது கண் மூடிப் பேசாதிருந்து, இரவிலே திருடும் உருத்திராக்கப் பூனையின் செயல் போன்றதாகும்.

(வி - ரை.) "திருமாலும் நான்முகனும் தாமே பெரியவரெனத் தனித்தனிச் செருக்கியபோது சிவபெருமான் இடையிலே தீமலையாகத் தோன்றினர். அதனைக் கண்ட இருவரும் திகைத்துத் தம்மில் எவர் அதன் அடியையேனும் முடியையேனும் காண்கின்றனரோ அவரே பெரியர் என முடிவுசெய்து திருமால் பன்றியாகி அடியையும், நான்முகன் அன்னமாகி முடியையும் தேடிக் கண்டுபிடிக்க முடியாமல் திரும்பினர்," என்பது புராணம். கரவடம் - வஞ்சகம். உள்ளொன்றும் புறமொன்றுமாகத் திரிவோரை 'உருத்திராக்கப் பூனை' என்பது மரபு.

௩௦. 'தானொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்'

மானொன்று வடிவெடுத்து மாரீசன்
போய்மடிந்தான்! மானே யென்று
தேனொன்று மொழிபேசிச் சீதைதனைச்
சிறையிருக்கத் திருடிச் சென்றோன்
வானொன்றும் அரசிழந்தான்! தண்டலையார்
திருவுளத்தின் மகிமை காணீர்!
தானொன்று நினைக்கையிலே தெய்வம்ஒன்று
நினைப்பதுவும் சகசந் தானே.

(தெ - ரை.) தண்டலையார் திருவுளத்தின் மகிமை காணீர் - தண்டலையிறைவருடைய திருவுளப் பெருமையைப் பாருங்கள்! மான் ஒன்று வடிவு எடுத்துப்போய் மாரீசன் மடிந்தான் - மானைப்போல் ஒன்றிய வடிவையெடுத்துச் சென்று (இராமனை ஏமாற்றச் சென்ற) மாரீசன் இறந்தான். மானே என்று தேன் ஒன்றும் மொழிபேசிச் சீதைதனைச் சிறையிருக்கத் திருடிச் சென்றோன் - மானே எனக் கூப்பிட்டுத் தேனைப்போல் இனிக்கும் மொழிகளை மொழிந்து, சீதையைத் திருடிச் சிறைக்குக் கொண்டு சென்ற இராவணன், வான் ஒன்றும் அரசு இழந்தான் - (நிலத்துடன்) வானையும் சேர்த்த தன் ஆட்சியைப் பறி கொடுத்தான். (ஆகையால்), தான் ஒன்று நினைக்கையிலே தெய்வம் ஒன்று நினைப்பதுவும் சகசந்தான் - (உலகில் ஒருவன்) தான் ஒரு வேலையை எண்ணும்போது தெய்வம் மற்றொன்று எண்ணுவது இயல்பே!

(வி - ரை.) '**தானொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது**' என்பது பழமொழி. மேலே காட்டிய எடுத்துக் காட்டுகளைக் கொண்டு தீவினை நினைத்தல் கூடாதென்றும், அது தெய்வத்திற்குப் பிடித்தமானதன்றென்றும், அவ்வாறு தீவினை செய்தால் அதன் பயன் நன்றாக இராதென்றும் தெரிகின்றனவே ஒழிய நல்ல முயற்சியையும் அதன் பயனையும் இச் செய்யுள் குறைகூறவில்லை யென்று அறிக.

௩௧. பொய் சொல்லி வாழ்வது இல்லை

கைசொல்லும் பனைகாட்டும் களிற்றுரியார்
தண்டலையைக் காணார் போலப்
பொய்சொல்லும் வாயினர்க்குப் போசனமும்
கிடையாது! பொருள்நில் லாது!
மைசொல்லும் கார்அளிசூழ் தாழைமலர்
பொய்சொல்லி வாழ்ந்த(து) உண்டே
மெய்சொல்லி வாழாதான் பொய்சொல்லி
வாழ்வதில்லை! மெய்ம்மை தானே!

(நே - ரை.) சொல்லும் பனைகாட்டும் கைக்களிற்று உரியார் தண்டலையைக் காணார்போல - புகழப்படும் பனையைக் காண்பிக்கும் துதிக்கையினையுடைய யானையின் தோலைப் போர்த்தவரான சிவபிரானின் தண்டலையைக் காணாதவர்க்கு உணவு கிடையாததைப்போல, பொய் சொல்லும் வாயினர்க்குப் போசனமும் கிடையாது - பொய் கூறும் வாயார்க்கு உணவும் அகப்படாது. பொருள் நில்லாது - கைப்பொருளும் அழிந்துவிடும். மைசொல்லும் கார் அளிசூழ் தாழைமலர் பொய்சொல்லி வாழ்ந்தது உண்டோ - மேகம் சூழ்ந்ததென்று சொல்லுமாறு கரிய வண்டினம் சூழும் தாழைமலர் பொய்கூறி வாழ்வு பெற்றதா? (ஆகையால்), மெய்சொல்லி வாழாதான் பொய் சொல்லி வாழ்வது இல்லை - உண்மையுரைத்து வாழ முடியாதவன் பொய்யுரைத்தும் வாழப்போவதில்லை. மெய்ம்மை தான் - இது உண்மையே ஆகும்.

(வி - ரை.) பனைமரத்தைக் கண்டாற்போலக் காணப்படும் துதிக்கை. 'சிவபிரான் கொண்டருளிய ஒளிமலை வடிவத்தின் அடியைத் திருமாலும் முடியை நான்முகனும் காணச் சென்றபோது, தான் கொண்ட அன்னவுருவத்தின் சிறகுகள் உதிர்ந்தும் சோர்வு பெற்றும் மேலே பறக்கமுடியாமல் நின்ற பிரமன், சிவபிரான் முடியினின்றும் விழுகின்ற தாழைமலரைக் கண்டான். அது சிவபிரான் முடியைப் பிரமன் கண்டதாக அவன் வேண்டுகோளின் படி சிவபிரானிடம் பொய்ச்சான்று கூறியது. அன்றுமுதல் அம்மலர் சிவபிரானுக்கு ஏற்றதன்றாயிற்று.' என்பது புராணம்.

உரையாடுவதற்கும் உண்பதற்கும் உரிய வாய் பொய்ம்மொழி யுரைத்தால் உணவும் பொய்யாவது இயற்கை யென்பது தோன்றப் 'பொய் யுரைக்கும் வாயினர்க்குப் போசனமும் கிடையாது!' என்றார். 'பொய்சொன்ன வாய்க்குப் போசனம் கிட்டாது' என்பது பழமொழி.

௩௨. சந்திரனைப் பார்த்து நாய்குரைத்தால் என்ன?

அந்தணரை நல்லவரைப் பரமசிவன்
அடியவரை அகந்தை யாலோர்
நிந்தனைசொன் னாலுமென்ன? வைதாலும்
என்ன? அதில் நிடேதம் உண்டோ?
சுந்தரர்க்குத் தூதுசென்ற தண்டலைநீள்
நெறியாரே! துலங்கும் பூர்ண
சந்திரனைப் பார்த்துநின்று நாய்குரைத்த
போதில்என்ன தாழ்ச்சி தானே?

(தொ - ரை.) சுந்தரர்க்குத் தூதுசென்ற தண்டலை நீள் நெறியாரே - சுந்தரமூர்த்தி நாயனாருக்காக (பரவையாரிடம்) தூதுபோன தண்டலைநீள்நெறி இறைவரே! துலங்கும் பூர்ண சந்திரனைப் பார்த்து நின்று நாய் குரைத்த போதில் என்ன தாழ்ச்சி - விளங்கும் முழுமதியை நோக்கி நின்றவாறு நாய் குரைப்பதனால் முழுமதிக்கு என்ன குறை உண்டாகும்? (ஆகையால்), அந்தணரை நல்லவரைப் பரமசிவன் அடியவரை? அகந்தையால் ஓர் நிந்தனை சொன்னாலும் என்ன - செருக்கினாலே ஒரு பழி கூறினாலும் என்ன பயன்? வைதாலும் என்ன - இகழ்ந்தாலும் என்ன பயன்? அதில் நிடேதம் உண்டோ - அவ்வாறு இழிவுபடுத்துவதால் அவர்களுக்குப் (பிறரால்) விலக்கு ஏற்படுமோ?

(வி - ரை.) 'சந்திரனைப் பார்த்து நாய்குரைத்தாற் போல' என்பது பழமொழி.

௩௩. கோடரிக் காம்பு!

கோடாமற் பெரியவர்பால் நடப்பதன் றிக்
குற்றமுடன் குறைசெய் தோர்கள்
ஆடாகிக் கிடந்தஇடத்(து) அதன்மயிரும்
கிடவாமல் அழிந்து போவார்!
வீடாகற் கதியுதவும் தண்டலையா
ரே! சொன்னேன் மெய்யோ? பொய்யோ?
கோடாலிக் காம்பேதன் குலத்தினுக்குக்
கேடான கொள்கை தானே.

(தொ - ரை.) வீடாகற்கதி உதவும் தண்டலையாரே - கெடாத நல்ல நிலையை அருளும் தண்டலை யிறைவரே! கோடாலிக் காம்பே தன் குலத்தினுக்குக் கேடான கொள்கை மெய்யோ பொய்யோ-கோடரிக்குக் காம்பு தன் குலத்துக்குக்கேடு என்று கூறும் வழக்கம் மெய்யோ? பொய்யோ? (ஆகையால்), பெரியவர்பால் கோடாமல் நடப்பது அன்றிக் குற்றமுடன் குறை செய்தோர்கள் - சான்றோரிடம் ஒழுங்காக நடந்து கொள்ளாமற் குற்றமும் குறையும் செய்தவர்கள், ஆடு ஆகிக் கிடந்த இடத்து அதன் மயிரும் கிடவாமல் அழிந்தே போவார் - ஆடு வளர்ச்சியற்றுக் கிடந்த இடத்திலே அதன் மயிரும் கிடக்காமல் அழிந்து விடுவார்.

(வி - ரை.) வீடாகற்கதி: பேரின்பம். வீடுதல் - கெடுதல். கோடு அரிவது: கோடரி. அது 'கோடாலி' என மருவியது. கோடரியின் காம்பு மரத்தால் ஆனது. அந்தக் காம்பு சேராவிட்டாற் கோடரி மரத்தை வெட்டாது. அவ்வாறே பெரியோரைப் பழிப்போர் அப்பெரியோரால் தம் குலத்துக்குக் கேடுவிளைவித்து அடியோடு அழிவர் என்பது தோன்ற 'ஆடாகிக் கிடந்த இடத்து அதன் மயிரும் கிடவாமல் அழிந்தே போவார்' எனக் கூறினர். 'ஆடு கிடந்த இடத்து அதன் மயிரும் கிடவாது' "கோடரிக் காம்பு குலத்துக் கீனம்' என்பவை பழமொழிகள்.

௩௪. சன்னதமானது குலைந்தாற் கும்பிடு எங்கே?

சின்னமெங்கே? கொம்பெங்கே? சிவிகையெங்கே?
பரியெங்கே? சிவியார் எங்கே?
பின்னை ஒரு பாழும்இல்லை! நடக்கைகுலைந்
தால்உடனே பேயே அன்றோ?
சொன்னவிலும் தண்டலையார் வளநாட்டிற்
குங்கிலியத் தூபம் காட்டும்
சன்னதமா னதுகுலைந்தாற் கும்பிடெங்கே?
வம்பர்இது தனையெண் ணூரே!

(நேர் - உரை.) சொல் நவிலும் தண்டலையார் வளநாட்டில் - புகழ்பெற்ற தண்டலை யிறைவரின் வளமிக்க நாட்டிலே, நடக்கை குலைந்தால் - (ஒருவருடைய) ஒழுங்கு கெட்டால், சின்னம் எங்கே - (வெற்றிச்) சின்னம் எங்கே? கொம்பு எங்கே - (ஊது) கொம்பு எங்கே? சிவிகை எங்கே - பல்லக்கு எங்கே? சிவியார் எங்கே? - பல்லக்குத் தூக்குவோர் எங்கே? பரி எங்கே - குதிரை எங்கே? பின்னை ஒரு பாழும் இல்லை - (ஒழுங்கு கெட்ட பிறகு) எந்த மதிப்பும் இராது. உடனே பேயே அன்றோ - உடனே பேய்போலவே ஆய்விடுவர் குங்கிலியத் தூபம் காட்டும் சன்னதமானது குலைந்தால் கும்பிடு எங்கே - குங்கிலியப் புகை காட்டும் முயற்சியை விட்டுவிட்டால் (கோயிலுக்கு மக்கள் வந்து) கும்பிடுவது இருக்குமா? வம்பர் இதுதனை எண்ணூர் - வீண்பேச்சுக்காரர் நன்னடக்கையைப் பற்றிச் சிந்தியார்.

(வி - உரை.) சின்னம்: ஒருவகை ஊதுகருவி. குங்கிலியம்: ஒருவகையான புகைப் பொருள்.

௩௫. துறவிக்கு வேந்தன் துரும்பு.

சிறுபிறைதுன் னியசடையார் தண்டலைசூழ்
பொன்னிவளம் செழித்த நாட்டில்,
குறையகலும் பெருவாழ்வும் மனைவியும்மக்
களும்பொருளாக் குறித்தி டாமல்,

மறைபயில்பத் திரகிரியும் பட்டினத்துப்
பிள்ளையும்சேர் மகிமை யாலே.
துறவறமே பெரிதாகும்! துறவிக்கு
வேந்தன் ஒரு துரும்பு தானே.

(தொ-ரை) *சிறுபிறை துன்னிய சடையார் தண்டலை சூழ் பொன்னி வளம் செழித்த நாட்டில்* - சிறு பிறைமதி பொருந்திய சடையுடைய இறைவரின் தண்டலையைச் சூழ்ந்த காவிரி வளம் கொழிக்கும் நாட்டினில், *குறை அகலும் பெருவாழ்வும் மனைவியும் மக்களும் பொருள் ஆகுறித்திடாமல்* - குறைவற்ற பெரிய வாழ்வும் மனைவியும் மக்களும் பொருளாக நினையாமல், *மறைபயில் பத்திரகிரியும் பட்டினத்துப் பிள்ளையும் சேர் மகிமையாலே* - மறையோதிய பத்திரகிரியாரும் பட்டினத்துப் பிள்ளையாரும் சேர்ந்த பெருமையினால், *துறவறமே பெரிது ஆகும்* - துறவறமே சிறப்புடையதாகும்! *துறவிக்கு வேந்தன் ஒரு துரும்புதானே* - துறவிக்கு மன்னன் ஒரு துரும்பைப் போன்றவனே.

(வி-ரை.) பொன்னி: பொன் கொழிப்பது: **காவிரி.** '**துறவிக்கு வேந்தன் துரும்பு**' என்பது பழமொழி.

௩௪. ஆரியக் கூத்தாடுகினும்.

பேரிசைக்கும் சுற்றமுடன் மைந்தரும்மா
தரும்சூழப் பிரபஞ் சத்தே
பாரியையுற் றிருந்தாலும் திருநீற்றிற்
கழற்காய்போல் பற்றில் லாமல்,
சீரிசைக்குந் தண்டலையார் அஞ்செழுத்தை
நினைக்கின்முத்தி சேர லாகும்;
ஆரியக்கூத்(து) ஆடிகினும் காரியமேற்
கண்ணுவ(து) அறிவு தானே.

(தொ - ரை.) ஆரியக்கூத்து ஆடுகினும் காரியம்மேல் கண் ஆவது அறிவு - ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தின் மேற் கண்ணாக இருப்பது அறிவுடைமை. (ஆகையால்), பேர் இசைக்கும் சுற்றமுடன் மைந்தரும் மாதரும் சூழ - புகழ்ந்தோதும் உறவினருடன் மக்களும் பெண்டிரும் சூழ்ந்திருக்குமாறு, பிரபஞ்சத்தே பாரியை உற்று இருந்தாலும் - உலகத்திலே மனைவியுடன் வாழ்ந்தாலும், திருநீற்றில் கழல் கால்போல் பற்று இல்லாமல் - திருநீற்றில் உள்ள கழற்காய் (திருநீற்றிற் படாது இருப்பது) போல ஆசையின்றி, சீர் இசைக்கும் தண்டலையார் அஞ்சு எழுத்தை நினைக்கின் முத்தி சேரலாகும் - சிறப்புப் பொருந்திய தண்டலையாரின் (சிவாயநம எனும்) ஐந்தெழுத்தினையும் நினைத்தால் வீடு பெறலாகும்.

(வி - ரை.) 'பாரியை' எனப்பின்னர் வருவதால் முன்னர் 'மாதரும்' என்பது மனைவியரல்லாத காதற் கிழத்தியரைக் குறிக்கும். 'பாரியைபு' என்று கூறுவது (உலகத் தொடர்பு) பொருத்தமாக இருக்கும். ஆரியக்கூத்து : ஆரியர்களால் ஆடப்படும் ஒருவகைக் கூத்து ; கழைக் கூத்தென்றுங்கூறுவர். 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தின்மேற் கண்ணாயிரு' என்பது பழமொழி. அறிவுதானே : தான் ஏ : ஈற்றசைகள்.

௬௭. மரம் வைத்தவர் தண்ணீர் வார்ப்பார்

இரந்தனையித் தனைநாளும் பரந்தனைநான்
என்றலைந்தாய்! இனிமே லேனும்
கரந்தைமதி சடையணியும் தண்டலைநீள்
நெறியாரே காப்பார் என்னும்
உரந்தனைவைத்(து) இருந்தபடி இருந்தனையேல்[1]
உள்ளமெலாம் உண்டாம்! உண்மை!
மரந்தனைவைத் தவர் நாளும் வாடாமல்
தண்ணீரும் வார்ப்பர் தாமே.

---

* 'இருந்தவருக்கு' என்றும் பாடம்.

(தொ - ரை.) மரந்தனை வைத்தவர் வாடாமல் நாளும் தண்ணீரும் வார்ப்பர் - மரத்தை வைத்தவர்கள் அது வாடிடாமல் எப்போதும் தண்ணீரும் வார்ப்பார்கள். (ஆகையால்), இத்தனை நாளும் இரந்தனை, பரந்தனை நான் என்று அலைந்தாய் - இத்துணை நாட்களாக (உணவு) இரந்து, உன்னையே உன் தலைவனாக நினைத்துத் திரிந்தாய்! இனிமேலேனும் - இனியாவது, கரந்தைமதி சடைஅணியும் தண்டலைநீள் நெறியாரே காப்பார் - திருநீற்றுப் பச்சையையும் பிறைத்திங்களையும் சடையில் மிலைந்த தண்டலை நீள்நெறி யிறைவரே காத்தருள்வார், என்னும் உரந்தனை வைத்து, இருந்தபடி இருந்தனையேல் - என்கிற உறுதியை மேற்கொண்டு (பேராசையின்றி) அமைதியாக இருந்தனையானால், உள்ள எலாம் உண்டாம் உண்மை - (பழவினை வாயிலாக) இருப்பன யாவும் கிடைக்கும்! இதுவாய்மையாகும்!

(வி-ரை.) வார்ப்பர் தாமே: தாம் ஏ: ஈற்றசைகள். 'மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்' என்பது பழமொழி.

௩அ. செங்கோலரசனே தெய்வம்

நாற்கவியும் புகழவரும் தண்டலையார்
வளநாட்டில், நல்ல நீதி
மார்க்கமுடன் நடந்து, செங்கோல் வழுவாமற்
புவியாளும் வண்மை செய்த
தீர்க்கமுள்ள அரசனையே தெய்வம் என்பார்;
கொடுங்கோன்மை செலுத்தி நின்ற
மூர்க்கமுள்ள அரசனும்தன் மந்திரியும்
ஆழ்நரகில் மூழ்குவாரே!

(தொ - ரை.) நால் கவியும் புகழவரும் தண்டலையார் வளநாட்டில் - நால்வகைக் கவிஞர்களும் புகழுமாறு சிறப்புற்ற தண்டலை இறைவரின் செழிப்பான நாட்டில், நல்ல நீதிமார்க்கமுடன் நடந்து - நல்ல அறநெறியுடன் ஒழுகி,

செங்கோல் வழுவாமல் புவி ஆளும் வண்மை செய்த - நடு நிலை தவறாத ஆட்சியில் தவறாமல் உலகத்தை ஆளும் கொடையாளியான, தீர்க்கம் உள்ள அரசனையே தெய்வம் என்பார் - துணிவுடைய மன்னனையே கடவுள் என்று கூறுவார்கள். கொடுங்கோன்மை செலுத்தி நின்ற - தவறான ஆட்சி நடத்துகின்ற, மூர்க்கம் உள்ள அரசனும் தன் மந்திரியும் - கொடிய அரசனும் அவனுடைய அமைச்சனும், ஆழ்நரகில் மூழ்குவார் - ஆழமான நரகத்திலே அழுந்துவார்கள்.

(வி - ரை.) நாற்கவி: ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். 'அரசனையே தெய்வம்' என்றார் இறை என்ற சொல் அரசனையும்: தெய்வத்தைக் குறிக்கும் ஆதலால் எ: தேற்றம். 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்' - என்றார் பிறரும். தீர்க்கம் - துணிவு, உறுதி.

௧௯. காதிற் கடுக்கன் முகத்துக் கழகு

ஓதரிய வித்தைவந்தால் உரிய சபைக்(கு)
அழகாகும்; உலகில் யார்க்கும்
ஈதலுடன் அறிவுவந்தால் இனியகுணங்
களுக்கழகாய் இருக்கும் அன்றோ?
நீதிபெறு தண்டலையார் திருநீறு
மெய்க்கழகாய் நிறைந்து தோன்றும்;
காதிலணி கடுக்கனிட்டால் முகத்தினுக்கே
அழகாகிக் காணுந் தானே.

(தொ - ரை.) காதில் அணி கடுக்கன் இட்டால் முகத்தினுக்கே அழகு ஆகிக் காணும் - காதில் அழகிய கடுக்கனை அணிந்தால் முகத்திற்கு அழகிய காட்சிதரும். (அவ்வாறே) ஓத அரிய வித்தை வந்தால் உரிய சபைக்கு அழகு ஆகும் - புகழவியலாத கல்விப்பேறு கிடைத்தால், (கல்விக்குத்) தக்க அவையிலிருக்க அழகாய் இருக்கும்; உலகில் யார்க்கும் ஈதலுடன் அறிவுவந்தால் இனிய குணங்களுக்கு

அழகாய் இருக்கும் அன்றோ - உலகினில் எவருக்கும் கொடைப்பண்புடன் அறிவுங்கூடினால் (மற்ற) இனிய பண்புகளுக்கு அழகுதரும் அன்றோ? நீதி பெறு தண்டலை யார் திருநீறு மெய்க்கு அழகாய் நிறைந்து தோன்றும் - அறம் நிறைந்த தண்டலையிறைவரின் திருநீறு தன்னை அணிந்த உடம்புக்கு முற்றிலும் அழகாகக் காணப்படும்.

(வி- ரை.) காணுந்தானே: தான் ஏ: ஈற்றசைகள். நீதி பெறுதலைத் தண்டலைக்கு ஆக்குக. 'கவினைத்தருவது நீறு' 'பூச இனியது நீறு' 'பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு' என்று திருஞான சம்பந்தர் திருவாய் மலர்ந்தருளியன காண்க. **'காதுக்குக் கடுக்கன், முகத்துக்கு அழகு'** என்பது பழமொழி.

௪௦. கவி சொல்லார்.

'பாரதியார்' 'அண்ணாவி' 'புலவர்' என்பார்
கல்வியினிற் பழக்கம் இல்லார்!
சீரறியார் தளையறியார் பல்லக்கே
றுவர்! புலமை செலுத்திக் கொள்வார்!
ஆரணியும் தண்டலைநீள் நெறியாரே!
இலக்கண நூல் அறியா ரேனும்
காரிகையா கிலுங்கற்றுங் கவிசொல்லார்
பேரிகொட்டக் கடவர் தாமே!

(தொ - ரை.) ஆர் அணியும் தண்டலைநீள் நெறியாரே - ஆத்திமாலை அணிந்த தண்டலைநீள் நெறி இறைவரே! கல்வியினில் பழக்கம் இல்லார் பாரதியார் அண்ணாவி புலவர் என்பார் - கலையறிவு பயிலாதவர் (சிலர்) பாரதியா ரெனவும் அண்ணாவியென்றும் புலவர் என்றும் (தம்மைப் புகழ்ந்து) சொல்லிக்கொள்வர்; சீர் அறியார்! தளை அறியார் பல்லக்கு ஏறுவர் புலமை செலுத்திக் கொள்வார் - (செய்யுளின் உறுப்பான) சீரை அறியாதவரும் தளையை உணராதவரும் பல்லக்கில் ஏறிக்கொண்டு புலவர் போல நடந்துகொள்வார்! (இதனை என்னென்பது!) இலக்கண

நூல் அறியாரேனும் - (அவர்கள்) இலக்கண நூலைப் பயிலா விடினும், காரிகையாகிலும் கற்றுக் கவிசொல்லார் பேரி கொட்டக் கடவர் - (யாப்பிலக்கணமான) காரிகையென் னும் நூலையேனும் படித்துச் செய்யுள் செயுந்திறமில்லா தவர் (வயிற்றுப் பிழைப்புக்காகப்) பறையடித்து வாழக் கடவர்.

(வி - ரை.) கடவர்தாமே: தாம் ஏ: ஈற்றசைகள். ஆர் - ஆத்தி. 'காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே' என்பதனையும் உணராதவர்களின் இழிவை யுணர்த்த 'காரிகை யாகிலுங் கவிசொல்லார்' என்றார். மற்றும், சிலர் காரிகை கற்றாலும் கவிசொல்ல முடியாமல் (இயற்கைக் கவி வளம் இல்லா மையால்) திகைக்கின்றனர். சிலர் யாப்பிலக்கணங்கல்லாமலே கவி யெழுதத் தொடங்கிவிடுகின்றனர். இவ்விரு திறத்தவருட் பின்ன வரை நோக்கியிரங்கினார் எனினும் ஆம்.

௪௪. குருடனுக்குக் குருடன் கோல் கொடுத்தல்

அருள்மிகுத்த ஆகமநூல் படித்தறியார்!
கேள்வியையும் அறியார்! முன்னே
இருவினையின் பயனறியார்! குருக்களென்றே
உபதேசம் எவர்க்கும் செய்வார்!
வரம்மிகுத்த தண்டலைநீள் நெறியாரே!
அவர்கிருபா மார்க்கம் எல்லாம்
குருடனுக்குக் குருடன்கோல் கொடுத்துவழி
காட்டிவரும் கொள்கை தானே!

(தொ - ரை.) வரம்மிகுத்த தண்டலை நீள் நெறி யாரே - நன்மைமிக்க தண்டலை நீள்நெறி இறைவரே! அருள்மிகுத்த ஆகமநூல் படித்து அறியார் - (இறைவன்) அருள் மிகுந்த ஆகமநூல்களைக் கற்றறியாதவராகவும், கேள்வியையும் அறியார் - (பெரியோர் கூறும்) கேள்வி யறிவில்லாதவராகவும், முன்னே இருவினையின் பயன் அறியார் - முன்செய்த நல்வினை தீவினைகளின் பயனை அறி யாதவராகவும் (இருந்தும்), குருக்கள் என்றே எவர்க்கும்

உபதேசம் செய்வார் - ஆசிரியர் என யாவர்க்கும் உபதேசம் (சிலர்) செய்கின்றனர். அவர் கிருபா மார்க்கம் எல்லாம் - அவருடைய அருள்நெறியாவும், குருடனுக்குக் குருடன் கோல்கொடுத்து வழிகாட்டிவரும் கொள்கைதானே!

(வி - ரை.) 'குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்—குருடுங் குருடும் குழி வீழ்ந்தவாறே' என்றார் திருமூலர். (திருமந்திரம்: ௧௬௮௦.)

௬௨. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்'

நேற்றுள்ளார் இன்றிருக்கை நிச்சயமோ?
 ஆதலினால், நினைந்த போதே
ஊற்றுள்ள பொருளுதவி அறந்தேடி
 வைப்பதறி வுடைமை அன்றோ?
கூற்றுள்ளம் மலையவரும் தண்டலையா
 ரே! சொன்னேன்! குடபால் வீசும்
காற்றுள்ள போதேவரும் தூற்றிக்கொள்
 வதுநல்ல கருமந் தானே?

(தொ - ரை.) கூற்று உள்ளம் மலையவரும் தண்டலையாரே - (மார்க்கண்டனுக்காக) எமனுடைய மனம் கலங்க வந்தருளிய தண்டலை இறைவரே! எவரும் குடபால் வீசும் காற்று உள்ளபோது தூற்றிக்கொள்வது நல்ல கருமம் தானே? - யாவரும், மேலைக்காற்று வீசும்போதே (தூற்றுவதைத்) தூற்றிக்கொள்வது நல்ல வேலையாகுமன்றோ? நேற்று உள்ளார் இன்று இருக்கை நிச்சயமோ - நேற்றிருந்தவர் இன்று இருப்பது உறுதியோ? ஆதலினால், நினைந்தபோதே ஊற்று உள்ள பொருள் உதவி அறம் தேடிவைப்பது அறிவுடைமை அன்றோ - ஆகையால், உள்ளத்தில் எண்ணம் உண்டானபொழுதே ஆதரவாக உள்ள பொருளைக்கொடுத்து அறத்தைச் சேர்த்து வைத்துக் கொள்வது அறிவுடைமையாகும்.

(வி - ரை.) கூற்று: உடலிலிருந்து உயிரைக் கூறுபடுத்துவோனுக்கு ஆகுபெயர். ஊற்று - ஆதரவு. குடபால் - மேலைத்திசை. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்; கரும்பு உள்ளபோதே ஆடிக்கொள்' என்பன பழமொழிகள்.

சரு. சொர்க்கத்தே போம்போதும்....

வர்க்கத்தார் தமைவெறுத்த விருத்தருமாய்
மெய்ஞ்ஞான வடிவம் ஆனோர்
கற்கட்டா கியமடமும் காணியும்செம்
பொனுந்தேடும் கருமம் எல்லாம்
பொற்கொத்தாம் செந்நெல்வயல் தண்டலையா
ரே! சொன்னேன் பொன்னு டாளும்
சொர்க்கத்தே போம்போதும் கக்கத்தே
ராட்டினத்தைச் சுமந்த வாறே.

(தொ - ரை.) பொன்கொத்தாம் செந்நெல் வயல் தண்டலையாரே - பொன்கொத்துப் போல விளையும் செந்நெல் நிறைந்த வயல்கள் சூழ்ந்த தண்டலையிறைவரே! வர்க்கத்தார் தமைவெறுத்த விருத்தருமாய் மெய்ஞ்ஞான வடிவம் ஆனோர் - உறவினர்களை வெறுத்த முதியவராய் உண்மையறிவே ஒருவடிவம் எனக் காணப்படுவோர், கல்கட்டு ஆகிய மடமும் காணியும் செம்பொனும் தேடும் கருமம் எல்லாம் - கல்லாற் கட்டப்பட்ட மடமும் நிலமும் செம்பொன்னும் சேர்க்கிற வேலையெல்லாம், பொன் நாடு ஆகும் சொர்க்கத்தே போம்போதும கக்கத்தே ராட்டினத்தைச் சுமந்தவாறே - பொன்னுலகாகிய சொர்க்கத்திற்குச் செல்லும்பொழுதும் இராட்டினத்தைக் கக்கத்தில் இடுக்கிச் செல்லும் தன்மையை ஒக்கும்.

(வி - ரை.) இராட்டினம்: நூல் நூற்கும் கருவி. நூல் நூற்பதனாலே கிடைக்கும் வருவாய் சிறிதாகும். அது வறுமையின் அடையாளம். அக்கருவியைப் பொன்னாட்டிற்கும் சுமந்து செல்வது (வறுமையில் உள்ள பற்றைக் காட்டுவதால்) நகைப்புக்கிடமானது. அவ்வாறே பேரின்ப வீட்டிற்குச்செல்லும் நிலையிலுள்ள உண்மை

யுறிவினர் உலகத்தொடர்பாகிய மடமும் பொன்னும் நிலமும் தேடுவது நகைத்தற்குரியதாகும். சொன்னேன்: முன்னிலை அசைச்சொல். 'சோர்க்கத்தே போம்போதும் கக்கத்தே ராட்டினத்தைச் சுமத்தல்' பழமொழி.

௩௪. 'ஏன் கருடா! சுகமா?'

ஆம்பிள்ளாய்! எனக்கொடுக்கும் பெரியோரரை
அடுத்தவர்கள் அவனிக்(கு) எல்லாம்
நாம்பிள்ளாய்! அதிகம்என்புார்! நண்ணாரும்
ஏவல்செய நாளும் வாழ்வார்!
வான்பிள்ளாய்! எனும்மேனித் தண்டலையார்
பூடணமாய் வளர்த்த நாகம்
ஏன்பிள்ளாய்! கருடா! நீ சுகமோ? என்(று)
உரைத்தவிதம் என்ன லாமே!

(தொ - ரை.) பிள்ளாய் ஆம் எனக்கொடுக்கும் பெரியோரை அடுத்தவர்கள் - இளைஞனே! முடியும் என்று அளிக்கும் சான்றோரைச் சார்ந்தவர்கள், பிள்ளாய்! அவனிக்கெல்லாம் நாம் அதிகம் என்பர் - இளைஞனே! உலகிலே நாமே சிறப்புடையேம் என்று நடந்துகொள்வர். நண்ணாரும் ஏவல்செய நாளும் வாழ்வர் - பகைவரும் தொண்டியற்ற எப்போதும் வாழ்ந்திருப்பர். பிள்ளாய் வான் எனும் மேனித் தண்டலையார் பூடணமாய் வளர்த்த நாகம் - பிள்ளாய்! வானமே யெனும் எங்கும் நிறைந்த மேனியை உடைய தண்டலையாரின் அணிகலனாக வளர்க்கப் பெற்ற பாம்பு, 'ஏன் பிள்ளாய் கருடா நீ சுகமோ' என்று உரைத்தவிதம் என்னலாமே - 'என்ன பிள்ளாய்! கருடனே! நீ நலந்தானோ?' என்று வினவிய வகையாக அதனைக் கூறலாம்.

(வி - ரை.) பிள்ளை - இளைஞன். 'பிள்ளை' என்பது விளியேற்றுப் 'பிள்ளாய்!' என ஆகும். வானம் போல எங்கும் நிறைந்தவர் இறைவர். ஆகையால், 'வான் எனும் மேனித் தண்டலையார்' என்றார். கருடனைக்கண்டாற் பாம்பு நடுங்குவது இயற்கை. அது

இறைவனைப் புகலாக அடைந்ததாற் கருடனை எளிமையாக நோக்கி நலன் வினவியது. 'ஏன் கருடா! சுகமா?' என்றால் 'இருக்கும் இடத்திலேயே யிருந்தாற் சுகம்' என்று கூறுவது பழமொழி. பெரியோர் நட்பு வேண்டும் என்பதாம்.

௪௫. புல்லரை அடுக்காதே.

வடியிட்ட புல்லர்தமை அடுத்தாலும்
விடுவதுண்டோ? மலிநீர்க் கங்கை
முடியிட்ட தண்டலைநா தரைப்புகழிற்
பெருவாழ்வு முழுதும் உண்டாம்!
மிடியிட்ட வினைதீரும்! தெய்வமிட்டும்
விடியாமல் வீணர் வாயிற்
படியிட்டு விடிவதுண்டோ? அவரருளே
கண்ணாகப் பற்று வீரே!

(தொ - ரை.) வடியிட்ட புல்லர்தமை அடுத்தாலும் விடுவது உண்டோ - வடிகட்டிய அற்பர்களை அடைந்து வேண்டினும் உன்கவலை நீங்கிவிடுமோ? மலிநீர்க் கங்கை முடியிட்ட தண்டலை நாதரைப் புகழின் முழுதும் பெரு வாழ்வு உண்டாம் - மிகுநீரான கங்கையை முடியிலே சேர்த்த தண்டலை யிறைவரை வாழ்த்தினால் முற்றும் பெரிய ஆக்கம் கிடைக்கும். மிடியிட்ட வினை தீரும் - வறுமையை ஊட்டும் ஊழ்வினை ஒழியும். தெய்வம் இட்டும் விடியாமல் வீணர் வாயில் படியிட்டு விடிவது உண்டோ - தெய்வம் கொடுத்தும் நீங்காத வறுமை யானது புல்லரின் வாயிற்படியை அடைவதால் நீங்கி விடுமோ? (ஆகையால்) அவர் அருளே கண் ஆகப் பற்று வீர் - தண்டலை இறைவரின் திருவருளையே வழியாகப் பிடித்துக்கொள்வீர்.

(வி - ரை.) வடியிட்ட புல்லர்: சிறிதும் நன்மையறியாத புல்லர். புல்லர்தமை: தம்: சாரியை. 'வடியிட்ட' 'படியிட்டு' என்பன மரபு மொழிகள். 'பனிபெய்து குளம் நிறையுமா?' என்பது இங்குப் பொருந்தும் பழமொழி.

௬௬. பூனை பிடித்தது விடுமோ?

பொலியவளம் பலதழைத்த தண்டலைநீள்
நெறிபாதம் போற்றி நாளும்
வலியவலம் செய்தறியீர்! மறம்செய்வீர்?
நமன்தூதர் வந்து கூடி
மெலியவரைந் திடுபொழுது கலக்கண்ணீர்
உகுத்தாலும் விடுவ(து) உண்டோ?
எலியழுது புலம்பிடினும் பூனைபிடித்
தது விடுமோ? என்செய் வீரே?

(நொ-ரை.) பலவளம் பொலியத் தழைத்த தண்டலை நீள்நெறி பாதம் நாளும்போற்றி - பலவகை வளங்களும் அழகுற மிகுந்த தண்டலை நீள்நெறி இறைவர் திருவடிகளை எப்போதும் வாழ்த்தி, வலிய வலம்செய்து அறியீர் - வலிமையுடன் வலம்வந்து அறியமாட்டீர்கள்! (ஆனால்) மறம் செய்வீர் - தீவினை செய்வீர்கள்! நமன் தூதர் வந்து கூடி மெலிய வரைந்திடு பொழுது - எமனுடைய தூதர் வந்து சேர்ந்து (நீங்கள்) சோர்வுறும்படி (வாழ்நாளை) எல்லையிட்டு (அழைக்கும்) பொழுது, கலக்கண்ணீர் உகுத்தாலும் விடுவது உண்டோ - மிகுதியான, கண்ணீர் விட்டாலும் விட்டுச் செல்வது நேருமோ? எலி அழுது புலம்பிடினும் பூனை பிடித்தது விடுமோ - எலி கதறி யழுதாலும் (அதனைப் பிடித்த) பூனை தன் பிடியை விடுமோ? என் செய்வீர் - (எமன்தூதர் அழைக்கும் போது) யாது செய்வீர்?

௬௭. 'நெற்றிவிழி காட்டுகினும் குற்றமே'

மற்றவரோ தமிழ்பாடி நாட்டவல்லார்?
நக்கீரர் வலிய ராகி
வெற்றிபுனை மீனாட்சி சுந்தரநா
யகரடுத்து விளம்பும் போதில்,

பற்றுள்தண் டலைவாழும் கடவுளென் றும்
பாராமற் பயப்ப டாமல்
நெற்றிவிழி காட்டுகினும் குற்றமே
குற்றம்என நிறுத்தி னாரே.

(நொ - ரை.) வெற்றிபுனை மீனாட்சிசுந்தர நாயகர் அடுத்து விளம்பும் போதில் - வெற்றியையுடைய மீனாட்சி சுந்தரேசர் வந்து கூறியபொழுது, நக்கீரர் வலியராகி - நக்கீரர் மொழித்திறன் உடையவராய், பற்று உள தண்டலை வாழும் கடவுள் என்றும் பாராமல் பயப்படாமல் - (தமக்குப்) பற்றாக உள்ள தண்டலை இறைவரென்று நினையாமலும், அஞ்சாமலும், நெற்றிவிழி காட்டுகினும் குற்றம் குற்றமே என நிறுத்தினர் - நெற்றிவிழியைக் காட்டினாலும் குற்றம் குற்றமேயாகும் என நிலை நிறுத்தினர்.

(வி - ரை.) ஏ: ஈற்றசை. 'நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே' என்பது பழமொழி. 'குற்றமே குற்றம்' என்பதைக் குற்றம் குற்றமே' என மாற்றிக்கொள்க.

தருமியென்னும் அந்தணனுடைய வறுமையைத் தீர்க்கச் சோம சுந்தரக் கடவுள் 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் செய்யுளை யெழுதிக் கொடுத்தார். அதனைக் கொண்டுசென்று பாண்டியனிடம் காட்டினான் தருமி. பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணமுண்டென்று தான் நினைத்த கருத்து அச் செய்யுளில் இருப்பது கண்ட பாண்டியன் அதற்கென முடித்திருந்த பொன் முடிப்பைச் சங்கத்தாரிடம் பெற்றுக்கொள்ளச் சொன்னான். சங்கத் தலைவரான நக்கீரர் அச் செய்யுள் குற்றமுடையது என்று திருப்பிவிட்டார். தருமி சோமசுந்தரரிடம் முறையிட்டான். அவர் ஒரு புலவனாக வந்து வினவியபோது 'பெண்களின் கூந்தலுக்கு இயற்கைமணம் உண்டு' என இருப்பதால் அச் செய்யுள் குற்றமுடையது என்றார் நக்கீரர். சிவபிரான் தம் நெற்றிவிழி காட்ட, 'நெற்றிவிழி காட்டினும் குற்றம் குற்றமே' என வாதித்தார். பிறகு, நெற்றிவிழியின் வெம்மையால் தாக்கப்பெற்றுப் பொற்றாமரையில் வீழ்ந்தார். புலவர்கள் வேண்ட, அருள்கூர்ந்து நக்கீரரை வெளியேற்றி அகத்தியரால் இலக்கண முணரச் செய்து திருத்தினர் சிவபிரான்.

௪அ. மாரி பதின்கல நீரிற் கோடையில் ஒருகுடம் நீர் வண்மை

சீரிலகும் தண்டலையார் திருவருளால்
அகமேறிச் செழித்த நாளில்,
பாரியென ஆயிரம்பேர்க்(கு) அன்னதா
னம்கொடுக்கும் பலனைப் பார்க்க,
நேரிடும்பஞ் சந்தனிலே எவ்வளவா
கிலும்கொடுத்தால் நீதி யாகும்.
மாரிபதின் கலநீரிற் கோடைதனில்
ஒருகுடம்நீர் வண்மை தானே.

(பத - ரை.) *மாரி பதின்கலம் நீரில் கோடைதனில் ஒருகுடம் நீர்வண்மை - மழைக்காலத்திற் பத்துக்கலம் நீர் கொடுப்பதினும் வெயிற்காலத்தில் ஒருகுடம் நீர் அளிப்பதே சிறந்த கொடையாகும். (ஆகையால்), சீர் இலகும் தண்டலையார் திருவருளால் அகம்ஏறிச் செழித்த நாளில் - அழகுற விளங்கும் தண்டலையாரின் திருவருளினால் நாடு விளைவுமிகுந்து வளம்பெற்ற காலத்தில், பாரியென ஆயிரம் பேர்க்கு அன்னதானம் கொடுக்கும் பலனைப் பார்க்க - பாரியைப்போல ஆயிரக்கணக்கானவர்களுக்கு உணவுக் கொடையளிக்கும் பலனைநோக்க, நேரிடும் பஞ்சந்தனிலே எவ்வளவு ஆகிலும் கொடுத்தால் நீதிஆகும் - வற்கடம் நேர்ந்த காலத்திலே எவ்வளவு குறைவாகக் கொடுத்தாலும் அதுவே கொடைப்பயன் தரும்.*

(வி - ரை) *வண்மைதானே: தான் ஏ: அசைகள். அகம் - நாடு. அகம்ஏறி - நாடு வளம்பெற்று. பாரி: கொடையிலே சிறந்தவன்; கடையெழுவள்ளல்களில் ஒருவன். பதின்கலம் ஒருகுடம் என்பன பெருமை சிறுமை குறிக்கும் அளவுகள்.*

௪௯. தண்டலையை வணங்கு.

பிறக்கும்போ(து) ஒருபொருளும் கொடுவந்த(து)
இல்லை! உயிர் பிரிந்து மண்மேல்
இறக்கும்போ திலுங்கொண்டு போவதில்லை!
என்றுசும்மா இருந்து வீணே

சிறக்குந்தா யினும்அருள்வார் தண்டலையிற்
சேராமல் தேசம் எல்லாம்
பறக்குங்கா கமதிருக்கும் கொம்பறியா(து)
எனத்திரிந்து பயன்பெ றுரே !

(தொ-ரை.) பிறக்கும்போது ஒருபொருளும் கொடு வந்தது இல்லை - பிறக்குங் காலத்தில் ஒரு பொருளையும் கொண்டு வந்தது இல்லை. உயிர் பிரிந்து மண்மேல் இறக்கும்போதிலும் கொண்டுபோவது இலை - உயிர்நீங்கி உலகத்தில் சாகுங் காலத்திலும் எடுத்துச் செல்வதும் இல்லை. என்று வீணே சும்மா இருந்து - என்று தீவினை செய்யாமல் இருந்து, சிறக்கும் தாயினும் அருள்வார் தண்டலையிற் சேராமல் - சிறப்புடைய அன்னையினும் அருள்புரியும் இறைவனின் தண்டலையை அடையாமல், பறக்கும் காகம் அது இருக்கும் கொம்பு அறியாது என - பறக்கும் இயல்புடைய காகம் தான் அமர்ந்து இருக்க ஒரு கொம்பையும் நிலையாகப் பெறாது என்பதைப் போல, தேசம் எல்லாம் திரிந்து பயன்பெறார் - உலகெங்கும் சுற்றி யலைந்து (சிலர்) நலம் பெறார் (ஆயினர்.)

௫௦. எய்தவர் இருக்க அம்பை நோவதேன்?

வைதிடினும் வாழ்த்திடினும் இன்பதுன்பம்
வந்திடினும் வம்பு கோடி
செய்திடினும் தண்டலைநீள் நெறியார்தம்
செயலென்றே தெளிவ தல்லால்
மெய்தவிர அவர்செய்தார் இவர்செய்தார்
எனநாடி வெறுக்க லாமோ !
எய்தவர்தம் அருகிருக்க அம்பைநொந்த
கருமம்என்ன ? இயம்பு வீரே!

(தொ-ரை.) வைதிடினும் வாழ்த்திடினும் - (பிறர்) இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும், இன்பதுன்பம் வந்திடினும் -

இன்பம் வரினும் துன்பம் வரினும், வம்புகோடி செய்திடினும் - கோடிக்கணக்காக வஞ்சகம் (பிறர்) செய்தாலும், தண்டலைநீள் நெறியார்தம் செயல் - (அவை) தண்டலைநீள் நெறியாரின் அருள், என்றே தெளிவது அல்லால் - எனவே தெளிவடைவது அன்றி, மெய்தவிர - உண்மை நீங்க, அவர் செய்தார் இவர் செய்தார் எனநாடி வெறுக்கலாமோ - அவர் செய்தார் இவர் செய்தார் என்று ஆராய்ந்து அவர்களை வெறுத்தல் நலமோ? எய்தவர் தம் அருகு இருக்க அம்பை நொந்த கருமம் என்ன இயம்புவீர் - (அம்பை) விடுத்தவர் தம் பக்கத்தில் இருக்கும் போதும் அம்பை நோவது என்ன காரியம்? சொல்லுவீர்.

(வி - ரை.) அவரவர் செய்வினையே அவரவர் நுகரும் பயனாக முடிவதால், அப்பயனை யேற்கும் நெறியாளரான பிறரை நோவதால் ஏதும் பயனில்லை; அதனை ஊட்டும் தண்டலையாரின் செயலென்றே கொள்ளல் வேண்டும். 'எய்தவன் இருக்க அம்பை நோவது ஏன்?' என்பது பழமொழி.

ரு௩. சாங்காலம் சங்கரா!

வாங்காலம் உண்டசெழுந் தண்டலையார்
அடிபோற்றி வணங்கி நாடிப்
போங்காலம் வருமுன்னே புண்ணியம் செய்(து)
அரியகதி பொருந்து றாமல்
ஆங்காலம் உள்ளதெல்லாம் விபசாரம்
ஆகிஅறி வழிந்து வீணே
சாங்காலம் சங்கரா! சங்கரா!
எனின்வருமோ தருமந்தானே!

(தொ - ரை.) வாங்கு ஆலம் உண்ட செழுந்தண்டலையார் அடிபோற்றி வணங்கி நாடி - எடுத்த நஞ்சினைப் பருகிய, வளமிக்க தண்டலையாரின் திருவடியைக் கும்பிட்டு ஆராய்ந்து, போங்காலம் வரும் முன்னே புண்ணியம் செய்து அரியகதி பொருந்துறாமல் - இறக்குங் காலம் வருவ

தற்கு முன்னே நலம் புரிந்து சிறந்த நிலையை அடையாமல், ஆம்காலம் உள்ளது எல்லாம் விபசாரம் ஆகி அறிவு அழிந்து - வாழும் நாள் உள்ளவரைக்கும் தீய ஒழுக்கத்துடன் அறிவு கெட்டிருந்து, சாம்காலம் வீணே சங்கரா சங்கரா எனின் தருமம் வருமோ - இறக்கும்போது வீணுகச் சங்கரா! சங்கரா! என வேண்டின் நன்னெறி கிடைத்திடுமோ?

(வி - ரை.) வாழ்நாளில் ஒருவனுக்கு எதன்மேல் மிகுந்த விருப்பம் உளதோ அதுவே இறுதியில் அவன் நினைவில் இருக்கும். ஆகையால், வாழ்நாள் முழுதும் இல்லாத சிவநினைவு இறுதியில் வராது. மற்றும் வாழ்நாள் முழுதும் தவறு செய்தவன் அதன் பயனை நுகர்ந்தே ஆகவேண்டும். ஆதலாலும், சாங்காலம் சங்கரா! சங்கரா! என வேண்டிற் பயன்பெறல் ஒண்ணுது. 'சாங்காலத்திற் சங்கரா என்றால் முடியுமோ' என்பது பழமொழி.

ருஉ. பெற்றதாய் பசித்திருக்க........

சுற்றமாய் நெருங்கியுள்ளார் தனையடைந்தார்
கற்றறிந்தார் துணைவே றில்லார்
உற்றவே தியர் பெரியோர்க் குதவியன்றிப்
பிறர்க்குதவும் உதவி யெல்லாம்
சொற்றநான் மறைபரவும் தண்டலையா
ரே! சொன்னேன்! சுமந்தே நொந்து
பெற்றதாய் பசித்திருக்கப் பிராமணபோ
சனம் நடத்தும் பெருமை தானே.

(தொ - ரை.) சொற்ற நான்மறை பரவும் தண்டலையாரே - கூறப்பட்ட நான்கு மறைகளும் போற்றும் தண்டலையாரே! சுற்றமாய் நெருங்கியுள்ளார் தனை அடைந்தார் கற்று அறிந்தார் துணைவேறு இல்லார் உற்ற வேதியர் பெரியோர்க்கு உதவியன்றி - உறவினராக நெருங்கியவர்களும் தன்னைச் சார்ந்தவர்களும் படித்துணர்ந்தவர்களும் வேறு சார்பு இல்லாதவர்களும் வந்த அந்தணர்களும் பெரியோர்களும் ஆகியவர்கட்கு உதவாமல், பிறர்க்கு

உதவும் உதவியெல்லாம் - மற்றவர்களுக்கு உதவும் உதவி கள் யாவும், சுமந்தே நொந்து பெற்ற தாய் பசித்திருக்கப் பிராமண போசனம் நடத்தும் பெருமைதானே - சுமந்து வருந்தி ஈன்ற அன்னை பசியுடன் (வாடி) இருக்கும் போது அந்தணர்களுக்கு உணவு படைக்கும் பெருமையே யாகும்.

(வி - ரை.) "பெற்றதாய் பசியுடன் இருக்க பிராமண போசனமா" 'தன்னைப் பெற்ற தாயார் கிண்ணிப் பிச்சையெடுக்கிறார்! பிள்ளை கோதானம் செய்கிறன்' என்பவை பழமொழிகள். சொன்னேன்: முன்னிலை அசைசசொல்.

ருரு. 'நல்லமாட்டுக்கு ஓர் அடி!

துன்மார்க்கர்க்(கு) ஆயிரந்தான் சொன்னாலும்
மறந்துவிட்டுத் துடுக்கே செய்வார்;
சன்மார்க்கர்க்(கு) ஒருவார்த்தை சொலும்அளவே
மெய்யதனில் தழும்பாக் கொள்வார்!
பன்மார்க்க மறைபுகழும் தண்டலையா
ரே! சொன்னேன்! பதமே யான
நன்மாட்டுக்(கு) ஓரடியாம்! நற்பெண்டிர்க்(கு)
ஒருவார்த்தை நடத்தை ஆமே.

(நோ - ரை.) பல்மார்க்க மறைபுகழும் தண்டலையாரே - பல நெறியினும் உள்ள மறைகள் போற்றும் தண்டலையாரே! பதம் ஆன நல் மாட்டுக்கு ஓர் அடி ஆம் - பக்குவமான நல்ல மாட்டுக்கு ஒரே அடி (திருந்துவதற்குப்) போதும். நல் பெண்டிர்க்கு ஒரு வார்த்தை நடத்தை ஆம் - நல்ல மாதர்க்கு ஒரு மொழியாலேயே நன்னடை வரும். (அவ்வாறே) சன்மார்க்கர்க்கு ஒரு வார்த்தை சொலும் அளவே மெய்யதனில் தழும்பாக் கொள்வார் - நன்னெறியாளர்க்கு ஒரு சொல் சொன்ன அவ்வளவிலே உடம்பிலே வடுவாக நினைப்பார்கள். துன்மார்க்கர்க்கு ஆயிரந்தான் சொன்னாலும் மறந்துவிட்டுத் துடுக்கே செய்வார் - தீ

கொடியவர்களுக்கு ஆயிரம் அறிவு புகட்டினும் மறந்துபோய்த் தீவினையே புரிவார்கள்.

(வி - ரை.) 'நல்லமாட்டுக்கு ஒரடி! நல்ல மனிதனுக்கு ஒரு சொல்' என்பது பழமொழி.

ருச. 'இரப்பார்க்கு வெண்சோறு பஞ்சமோ?'

கரப்பார்க்கு நல்லகதி வருவதில்லை!
செங்கோலிற் கடல்சூழ் வையம்
புரப்பார்க்கு முடிவிலே சுவர்க்கமல்லால்
நரகமில்லை! பொய்யி தன்றால்!
உரப்பார்க்கு நலம்புரியும் தண்டலையா
ரே! சொன்னேன்! ஒருமை யாக
இரப்பார்க்கு வெண்சோறு பஞ்சமுண்டோ?
ஒருங்காலும் இல்லை தானே!

(நொ - ரை.) உரப்பார்க்கு நலம்புரியும் தண்டலையாரே - அறிவாளிகட்கு நன்மையருளும் தண்டலையாரே! ஒருமையாக இரப்போர்க்கு வெண்சோறு பஞ்சம் உண்டோ - ஒரு தலையாகப் பிச்சையெடுப்போர்க்கு வெறுஞ் சோற்றுக்கும் பஞ்சமா? ஒருக்காலும் இல்லை - எப்போதும் இராது. (அதுபோல), கரப்பார்க்கு நல்ல கதி வருவது இல்லை - வஞ்சகர்க்கு நல்ல நிலை கிடைப்பதில்லை. கடல்சூழ் வையம் செங்கோலின் புரப்பார்க்கு முடிவிலே சுவர்க்கம் அல்லால் நரகம் இல்லை - கடலாற் சூழப்பட்ட உலகத்திலே செங்கோலால் ஆட்சிசெய்வார்க்கு இறுதியிலே சுவர்க்கமேயன்றி நரகம் வராது. இது பொய் அன்று - இது பொய்யாகாது.

(வி - ரை.) உரம் - அறிவு. உரம் பார் - அறிஞர் உலகம். (உரம்+பார்=உரப்பார்) 'உரவார்க்கு' என்பது எதுகை நோக்கி 'உரப்பார்க்கு' என ஆயது என்றும் கூறலாம். கரவு - மறைவு. உள்ளத்திலே ஒன்றும் வெளியிலே ஒன்றுமாகக் கரப்போர் வஞ்சகர். 'இரப்பான் சோற்றுக்கு வெண்சோறு பஞ்சமா?' என்பது பழமொழி.

ருரு. கொடுங்கோல் மன்னவன் நாட்டின்........

படுங்கோலம் அறியாமல் தண்டலையார்
திருப்பணிக்கும் பங்கம் செய்வார்!
நெடுங்கோளும் தண்டமுமாய் வீறுர
வீணனைப்போல் நீதி செய்வார்!
கெடுங்கோபம் அல்லாமல் விளைவுண்டோ?
மழையுண்டோ? கேள்வி யுண்டோ?
கொடுங்கோல்மன் னவன்நாட்டிற் கடும்புலிவா
ழுங்காடு நன்றென் பாரே!

(**நொ-ரை.**) *படும் கோலம் அறியாமல் தண்டலையார் திருப்பணிக்கும் பங்கம் செய்வார் - அடையப்போகும் தன்மையை உணராமல் தண்டலையாரின் திருத்தொண்டுக்கும் குறைவுபுரிவார்கள். வீறுர வீணனைப்போல் நெடுங் கோளும் தண்டமுமாய் நீதிசெய்வார் - வீறுர வீணன் என்பானைப்போலப் பெரிய கொலையும் தண்டனையுமாக அரசியல் புரிவர். (இதனால்) கெடும்கோபம் அல்லாமல் விளைவு உண்டோ மழை உண்டோ கேள்வி உண்டோ - (தம்மைக் கெடுக்கும்) சீற்றமேயன்றி நாட்டில் விளைவும் மழையும் கேள்விமுறையும் இருக்குமோ? கொடுங்கோல் மன்னவன் நாட்டில் கடும்புலிவாழும் காடு நன்றென்பார்- முறைதவறிய அரசன் வாழும் நாட்டில் வாழ்வதினும் கொடிய புலி வாழும் காடு நலந்தரும் என்று அறிஞர் கூறுவர்.*

(**வி.- ரை.**) *கோள் - கொலை. அரசன் ஆட்சி நன்றுயிருப்பின் மழை பெய்து விளைவு பெருகி நாடு வளமுற்றிருக்கும். இன்றேல் இவை அழியும் என்று உலகம் கூறும். '**கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில் - கடும்புலி வாழும் காடும் நன்றே**' என்று வெற்றி வேற்கை கூறும்.*

வீணன் : வீறுர என்னும் ஆற்றை வெட்டியவன்.

ருசு. கெடுபவர்; கெடாதார்!

உள்ளவரைக் கெடுத்தோரும் உதவியற்று
வாழ்ந்தோரும் உறைபெற் றோரும்
தள்ளிவழக்(கு) உரைத்தோரும் சற்குருவைப்
பழித்தோரும் சாய்ந்தே போவார்!
பள்ளவயல் தண்டலையார் பத்தரடி
பணிந்தோரும் பாடி னோரும்
பிள்ளைகளைப் பெற்றோரும் பிச்சையிட்ட
நல்லோரும் பெருகு வாரே.

(தொ - ரை.) பள்ளவயல் தண்டலையார் பத்தர் அடி பணிந்தோரும் பாடினோரும் - பள்ளமான வயல்களையுடைய தண்டலையாரின் அடியவர் அடிகளை வணங்கினவரும் பாடினவரும், பிள்ளைகளைப் பெற்றோரும் - குழந்தைகளைப் பெற்றவர்களும், பிச்சையிட்ட நல்லோரும் - இரந்தவர்க்குக் கொடுத்தவர்களும், பெருகுவார் - (வாழ்வில்) மேம்படுவார்கள், உள்ளவரைக் கெடுத்தோரும் - (செல்வம்) உடையவர்களுக்குத் தீங்கு செய்தவர்களும், உதவி அற்று வாழ்ந்தோரும் - (பிறர்) துணையை நாடாமல் வாழ்கின்றவர்களும், உறைபெற்றோரும் - (பொய்வழக்குச்) செல்வம் பெற்றவரும், வழக்கு தள்ளி உரைத்தோரும் - வழக்கிலே நடுநிலை நீங்கிக் கூறியவர்களும், சற்குருவைப் பழித்தோரும் - நல்லாசிரியரை இகழ்ந்தவர்களும், சாய்ந்தே போவார்-கெட்டே போவார்கள்.

ருஎ. அற்பருக்கு வாழ்வுவந்தால்........

விற்பனர்க்கு வாழ்வுவந்தால் மிகவணங்கிக்
கண்ணோட்டம் மிகவும் செய்வார்!
சொற்பருக்கு வாழ்வுவந்தால் கண்தெரியா(து)
இறுமாந்து துன்பம் செய்வார்!

பற்பலர்க்கு வாழ்வுதரும் தண்டலையா
　　ரே ! சொன்னேன் ! பண்பில் லாத
அற்பருக்கு வாழ்வுவந்தால் அர்த்தராத்
　　திரி குடைமேல் ஆகும்தானே !

(தொ - ரை.) பற்பலர்க்கு வாழ்வுதரும் தண்டலை யாரே - பலதுறைப்பட்டவர்களுக்கும் வாழ்வைபருளும் தண்டலையாரே ! விற்பனர்க்கு வாழ்வுவந்தால் மிக வணங்கி மிகவும் கண்ணோட்டம் செய்வார் - அறிவாளிகளுக்கு வாழ்வு நேர்ந்தால் மிகவும் வணக்கமாக யாரிடத்திலும் நாகரிகமாக நடந்துகொள்வர் ; சொற்பருக்கு வாழ்வு வந்தால் கண்தெரியாது இறுமாந்து தன்பம் செய்வார் - அறிவிலார்க்கு வாழ்வுநேரின் எதனையும் நோக்காமல் செருக்குடன் யாவருக்கும் இடையூறு செய்வார்கள்; பண்பு இல்லாத அற்பருக்கு வாழ்வுவந்தால் அர்த்தராத்திரி குடைமேல் ஆகும் - நற்குணம் இல்லாத கீழ்மக்களுக்கு வாழ்வு கிடைத்தால் நள்ளிரவிலே தலைக்குமேற் குடை இருக்கும்.

(வி - ரை.) ஆகுந்தானே: தான் ஏ: அசைகள். கண்ணோட்டம்: தம்மிடம் பழகியவர் செய்யும் தவறுகளைப் பொறுத்தல். அதுவே நாகரிகம். 'பெயக்கண்டும் நஞ்சு உண்டு அமைவர், நயத் தக்க - நாகரிகம் வேண்டுபவர்' என்பர் திருவள்ளுவர். 'அற்பருக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியிற் குடைபிடிப்பர்' என்பது பழமொழி.

ருஅ. பசுவினையே வதை செய்து........

விசையம்மிகும் தண்டலையார் வளநாட்டில்
　　ஒருத்தர் சொல்லை மெய்யாய் எண்ணி
வசைபெருக அநியாயம் செய்துபிறர்
　　பொருளையெலாம் வலிய வாங்கித்
திசைபெருகும் கீர்த்தியென்றும் தன்மம் என்றும்
　　தானம்என்றும் செய்வ(து) எல்லாம்
பசுவினையே வதை செய்து செருப்பினைத்தா
　　னங்கொடுக்கும் பண்பு தானே !

(தொ - ரை.) விசையும் மிகும் தண்டலையார் வளநாட்டில் ஒருத்தர் சொல்லை மெய்யாய் எண்ணி - வெற்றியில் மேம்பட்ட தண்டலையாரின் வளமிகுந்த நாட்டிலே ஒருவர் கூறுவதையே உண்மையென்று நம்பி, வசைபெருகப் பிறர் பொருளை அநியாயம் செய்து வலிய வாங்கி - பழி வளரும்படி மற்றோர் செல்வத்தை ஒழுங்கல்லாதன செய்து வற்புறுத்திக் கவர்ந்து, திசைபெருகும் கீர்த்தியென்றும் தன்மம் என்றும் தானம் என்றும் செய்வது எல்லாம் - எட்டுத்திக்கிலும் வளரும் புகழ்ச் செயலெனவும், அறம் எனவும், தானம் எனவும் புரிந்து வாழும் இச்செயல்கள் யாவும், பசுவினையே வதைசெய்து செருப்பினைத் தானம் கொடுக்கும் பண்புதானே - ஆவினைக்கொன்று (அதன் தோலால் தைக்கப்பட்ட) செருப்பைத் தானங் கொடுத்த தன்மையே.

(வி - ரை.) விசயம் என்பது எதுகை நோக்கி 'விசையம்' என ஆயிற்று. விசயம்: விஜயம் என்ற வடசொல்லின் தற்பவம். 'பசுவைக் கொன்று செருப்பைத் தானங்கொடுத்தல்' என்பது பழமொழி.

௫௧. சிறியோர் பெரியோராகார்

சிறியவராம் முழுமூடர் துரைத்தனமாய்
உலகாளத் திறம்பெற் றாலும்
அறிவுடையார் தங்களைப்போற் சற்குணமும்
உடையோர்கள் ஆக மாட்டார்!
மறிதரும்மான் மழுவேந்தும் தண்டலையா
ரே! சொன்னேன்! வாரி வாரிக்
குறுணிமைதான் இட்டாலும் குறிவடிவம்
கண்ணாகிக் குணம்கொ டாதே!

(தொ - ரை.) மறி தரும் மான் மழு ஏந்தும் தண்டலையாரே-மறித்து நோக்கும் மானையும் மழுவையும் கொண்டவரே! தண்டலையாரே! வாரிவாரிக் குறுணி மைதான் இட்

டாலும் குறிவ்டிவம் கண் ஆகிக் குணம் கொடாதே— குறுணி மைமை வாரிவாரித் தடவினாலும் கண்போன்று எழுதிய ஓவியம் கண் ஆகி நலம் தராது. (அதுபோல), சிறியவராம் முழுமூடர் திரைத்தனமாய் உலகு ஆளத் திறம்பெற்றாலும் - அற்பராகிய முழுமூடர்கள் அரசியலிற் கலந்து நாட்டைக் காக்கும் வகையடைந்தாலும், அறிவுடையார் தங்களைப்போல் சற்குணமும் உடையோர்கள் ஆகமாட்டார் - அறிவுடையவரைப் போல நற்பண்பும் உடையவர்களாக மாட்டார்கள்.

(வி - ரை.) 'பொய்படும் ஒன்றோ? புனைபூணும்! கையறியாப் பேதை வினைமேற் கொளின்' என்றார் வள்ளுவரும்.

கூ0. பிச்சைச் சோற்றினுக்குப் பேச்சில்லை

கற்றவர்க்குக் கோபமில்லை! கடந்தவர்க்குச்
சாதியில்லை! கருணை கூர்ந்த
நற்றவர்க்கு விருப்பமில்லை! நல்லவருக்(கு)
ஒருகாலும் நரகம் இல்லை!
கொற்றவருக்(கு) அடிமையில்லை! தண்டலையார்
மலர்ப்பாதம் கும்பிட்(டு) ஏத்தப்,
பெற்றவர்க்குப் பிறப்பில்லை! பிச்சைச்சோற்
றினுக்கில்லை பேச்சுந் தானே.

(தெள - ரை.) கற்றவர்க்குக் கோபம் இல்லை - படித்தவருக்குச் சினம் இல்லை. கடந்தவர்க்குச் சாதி இல்லை - துறவிகட்குச் சாதி இல்லை. கருணை கூர்ந்த நற்றவர்க்கு விருப்பம் இல்லை - அருள் மிகுந்த நல்ல தவத்தினர்க்குப்பற்றில்லை, ஒருகாலும் நல்லவர்க்கு நரகம் இல்லை - எப்போதும் நல்லவர்களுக்கு நரகமில்லை. கொற்றவருக்கு அடிமையில்லை - அரசர்கள் (பிறர்க்கு) அடிமையாவது இல்லை. தண்டலையார் மலர்ப்பாதம் கும்பிட்டு ஏத்தப் பெற்றவர்க்குப் பிறப்பு இல்லை - தண்டலையாரின் மலரடியை வணங்கி வாழ்த்தும் பேறு பெற்றவர்கட்குப் பிறவித்துன்

பம் இல்லை: பிச்சைச் சோற்றினுக்குப் பேச்சு இல்லை இரந்து உண்ணும் உணவுக்கு எந்தப்பேச்சும் இல்லை.

(வி - ரை.) பேச்சுத்தானே: தான் ஏ: அசைநிலைகள். திருடுதல், பொய்சொல்லல் முதலான தொழில்கள் பிறரை வஞ்சிப்பனவ ஆகையாலும் அவற்றினும் பிச்சை யெடுத்தல் இழிவானதாகக் கருதப் படாமையாலும், 'பிச்சைச்சோற்றினுக்கில்லை பேச்சுத்தானே' என்றார். ஆகவே, 'நல்லாறு எனினும் கொளல் தீது' என்ற வள்ளுவர் வாக்குக்கும் 'ஏற்பது இகழ்ச்சி' என்ற ஔவையார் கூற்றுக்கும் முரண்பட்டதாகாது.

சுக. குரங்கின் கையில் நறும் பூமாலை

பரங்கருணை வடிவாகும் தண்டலையார்
    வளநாட்டிற் பருவம் சேர்ந்த
சரங்குலவு காமகலை தனையறிந்த
    அதிரூபத் தையலாரை
வரம்புறுதா ளாண்மையில்லா மட்டிகளுக்
    கே கொடுத்தால் வாய்க்கு மோதான்?
குரங்கினது கையில் நறும்பூமாலை
    தனைக்கொடுத்த கொள்கை தானே!

(தொ - ரை.) பரங்கருணை வடிவு ஆகும் தண்டலையார் வளநாட்டில் - உயர்வான அருள் உருவாகிய தண்டலையாரின் வளமிக்க நாட்டினில், பருவம் சேர்ந்த காமசரம் குலவு கலைதனை அறிந்த அதிரூபத் தையலாரை - (மங்கைப்)பருவம் அடைந்த இன்பக்கலை பழகும் கலையைத் தெரிந்த பேரழகுடைய பெண்களை, வரம்பு உறு தாளாண்மை இல்லா மட்டிகளுக்கே கொடுத்தால் வாய்க்குமோ - கட்டுப்பாட்டில் அடங்கிய முயற்சியற்ற மூடர்களுக்குத் துணைவியராக்கினாற் பொருத்தமாகுமோ? குரங்கினது கையில் நறும்பூமாலைதனைக் கொடுத்த கொள்கை தானே - (அவ்வாறு ஆக்கினால்) குரங்கின் கையிலே மணமுள்ள மலர் மாலையை அளித்த கொள்கையைப்போலாகும்.

(வி - ரை.) பரம் - உயர்வு. தாளாண்மை - முயற்சி. வரம்பு என்பது ஒழுக்கத்தினைக் குறிக்கிறது. 'குரங்கின் கையிற் கொடுத்த பூமாலை' என்பது பழமொழி.

[illegible]. அரிசியுண்டேல் வரிசையுண்டாம்!

பிரசம்உண்டு வரிபாடும் தண்டலையார்
　　வளநாட்டிற் பெண்க ளோடு
சரசம்உண்டு! போகம்உண்டு! சங்கீதம்
　　உண்டு!சுகம் தானே உண்டிங்(கு)
உரைசிறந்த அடிமையுண்டோ? [1]இடுக்கணுண்டோ?
　　ஒன்றும் இல்லை! உலகுக் கெல்லாம்
அரிசியுண்டேல் வரிசைஉண்டாம்! அக்காளுண்
　　டாகில் மச்சான் அன்புண் டாமே!

(தொ - ரை.) வரிபிரசம் உண்டு பாடும் தண்டலையார் வளநாட்டில் - வண்டுகள் தேனைப் பருகிப் பாடுகின்ற தண்டலையாரின் வளம் பொருந்திய நாட்டிலே, பெண்க ளோடு - பெண்களாலே, சரசம் உண்டு - இனிய பண்பு உண்டாகும். போகம் உண்டு - பொருள் உண்டாகும். சங்கீதம் உண்டு - இசையின்பம் உண்டாகும். சுகம்தானே உண்டு - நலமும் கிடைக்கும். இங்கு உரைசிறந்த அடிமை உண்டோ? - இவ் வாழ்விற் பேச்சிற் சிறந்த அடிமைத் தன்மை உண்டோ? இடுக்கண் உண்டோ - துன்பம் உண்டோ? ஒன்றும் இல்லை - யாதும் இல்லை. உலகுக்கு எல்லாம் அரிசி உண்டேல் வரிசை உண்டாம் - உலகத்திற் கெல்லாம் அரிசி யிருந்தாற் சிறப்பு உண்டு. அக்காள் உண்டாகில் மச்சான் அன்பு உண்டாம் - தமக்கை யிருந் தால் (அவள் மூலம்) மைத்துனன் அன்புகிடைக்கும்.

(வி - ரை.) பிரசம் - தேன். வரி - வண்டு. போகம்: அநுபவப் பொருள்கள். இல்லாளே இல்லத்துக்கு வேண்டியவற்றை ஒழுங்குசெய்து வைப்பவளாகையால் அவளிருந்தாற் பொருள் உண்டு என்றார். அரிசி செல்வத்தைக் குறிக்கும். '**அக்காள் இருந்தால் மச்சான் உறவு உண்டு**' என்பது பழமொழி. 'உரை சிறந்த அடிமை' என்பது வஞ்சப் புகழ்ச்சி (புகழ்வதுபோலப் பழித்தல்.)

---

1. 'இடுக்கம் உண்டோ' என்றும் பாடம்.

௬௩. முழுப் பூசணிக்காய் மறைத்தல்.

தத்தைமொழி உமைசேரும் தண்டலையார்
பொன்னிவளம் தழைத்த நாட்டில்
வித்தகமந் திரியில்லாச் சபைதனிலே
நீதியில்லை! வேந்தர்க் கெல்லாம்
புத்திநெறி நீதிசொல்ல மந்திரியில்
லாதொருவர் போதிப் பாரோ?
நித்தலுமுண் சோற்றில்முழுப் பூசணிக்காய்
மறைத்ததுவும் நிசம தாமே!

(தொ - ரை.) தத்தைமொழி உமைசேரும் தண்டலையார் பொன்னிவளம் தழைத்த நாட்டில் - கிளியெனப் பேசும் உமையம்மை (இடப்பாகத்தில்) அமரும் தண்டலையாரின் காவிரி வளங்கொழிக்கும் (சோழ) நாட்டில், வித்தக மந்திரி இல்லாச் சபைதனிலே மேன்மை இல்லை - அறிவுடைய அமைச்சன் இல்லாத அவையிலே உயர்வு உண்டாகாது. வேந்தர்க்கு எல்லாம் புத்தி நெறி நீதி சொல்லும் மந்திரி அல்லாது ஒருவர் போதிப்பாரோ - அரசர்க்கெல்லாம் அறிவுரையும் அரசியல் நெறியும் அரசு முறைமையைக் கற்பிக்கும் அமைச்சனையன்றி ஒருவர் கற்பிப்பாரோ? நித்தலும் உண் சோற்றில் முழுப் பூசணிக்காய் மறைத்ததுவும் நிசமதாகும் - நாள்தோறும் உண்ணும் உணவிலே முழுப் பூசணிக்காயை மறைத்ததுவும் (அமைச்சனில்லா அரசவையிலே) உண்மையாக முடியும்.

(வி - ரை.) 'முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முடியுமோ?' என்பது பழமொழி.

௬௪. 'பூசை வேளையிலே கரடி

நேசமுடன் சபையில்வந்தால் வேளையறிந்(து)
இங்கிதமா யிருபர் முன்னே
பேசுவதே உசிதம்அல்லால் நடுவில்ஒரு
வன்குழறிப் பேசல் எல்லாம்

வாசம்மிகுந் தண்டலைநீள் நெறியாரே
அபிடேக மலிநீ ராட்டிப்
பூசைபண்ணும் வேளையிலே காடியைவிட்(டு)
ஒட்டுவது போலுந் தானே.

(நேர - ரை.) வாசம் மிகும் தண்டலைநீள் நெறியாரே - மணம் சிறந்த தண்டலைநீள் நெறியிறைவரே! சபையில் வந்தால் நிருபர்முன்னே நேசமுடன் வேளை அறிந்து இங்கிதம் ஆ - அரசவையிலே சென்றால் அரசருக்கு எதிரில் அன்பையும் காலத்தையும் அறிந்து குறிப்பாக, பேசுவதே உசிதம் - (தன் வேண்டுகோளை) விண்ணப்பித்துக் கொள்வதே நலந்தரும். அல்லால் நடுவில் ஒருவன் குழறிப் பேசல் எல்லாம் - அவ்வாறின்றி இடையிலே ஒருவன் தடுமாறிக் கூறுவன யாவும், அபிடேகம் மலிநீர் ஆட்டிப் பூசைபண்ணும் வேளையிலே - திருமஞ்சனமாக நிறைந்த நீரை ஆட்டி வழிபாடு செய்யும் நேரத்தில், காடியை விட்டு ஒட்டுவதுபோலும் - காடியை (அவிழ்த்து) விட்டு ஒட்டுவது போலாகும்.

(வி - ரை.) இங்கிதம் - குறிப்பு. 'இங்கிதம் ஆக' என்பது 'இங்கிதம் ஆ' எனக் கடைக் குறையாயிற்று. 'சிவபூசை வேளையிற் காடி வந்ததுபோல' என்பது பழமொழி.

௬௫. தன்வினை தன்னைச்சுடும்

மண்ணுலகிற் பிறர்குடியை வஞ்சனையிற்
கெடுப்பதற்கு மனத்தி னாலே
உன்னிடினும் உரைத்திடினும் அவன்றனே
கெடுவன்என்ப(து) உண்மை அன்றோ?
தென்னவன்சோ ழன்பணியும் தண்டலைநீள்
நெறியாரே! தெரிந்து செய்யும்
தன்வினைதன் னைச்சுடவோட் டப்பம்வீட்
டைச்சுடவுஞ் தான்கண் டோமே.

(தொ - ரை.) தென்னவன் சோழன் பணியும் தண்டலைநீள் நெறியாரே - பாண்டியனும் சோழனும் வழிபடும் தண்டலைநீள் நெறியாரே! மண்ணுலகில் பிறர் குடியை வஞ்சனையிற் கெடுப்பதற்கு - நிலவுலகிலே மற்றவர் குடும்பத்திற்கு வஞ்சனையாலே கெடுதி செய்வதற்கு, மனத்தினாலே உன்னிடினும் உரைத்திடினும் அவன்தானே கெடுவன் என்பது உண்மை அன்றோ - உள்ளத்திலே நினைத்தாலும், (வாயினாற்) கூறினாலும் அவனே அழிவான் என்பது வாய்மையாகும். தெரிந்து செய்யும் தன்வினை தன்னைச்சுட - (தீமை என) அறிந்தும் செய்கின்ற தன்வினை தன்னை எரிக்கவும், ஒட்டப்பம் வீட்டைச் சுடவும்தான் கண்டோம் - ஒட்டடை வீட்டை யெரிக்கவும் கண்டிருக்கிறோம்.

(வி - ரை.) ஒட்டப்பம் வீட்டைச்சுடல்: பட்டினத்தார் துறவு பூண்டபின், வெறியர்போல ஊரைச் சுற்றிக்கொண்டிருந்தாராம். அவருடைய உடன்பிறந்தாள் அவருடைய அருமையின் உயர்வை உணராதவளாய், தங்களைப் பிறர் பழிப்பதாக நினைத்து, இவரைக் கொன்றுவிட நினைத்தாள். தன் வீட்டிற்கு வந்தபோது நஞ்சு கலந்து சுட்டுவைத்திருந்த ஒட்டடையை அவருக்குக் கொடுத்தாள். அவர் அந்த அடையை வீட்டின்மீது எறிந்து, 'தன்வினை தன்னைச்சுட! ஒட்டப்பம் வீட்டைச்சுட!' என எறிந்தார். உடனே வீடு எரிந்ததாம். அன்றுமுதல் இது பழமொழியாக வழங்குகிறது என்பர். 'கெடுவான் கேடுநினைப்பான்' என்னும் பழமொழியும் இங்குப் பொருந்தும்.

௬௯. தாயைப் பழித்து மகள்........

முன்பெரியோர் தொண்டுபட்டு நடந்தவழி
தனைப்பழித்து, முரணே பேசிப்
பின்பலரை உடன்கூட்டி நூதனமா
நடத்துவது பிழைபா(டு) எய்தில்
துன்பறியாக் கதியருளும் தண்டலைநீள்
நெறியாரே! தூயள் ஆகி
அன்புளதா யைப்பழித்து மகள்ஏதோ
செயத்தொடங்கும் அறிவு தானே.

(தெ - ரை.) துன்பு அறியாக் கதி அருளும் தண்டலை நீள் நெறியாரே - துன்பம் காணாத நற்கதியைக் கொடுக்கும் தண்டலைநீள் நெறியாரே, முன் பெரியோர் தொண்டுபட்டு நடந்த வழிதனைப் பின்பழித்து முரணே பேசி - முற்காலத்திற் பெரியோர்கள் பழமையாக ஒழுகிய நெறியைப் பிற்காலத்தே இகழ்ந்து மாறு கூறி, பலரை உடன்கூட்டி நூதனம் ஆ(க) நடத்துவது பிழைபாடு எய்தில் - பலரை ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு புதுமையாக ஒன்றைச் செய்வது கைகூடாவிட்டால், தூயள் ஆகி அன்பு உள தாயைப் பழித்து - நன்னெறியுடையவளும் அன்புடையவளும் ஆன அன்னையை இகழ்ந்து கூறி, மகள் ஏதோ செயத் தொடங்கும் அறிவுதானே - (அவள்) மகள் தவறான நெறியிலே செல்லத்துவக்கும் அறிவு போலவே ஆகும்.

(வி - ரை.) காலநிலைக்கேற்பப், 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' ஆயினும் முன்பு தூயதாக இருந்த பெரியோர் நெறி இப்போதும் தூயதாக இருந்தாற் பழமையை விரும்பாதவர்கள் அதை யிகழ்ந்து கூறுவதும் புதுநெறி புதுப்பிப்பதும் தகாதென்பது கருத்து. தொண்டு - பழமை. 'தாயைப் பழித்து மகள் அவிசாரி யானாளாம்' என்பது பழமொழி.

௬௭. வெண்ணெய் இருக்க நெய்தேடல்!

தண்ணமரும் மலர்ச்சோலைத் தண்டலைநீள்
நெறியே! நின் தன்னைப் பாடில்
எண்ணம்மிக இம்மையினும் மறுமையினும்
வேண்டியதுண்(டு)! இதையோ ராமல்,
மண்ணின்மிசை நரத்துதிகள் பண்ணியலைந்
தேதிரிபா வாணர் எல்லாம்
வெண்ணெய்தம திடத்திருக்க நெய்தேடிக்
கொண்டலையும் வீணர் தாமே.

(தெ - ரை.) தண் அமரும் மலர்ச்சோலைத் தண்டலை நீள் நெறியே - குளிர்ச்சி பொருந்திய மலர்க்காவினை

புடைய தண்டலைநீள் நெறியாரே! நின்தன்னைப் பாடில் எண்ணம் மிக இம்மையினும் மறுமையினும் வேண்டியது உண்டு-நின் அடிகளைப்பாடினால் மனநிறைவு பெற இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டியது கிடைக்கும். இதை ஓராமல் - இதனைச் சிந்தியாமல், மண்ணின்மிசை நரத்துதிகள் பண்ணி அலைந்தே திரி பாவாணர் எல்லாம் - இப்புவியில் மக்களைப் புகழ்ந்துபாடி அலைந்து திரியும் கவிஞர்கள் யாவரும், வெண்ணெய் தமது இடத்து இருக்க நெய் தேடிக் கொண்டு அலையும் வீணர்தாமே - தம் கையில் வெண்ணெய் இருக்கும்போது (அதை உருக்கிக்கொள்ளாமல்) நெய் எங்கே உளதென்று தேடித்திரியும் அறிவிலாரே யாவர்.

(வி - ரை.) 'வெண்ணெயைக் கையில் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவான் ஏன்?' என்பது பழமொழி. மக்களைப் புகழ்தலாவது அவர்கள் செய்யாததைச் செய்தார்களென்றும் அவர்களிடம் இல்லாத பண்பை இருப்பதாகவும் கூறிப்பாடுதல். 'மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக்(கு) இவனென்றும்-கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை,' என்றார் சுந்தரர். 'இல்லாத சொன்னேனுக்கில்லை யென்றான்' என்றார் ஒரு புலவர்.

௬௮. ஏழைக்குத் தெய்வமே துணை

அந்தணர்க்குத் துணைவேதம் அரசருக்குத்
துணைவயவாள் அவனி மீது
மைந்தர்க்குத் துணைதாயார் தூதருக்குத்
துணைமதுர வார்த்தை அன்றோ?
நந்தமக்குத் துணையான தண்டலைநீள்
நெறியாரே நண்ப ரான
சுந்தரர்க்குத் துணைநாளும் ஏழையர்க்குத்
தெய்வமே துணையென் பாரே.

(தொ - ரை.) அந்தணர்க்கு வேதம் துணை - மறையவர்க்கு மறையே ஆதரவு. அரசருக்கு வயவாள் துணை - மன்னர்க்கு வெற்றிதரும் வாளே ஆதரவு. அவனிமீது

மைந்தருக்குத் தாயார் துணை - உலகிலே குழந்தைகட்கு அன்னையே ஆதரவு. தூதருக்கு மதுர வார்த்தை அன்றோ துணை - தூதர்களுக்கு இனியமொழி அன்றோ ஆதரவு? நந்தமக்குத் துணையான தண்டலைநீள் நெறியாரே நண்பரான சுந்தரர்க்குத் துணை - நமக்குத் துணையாக இருக்கும் தண்டலைநீள் நெறியாரே அவருக்குத் தோழரான சுந்தரர்க்குத் துணையானார். நாளும் ஏழையர்க்குத் தெய்வமே துணை என்பார் - எப்போதும் ஏழைகட்குத் தெய்வமே ஆதரவு என்பார் (அறிஞர்).

(வி - ரை.) '**திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை**' என்பது பழமொழி.

௬௰௯. அஞ்சாதவர்!

போரஞ்சார் அதிவீரர்! பொருள்அஞ்சார்
விதரணம்சேர் புருடர்! தோயும்
நீரஞ்சார் மறைமுனிவர்! நெருப்பஞ்சார்
கற்புடைய நிறைசேர் மின்னார்!
வாரஞ்சா முலையிடஞ்சேர் தண்டலையா
ரே! சொன்னேன்! மதமா என்னும்
காரஞ்சா(து) இளஞ்சிங்கம்! கனத்தவலி
யாம்தூதன் கால்அஞ் சானே.

(தொ - ரை). வார் அஞ்சா முலையிடம் சேர் தண்டலையாரே - கச்சுக் கடங்காத முலையையுடைய உமையம்மையாரை இடப்பாகத்திற் கொண்டருளிய தண்டலையாரே! அதிவீரர் போர் அஞ்சார் - பெரிய வீரர்கள் போர் செய்ய அஞ்சமாட்டார்கள். விதரணம் சேர் புருடர் பொருள் அஞ்சார் - கொடைப் பண்புடைய ஆடவர் பொருளுக்கு அஞ்சிடார். மறைமுனிவர் தோயும் நீர் அஞ்சார் - மறை புணர்ந்த முனிவர்கள் முழுகும் நீரைக் கண்டு (முழுக) அஞ்சிடார். கற்பு உடைய நிறைசேர் மின்னார் நெருப்பு அஞ்சார் - கற்பினையுடைய ஒழுக்க மிகுந்த பெண்டிர்

நெருப்பைக் கண்டு அஞ்சமாட்டார். இளஞ்சிங்கம் மதம் மா என்னும் கார் அஞ்சாது - இளைய சிங்கம் மதமுடைய யானையாகிய மேகத்திற்கு அஞ்சிடாது. கனத்த வலிஆம் தூதன் கால் அஞ்சான் - திண்ணிய வலிமையுடைய தூதுவன் நடைக்கு அஞ்சிடான்.

(வி - ரை.) மறைமுனிவர் நீரின் முழுக அஞ்சாமை போலக் கற்புடைய மாதர் நெருப்பில் முழுக அஞ்சார் என உவமைப்படுத்தல் சிறப்புடையது.

எ0. ஒழியாதவை.

உபசாரம் செய்பவரை விலக்கிடினும்
அவர்செய்கை ஒழிந்து போகா(து)!
அபசாரம் செய்வாரை அடித்தாலும்
வைதாலும் அதுநில் லாது!
சுபசாரத் தண்டலையார் வளநாட்டில்
திருடருக்குத் தொழில்நில் லாது!
விபசாரம் செய்வாரை மேனியெல்லாம்
சுட்டாலும் விட்டி டாரே.

(தொ. ரை.) சுபசாரம் தண்டலையார் வளநாட்டில் - நலம் நிறைந்த தண்டலையாரின் வளம் நிறைந்த நாட்டினில், உபசாரம் செய்பவரை விலக்கிடினும் அவர் செய்கை ஒழிந்து போகாது - நலம் புரிவாரைத் தடுத்தாலும் அவர் செயல் நீங்கிவிடாது. அபசாரம் செய்வாரை அடித்தாலும் வைதாலும் அது நில்லாது - தீங்கு புரிவோரை ஒறுத்தாலும் பழித்தாலும் அச்செயல் ஒழியாது. திருடருக்குத் தொழில் நில்லாது - திருடரை (என்ன செய்தாலும்) திருட்டுத்தொழில் விடாது. விபசாரம் செய்வாரை மேனி யெல்லாம் சுட்டாலும் விட்டிடார் - விபசாரத் தொழிலில் ஈடுபட்டவரை உடம்பெல்லாஞ் சூடு போட்டாலும் விடமாட்டார்.

எக. பகடிக்கோ பணம் பத்து! திருப்பாட்டுக்கு ஒரு காசு!

சகமிக்க தண்டலையார் அடிபோற்றும்
மகராசர் சபையில் வந்தால்,
சுகம்மிக்க வேசையர்க்குப் பொன்நூறு
கொடுப்பர்! தமிழ் சொன்ன பேர்க்கோ
அகம்மிக்க சோறிடுவார்! அந்தணருக்(கு)
எனின்நாழி அரிசி ஈவார்!
பகடிக்கோ பணம்பத்துத் திருப்பாட்டுக்(கு)
ஒருகாசு பாலிப் பாரே.

(தொ - ரை.) சகம்மிக்க தண்டலையார் அடிபோற்றும் மகராசர் சபையில் வந்தால் - உலகிற் சிறப்புற்ற தண்டலையாரின் திருவடியை வணங்கும் பெருமன்னர்களின் அவைக்குப் போனால், சுகம் மிக்க வேசையர்க்கு நூறு பொன் கொடுப்பர் - இன்பம் மிகத் தரும் கணிகையர்க்கு நூறு பொன் கொடுப்பார்கள். தமிழ் சொன்ன பேர்க்கோ அகம்மிக்க சோறு இடுவர் - தமிழ்க் கவி கூறியவர்க்கு வீட்டில் மிகுந்துள்ள சோற்றைப் போடுவர். அந்தணருக்கு என்னின் நாழி அரிசி ஈவர் - அந்தணர்களுக் காயின் படியரிசி கொடுப்பர். பகடிக்கோ பணம் பத்து திருப்பாட்டுக்கு ஒருகாசு பாலிப்பார்! - பகடிக்கெனிற் பத்துப்பணமும் அழகிய பாவினுக்கு ஒரு காசும் அளிப்பார்கள்.

(வி - ரை.) பகடி - ஏமாற்றுகிறவன் (வெளிவேடக்காரன்). உலகம் பொய்ம்மை வலையிலே விழுவது இயல்பு என்பதாம்.

எஉ. பணந்தானே பந்தியிலே!

பணந்தானே அறிவாகும்! பணந்தானே
வித்தையும்ஆம்! பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும்! பணமில்லா
தவர்பிணமாம் பான்மை சேர்வர்!

பணந்தானே பேசுவிக்கும்! தண்டலைநீள்
நெறியாரே! பார்மீ திற்றன்
பணந்தானே பந்தியிலே! குலந்தானே
குப்பையிலே படுக்குந் தானே.

(தொ - ரை.) தண்டலைநீள் நெறியாரே - தண்டலை நீள் நெறியாரே! பணந்தானே அறிவு ஆகும் - பணமே அறிவாக மாறும். பணந்தானே வித்தையும் ஆம் - பணமே கல்வியைத் தரும். பரிந்து தேடும் பணந்தானே குணம் ஆகும் - விரும்பிச் சேர்க்கும் பணமே குணமெனக் காட்சி தரும். பணம் இல்லாதவர் பிணம் ஆம் பான்மை சேர்வர் - பணமில்லாதோர் பிணமென்னுந் தன்மையராவர். பணந்தானே பேசுவிக்கும் - பணமே (பேசாதவரையும்) பேசுமாறு செய்யும். பார்மீதில் பணந்தானே பந்தியிலே குலந்தானே குப்பையிலே படுக்கும் - உலகிலே பணம் பந்தியிலும் குலம் குப்பையிலும் சேரும்.

(வி - ரை.) 'பணமில்லாதவன் பிணம்' 'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே' 'பணம் பத்தும் செய்யும்' என்பன பழமொழிகள்.

எங. பனங்காட்டுநரி சலசலப்புக்கு........

புனங்காட்டும் மண்ணும்விண்ணும் அஞ்சவரும்
காலனையும் போடா என்றே
இனங்காட்டும் மார்க்கண்டன் கடிந்துபதி
னறுவய(து) என்றும் பெற்றான்!
அனங்காட்டும் தண்டலையார் அடியாரெல்
லாம்ஒருவர்க்(கு) அஞ்சு வாரோ?
'பனங்காட்டு நரிதானும் சலசலப்புக்(கு)
ஒருநாளும் பயப்ப டாதே.

(தொ - ரை.) பனங்காட்டு நரிதானும் சலசலப்புக்கு ஒருநாளும் பயப்படாது - பனங்காட்டு நரி எப்போதும்

சலசலஎன்ற ஒலிக்கு அஞ்சிடாது. (அதுபோல), அனம் காட்டும் தண்டலையார் அடியாரெல்லாரும் ஒருவருக்கு அஞ்சுவாரோ - அன்னங்களைக் காண்பிக்கும் (பொய்கைகளையுடைய) தண்டலையாரின் அடியவரெல்லாரும் ஒருவருக்கும் அஞ்சமாட்டார். புனம்காட்டும் மண்ணும்விண்ணும் அஞ்சவரும் காலனையும் - காடுகளைக் காட்டும் மண்ணுலகும் வானுலகும் அஞ்சுமாறு வந்த எமனையும், இனம் காட்டும் மார்க்கண்டன் போடா என்று கடிந்து - அடியார்களின் உறவைக் காட்டும் மார்க்கண்டன் போடா என்று விலக்கி, என்றும் பதினாறு வயது பெற்றான் - எப்போதும் பதினாறு வயதினைச் (சிவபெருமானிடம்) பெற்றான்.

(வி - ரை.) 'பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது' என்பது பழமொழி.

௭௬. ஊரில் ஒருவன் தோழன்....

சீரிலகும் தண்டலையார் வளநாட்டில்
ஒருதோழன் தீமை தீர
வாரமிகும் பிள்ளைதனை அரிந்துண்டான்
ஒருவேந்தன் மணந்து கொண்ட
ஆர்வமிகும் மனைக்கிழத்தி ஆண்டிச்சி
வடிவுகொண்டாள்! ஆகை யாலே
ஊரிலொரு வன்தோழன்! ஆரும்அற்ற
தேதாரம்! *உண்மை தானே?*

(தா - ரை.) *சீர்இலகும் தண்டலையார் வளநாட்டில் - அழகுமிக்க தண்டலையாரின் வளமிக்க நாட்டிலே, ஒரு தோழன் தீமைதீர வாரம்மிகும் பிள்ளைதனை அரிந்து உண்டான் - ஒரு நண்பனுடைய பொல்லாங்கு நீங்க அன்புமிகும் குழந்தையை அரிந்து உண்டான். ஒரு வேந்தன் மணந்துகொண்ட ஆர்வமிகும் மனைக்கிழத்தி ஆண்டிச்சி வடிவுகொண்டாள் - ஓரரசன் மணம்புரிந்துகொண்ட அன்புமிக்க இல்லக்கிழத்தி ஆண்டிச்சியின் கோலங்கொண்டாள்,*

ஆகையாலே, ஊரில் ஒருவன் தோழன் - ஆகையால், ஊரில் ஒருவனே நண்பனாகத் தக்கவன். (பலர் இருக்கவியலாது), ஆரும் அற்றதே தாரம் - எவரும் ஆதரவாக இல்லாதவளே மனைவியாகத்தக்கவள். உண்மைதானே - இது வாய்மையானதேயாகும்.

(வி - ரை.) 'ஊரில் ஒருவனே தோழன்; ஆரும் அற்றதே தாரம்' என்பது பழமொழி. இங்குக் குறித்த கதையை அறிந்தாரிடம் கேட்டு உணர்க.

எரு. சுகம் படுக்கை யறியாது

தானவன்ஆ கியஞானச் செயலுடையார்
  மாதர்முலை தழுவி னாலும்
ஆனதொழில் வகைவகையாச் செய்தாலும்
  அனுபோகம் அவர்பால் உண்டோ?
கானுறையுந் தண்டலையார் அடிபோற்றும்
  சுந்தரனார் காமி போலாய்
மேனவிலும் சுகம்படுக்கை மெத்தையறி
  யாதெனவே விளம்பினாரே.

(தொ - ரை.) கான் உறையும் தண்டலையார் அடிபோற்றும் சுந்தரனார் - மணம் தங்கிய தண்டலையாரின் திருவடியை வணங்கும் சுந்தரமூர்த்தி நாயனார், காமி போலாய் - காமுகனைப்போல் நடந்துகொண்டு, மேல்நவிலும் படுக்கைச் சுகம் மெத்தை அறியாது எனவே விளம்பினார் - உயர்த்திக் கூறப்படும் படுக்கைஇன்பத்தைப் பஞ்சணை அறியாது (மெத்தை போலவே தாம் இருப்பதாக) என்று கூறினார். (ஆகையால்) தான் அவன் ஆகிய ஞானச் செயல் உடையார் - தாமும் இறைவனும் ஒன்றெனும் உணர்வுவந்த அறிவுச் செயல் உடையோர், மாதர்முலை தழுவினாலும் - பெண்களைக் கூடினாலும், ஆனதொழில் வகை வகையாச் செய்தாலும் - கலவிக்குரிய தொழில்களை வகைவகையாகப்

புரிந்தாலும், அவர்பால் அனுபோகம் உண்டோ - அவர்களிடம் அந்த இன்பப் பற்று இராது.

(வி - ரை.) துறவிகள் உலகத்தோடு கலந்திருந்தாலும் பற்றற்றவராகவே இருப்பார்கள் என்பது கருத்து.

எகூ. சோறு சொன்னவண்ணம் செய்யும்

சோறென்ன செய்யும்? எல்லாம் படைத்திடவே
செய்யும்! அருள் சுரந்து காக்கும்!
சோறென்ன செய்யும்? எல்லாம் அழித்திடவே
செய்யும்! அதன் சொரூபம் ஆக்கும்?
சோறென்ன, எளிதேயோ? தண்டலையார்
தம்பூசை துலங்கச் செய்யும்!
சோறென்ன செய்யும்எனில், சொன்னவண்ணம்
செயும்! பழமை தோற்றுந் தானே.

(தொ - ரை.) சோறு என்ன செய்யும் - உணவு யாது செய்யும்? எல்லாம் படைத்திடவே செய்யும் - எப்பொருளையும் ஆக்குமாறு புரியும், அருள் சுரந்து காக்கும் - அருள் மிகுந்து காப்பாற்றும், சோறு என்ன செய்யும் -, எல்லாம் அழித்திடவே செய்யும் - எப்பொருளையும் அழிக்குமாறு புரியும். அதன சொரூபம் ஆக்கும் - உணவின் வடிவம் ஆக்கும், சோறு என்ன எளிதேயோ - உணவு அவ்வளவு அற்பமா? தண்டலையார் தம் பூசை துலங்கச்செய்யும் - தண்டலையாரின் வழிபாடு விளக்கமுறப் புரியும், சோறு என்ன செயும் எனில் -, சொன்னவண்ணம் செயும் - நாம் கூறியவாறு முடித்துத் தரும்! பழமை தோற்றும் - பழமையை உண்டாக்கும்.

(வி - ரை.) தோற்றுந்தானே: தான் ஏ: அசைகள். 'சோற்றுக் கில்லாச் சுப்பன் சொன்னவெல்லாங் கேட்பான்' என்பது பழமொழி. 'உணவின் பிண்டம்' ஆகையால், 'அதன் சொரூபம் ஆக்கும்' என்றார். தாம் அளிக்கும் உணவுக்காகத் தம்மைப் பழமையான உறவினர் என்று கூறி வருவோரை நோக்கிப் 'பழமை தோற்றும்' என்றார்.

எஎ. பித்தருக்குத் தங்குணமே......

எத்தருக்கும் உலுத்தருக்கும் ஈனருக்கும்
மூடருக்கும் இரக்கம் பாரா
மத்தருக்கும் கொடிதாம்அவ் வக்குணமே
நற்குணமா வாழ்ந்து போவார்!
பத்தருக்கு நலங்காட்டும் தண்டலையா
ரே அறிவார்! பழிப்பா ரேனும்
பித்தருக்குத் தங்குணமே நூலினும்செம்
மையதான பெற்றி ஆமே

(தொ - ரை.) எத்தருக்கும் உலுத்தருக்கும் ஈனருக்கும் மூடருக்கும் இரக்கம்பாரா மத்தருக்கும் - ஏமாற்றுவோரும் ஈயாரும் இழிஞரும் பேதையரும் அருட்பண்பிலா மயக்கரும் ஆகிய இவர்களுக்கு, கொடிது ஆம் அவ் வக்குணமே நற்குணம்ஆ(க) வாழ்ந்துபோவார் - கொடியதான அந்த அந்தக் குணமே நற்குணமாகக் கொண்டு உலகிலே வாழ்ந்தொழிவார்கள். பத்தருக்கு நலம் காட்டும் தண்டலையாரே அறிவார் - அன்பருக்கு நன்மையளிக்கும் தண்டலையாரே இவர் நிலையை அறிவார். பழிப்பாரேனும் பித்தருக்குத் தம்குணமே நூலினும் செம்மையது ஆன பெற்றி ஆமே - (இவர்களின் நிலைமை) (பிறர்) பழித்தாலும் வெறியருக்குத் தங்கள் குணமே நூலினும் செவ்வியதாக இருப்பதைப்போல ஆகும்.

(வி - ரை.) 'கோடிறும் பேதையுங் கோண்டது விடா' என்னும் பழமொழியும், 'காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான் - கண்டானாம் தான்கண்டவாறு' என்னும வள்ளுவர் வாய்மொழியும் இங்கு நினைக்கத்தக்கன.

எஅ. அன்ன நடை நடக்கப் போய்.......

பன்னகவே ணிப்பரமர் தண்டலையார்
நாட்டிலுள பலருங் கேளீர்!
தன்னறிவு தன்னினைவு தன்மகிமைக்(கு)
ஏற்றநடை தருமே அல்லால்,

சின்னவரும் பெரியவர்போ லேநடந்தால்
உள்ளதுபோம் ! சிறிய காகம்
அன்னநடை நடக்கப்போய்த் தன்னடையும்
கெட்டவகை ஆகும் தானே.

(தொ - கை.) பன்னகவேணிப் பரமர் தண்டலையார் நாட்டில்உள பலரும் கேளீர் - அரவணிந்த சடைப் பெருமானார் தண்டலையிறைவரின் நாட்டில் வாழும் யாவரும் கேண்மின் ! தன் அறிவு தன் நினைவு தன்மகிமைக்கு ஏற்ற நடை தருமே அல்லால் - தன் அறிவுக்கும் தன் சிந்தனைக்கும் தன் பெருமைக்கும் தக்க ஒழுக்கம் ஏற்குமே அன்றி, சின்னவரும் பெரியவர்போலே நடந்தால் உள்ளதுபோம் - எளியவரும் ஆற்றலுடையார் போலே நடந்தால் உள்ளதும் போய்விடும். (அது மேலும்), சிறிய காகம் அன்னநடை நடக்கப்போய்த் தன்நடையும் கெட்டவகை ஆகும் - இழிந்த காகம் உயர்ந்த அன்னத்தைப்போல நடக்கத் தொடங்கித் தன் நடையையும் இழந்தவாறு முடியும்.

(வி - ரை.) 'விரலுக்குத் தக்கவீக்கம்' எனவும், 'அன்ன நடை நடக்கப்போய்த் தன்நடையும் கெட்டது' எனவும் பழமொழிகள் வழங்குகின்றன.

எகூ. மகாதேவர் ஆடுமிடத்திலே பேய்களும் ஆடும்

பேரான கவிராச ருடன்சிறிய
கவிகளும்ஓர் ப்ரபந்தம் செய்வார் !
வீராதி வீரருடன் கோழைகளும்
வாள்பிடித்து விருது சொல்வார்
பூராளும் தண்டலைநீள் நெறியாரே !
இருவரையும் பகுத்துக் காணில்,
ஆராயும் மகாதேவர் ஆடிடத்துப்
பேய்களும்நின்(று) ஆடு மாறே.

(தொ - ரை.) *பார் ஆளும் தண்டலைநீள் நெறியாரே* - உலகைக் காக்கும் தண்டலைநீள் நெறியாரே! *பேரான கவி ராசருடன் சிறிய கவிகளும் ஓர் பிரபந்தம் செய்வார்* - புகழ்பெற்ற கவியரசருடன் சிறு கவிஞரும் ஒரு நூல் எழுதுவர். *வீராதி வீரருடன் கோழைகளும் வாள்பிடித்து விருது சொல்வார்* - பெருவீரர்களுடன் வீரமற்றவர்களும் வாளேந்தி வெற்றி யிசைப்பர். *இருவரையும் பகுத்துக் காணில்* - இருவரையும் ஒப்பிட்டுப் பார்த்தால், *ஆராயும் மகாதேவர் ஆடு இடத்துப் பேய்களும் நின்று ஆடும் ஆறே* - (பெரியோர்) ஆராய்ச்சி செய்யும் சிவபெருமான் ஆடும் இடத்திலே பேய்களும் நின்று ஆடுவது போலாம்.

(வி - ரை.) எல்லோரும் பெருவீரராகவும் எல்லோரும் பெருங் கவிஞராகவும் இருத்தல் இயலாது. மேலும் பெருவீரர் இருப்பதனாலேயே மற்றவரும் போர்செய்யப் போகாமல் இருக்க முடியாது. பெரும் புலவரைக் கண்டு சிறுபுலவர் கவிசெய்யாமல் இருத்தலும் இயலாது. இருதிறத்தாரும் கலந்திருப்பதே உலகியல்.

அ௰. பொல்லாத கள்ளர்

செழுங்கள்ளி நிறைசோலைத் தண்டலைநீள்
நெறியாரே! திருடிக் கொண்டே
எழுங்கள்ளர் நல்லகள்ளர்! பொல்லாத
கள்ளர்இனி யாரோ என்றால்,
கொழுங்கள்ளர் தம்முடன்கும் பிடுங்கள்ளர்
திருநீறு குழைக்குங் கள்ளர்
அழுங்கள்ளர் தொழுங்கள்ளர் ஆசாரக்
கள்ளர்இவர் ஐவர் தாமே.

(தொ - ரை.) *செழுங்கள்ளி நிறை சோலைத் தண்டலை நீள்நெறியாரே* - வளம் பொருந்திய கள்ளிகள் நிறைந்த சோலைகளையுடைய தண்டலை நீள்நெறியாரே!, *திருடிக் கொண்டு எழும் கள்ளர் நல்ல கள்ளர்* - திருடிக் கொண்டு செல்லும் கள்ளரெலாரும் நல்ல கள்ளர்களே. *இனி, பொல்லாத கள்ளர் யாரோ என்றால்* - எனின், தீய கள்ளர் யாரென

னினினால், கொழுங்கள்ளர் தம்முடன் கும்பிடுங் கள்ளர் - செல்வமுடைய கள்ளருடன் கும்பிடும் கள்ளரும், திருநீறு குழைக்கும் கள்ளர் - திருநீறு குழைத்திடுங் கள்ளரும், அழும் கள்ளர் - அழுகின்ற கள்ளரும், தொழும் கள்ளர் - தொழுகின்ற கள்ளரும் (என), ஆசாரக் கள்ளர் - ஒழுக்கத்திலே மறைந்து பிறரை ஏமாற்றுங் கள்ளராகிய, இவர் ஐவர் தாமே - இந்த ஐவரும் ஆவர்.

(வி - ரை.) ஆசாரக் கள்ளர் ஒழுக்கம் உடையார்போல நடித்து மக்களை நம்பச் செய்து ஏமாற்றுவதால் இவர்களைக் கண்டு பிடித்தல் அரிது. இவர்களால் ஒழுக்கமுடையோரும் மக்களால் நம்பப்படார். ஆகையால் வெளிப்படையாகத் திருடரெனப் பெயர் பெற்றோர் நல்லராகவும் இவர் தீயராகவும் கொள்ளப்பட்டனர். கொழுங்கள்ளர்: செல்வம் இருந்தும் இல்லார்போல நடித்திடுவோர். மற்று, நல்ல தோற்றமுடையராகக் காணப்பட்டு மக்களை ஏமாற்றுவோர் எனினும் ஆம்.

அக. மனத்திலே பகையாகி.......

தனத்திலே மிகுத்தசெழுந் தண்டலையார்
பொன்னிவளம் தழைத்த நாட்டில்,
இனத்திலே மிகும்பெரியோர் வாக்குமனம்
ஒன்றாகி எல்லாம் செய்வார்;
சினத்திலே மிகுஞ்சிறியோர் காரியமோ
சொல்வதொன்று! செய்வதொன்று!
மனத்திலே பகையாகி உதட்டிலே
உறவாகி மடிவர் தாமே.

(நொ - ரை.) தனத்திலே மிகுத்த செழுந்தண்டலையார் பொன்னி வளம் தழைத்த நாட்டில் - செல்வத்திலே சிறப்புற்ற வளமிக்க தண்டலையாருடைய காவிரியின் வளந் கொழிக்கும் நாட்டிலே, இனத்திலே மிகும் பெரியோர் மனம் வாக்கு ஒன்று ஆகி எல்லாம் செய்வார் - நட்பிலே சிறந்த பெரியோர்கள் நினைவும் சொல்லும் ஒன்றுபட்டு யாவற்றையும் இயற்றுவார்கள். சினத்திலே மிகும் சிறி

யோர் காரியமோ சொல்வது ஒன்று செய்வது ஒன்று - செற்றத்திலே சிறந்த கீழ்மக்களின் வேலையெனிலோ கூறுவது ஒன்று இயற்றுவது மற்றொன்று, மனத்திலே பகை ஆகி உதட்டிலே உறவு ஆகி மடிவர் - உள்ளத்திலே பகை வைத்துக் கொண்டு பேச்சிலே உறவு காண்பித்துக் காலத்தைக் கழிப்பர்.

(வி- ரை.) 'உள்ளே பகை, உதட்டில் உறவு' என்பது பழமொழி.

அஉ. 'ஊரோட உடனோட'

தேரோடும் மணிவீதித் தண்டலையார்
வளங்காணும் தேசம் எல்லாம்
போரோடும் விறல்படைத்து வீராதி
வீரரென்னும் புகழே பெற்றார்
நேரோடும் உலகத்தோ(டு) ஒன்றுபட்டு
நடப்பதுவே நீதி ஆகும்!
ஊரோட உடனோட நாடோட
நடுவோடல் உணர்வு தானே.

(நொ - ரை.) தேர் ஓடும் மணி வீதி தண்டலையார் வளம் காணும் தேசம் எல்லாம் - தேர் ஓடுகின்ற அழகிய தெருக்களையுடைய தண்டலையாரின் வளம் மிக்க நாடுகள் யாவும், போர் ஓடும் விறல் படைத்து வீராதி வீரரெனும் புகழே பெற்றார் - போர்க்களத்திலே வெற்றியடைந்து மேம்பட்ட வீரர்களுக்குள் சிறந்த வீரர் எனும் புகழை அடைந்தவரும, நேரோடும் உலகத்தோடு ஒன்றுபட்டு நடப்பதுவே நீதி ஆகும் - ஒழுங்காகச் செல்கின்ற உலகத்திலே தாமும் ஒன்றாகி வாழ்வை நடத்துவதே அறம் ஆகும். ஊர் ஓட உடன் ஓட நாடோட நடுவோடல் உணர்வுதானே - எல்லோரும் செல்லும் நெறியிலே தாமும் நடத்தல் அறிவுடைமையன்றோ?

(வி - ரை.) 'ஊரோட உடன் ஓடு! நாடு ஓட நடுவோடு!' என்பது பழமொழி. 'ஊருடன் கூடிவாழ்' என்றார் ஔவையார்.

அ௩. 'வழுவழுத்த வுறவதனின்......

இழைபொறுத்த முலைபாகர் தண்டலையார்
வளநாட்டில் எடுத்த ராகம்
தழுதழுத்துப் பாடுவதின் மௌனமாய்
இருப்பதுவே தக்க தாகும்!
குழைகுழைத்த கல்வியினும் கேள்வியினும்
கல்லாமை குணமே! நாளும்
வழுவழுத்த உறவதனின் வயிரம்பற்
றியபகையே வண்மை யாமே.

(பொ - ரை.) இழை பொறுத்த முலை பாகர் தண்டலையார் வளநாட்டில் - அணிதாங்கிய முலைகளையுடைய உமையம்மையாரை இடப்பாகத்திற் கொண்ட தண்டலையாரின் வளம் பொருந்திய நாட்டிலே, எடுத்த ராகம் தழுதழுத்துப் பாடுவதின் மௌனமாய் இருப்பதுவே தக்கது ஆகும் - தொடங்கிய இசையைத் தடுமாற்றத்துடன் பாடுவதைக் காட்டினும் பாடாமல் இருப்பதே நலந்தரும். குழைகுழைத்த கல்வியினும் கேள்வியினும் கல்லாமை குணமே - தெளிவற்ற கல்வி கேள்விகளை விடக் கல்லாமையே நன்றாகும். நாளும் வழுவழுத்த உறவதனின் வயிரம் பற்றிய பகையே வண்மை ஆம் - எப்போதும் மனத் தெளிவற்ற நட்பைக் காட்டினும் நீங்காத செற்றம் பொருந்திய பகையே வளமுடையதாகும்.

(வி - ரை.) தெளிவில்லாத எச்செயலும் நலந்தராது. வயிரம் நீங்காத சினம்.

அ௪. நெருப்பினைச் சிறிதென்று முன்றனையில்....

அருப்பயிலும் தண்டலைவாழ் சிவனடியார்
எக்குலத்தார் ஆனால் என்ன?
உருப்பயிலும் திருநீறும் சாதனமும்
கண்டவுடன் உகந்து போற்றி,

இருப்பதுவே முறைமையல்லால் ஏழையென்றும்
சிறியரென்றும் இகழ்ந்து கூறின்
நெருப்பினையே சிறிதென்று முன்றானை
தனின்முடிய நினைந்த வாறே.

(நே - ரை.) தண்டலைவாழ் அருபயிலும் சிவன் அடியார் - தண்டலையில் எழுந்தருளிய அருவமாகிற சிவ பிரான் தொண்டர்கள், எக்குலத்தார் ஆனால் என்ன - எந்தக் குலத்தவரானாலும் குறையில்லை. உரு பயிலும் திருநீறும் சாதனமும் கண்டவுடன் - வடிவிலே விளங்கும் திருநீற்றினையும் மற்றைச் சின்னங்களையும் பார்த்தவுடன், உகந்து போற்றி இருப்பதுவே முறைமை அல்லால் - சிறப்பித்து வாழ்த்தி யிருப்பதே தகுதி யன்றி, ஏழை என்றும் சிறியர் என்றும் இகழ்ந்து கூறின் - வறியவரெனவும் உருவத்திலும் அறிவிலும் சிறியவர் எனவும் பழித்துரைத்தால், நெருப்பினையே சிறிது என்று முன்தானை தனில் முடிய நினைந்த ஆறு - தீயின் வடிவம் சிறியது என எண்ணி முன்தானையில் முடிய நினைத்ததற்குச் சமமாகும்.

(வி - ரை.) அரு: உருவமில்லாத நிலை. சாதனம்: சிவ வழி பாட்டுக்குரிய சின்னங்கள். உகப்பு - உயர்வு (சிறப்பு). 'நெருப்பைச் சிறிதென்று நினைக்கலாமா!' என்பது பழமொழி.

௮௫. 'பெண் என்றவுடன் பேயும் இரங்கும்'

உரங்காணும் பெண்ஆசை கொடிதாகும்!
பெண் புத்தி உதவாதாகும்!
திரங்காணும் பெண்வார்த்தை தீதாகும்!
பெண்சென்மம் சென்மம் ஆமோ?
வரங்காணும் தண்டலைநீள் நெறியாரே!
பெண்ணிடத்தின் மயக்கத் தாலே
இரங்காத பேருமுண்டோ? பெண் என்ற
வுடன்பேயும் இரங்குந் தானே.

(தொ - ரை.) வரம் காணும் தண்டலைநீள் நெறியாரே - நலம் பொருந்திய தண்டலைநீள் நெறியாரே! பெண்ணிடத்தில் மயக்கத்தாலே இரங்காத பேரும் உண்டோ - பெண்ணிடம் உண்டாகும் தடுமாற்றத்தினால் (பெண்ணைக் கண்டவுடன்) இரக்கம் காட்டாதவரும் உளரோ? பெண் என்றவுடன் பேயும் இரங்கும்-(எனினும்), உரம் காணும் பெண் ஆசை கொடிது ஆகும் - விரைவுப் படுத்தும் பெண் காமம் கொடியது ஆகும். பெண்புத்தி உதவாது ஆகும் - பெண்ணின் அறிவுரை பயன்தராது ஆகும், (ஆகையால்), திரம் காணும் பெண் வார்த்தை தீது ஆகும் - உறுதிபோற் காணப்படும் பெண்மொழி கொடியதாகும். பெண்சென்மம் சென்மம் ஆமோ - பெண்பிறப்பு இன்பந்தரும் பிறப்பு என்று சொல்ல முடியுமோ?

(வி - ரை.) வரம் - நன்மை. பெண் ஆசையினால் மேல் விளைவு கருதாது தவறான வழியிலே செல்வதுபற்றிக் கொடியது என்றார். அங்ஙனமன்றிக் 'காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்ட' இன்பத்தைக் குறை கூறியதாகாது. அவ்வாறே பெண் புத்தி யுதவாதென்றும் பெண்வார்த்தை தீதென்றுங் கூறியவற்றையுங் கொள்க. இன்றேல், 'விறல் மந்திரி மதி'யுடைய பெண்ணை இழிவு படுத்தியதாகும். உலகிலே பெண் பிறப்பே பல்வகைத் துன்பத்தினும் ஈடுபடுவதால் 'பெண் சென்மம் சென்மம் ஆமோ' என்றார். 'பெண் என்றவுடன் பேயும் இரங்கும்' என்பது பழமொழி.

அ௬. கையிலே புண் இருக்கக் கண்ணாடி பார்ப்பதென்ன?

மையிலே தோய்ந்தவிழி வஞ்சியரைச்
சேர்ந்தவர்க்கு மறுமை யில்லை!
மெய்யிலே பிணியும் உண்டாம்! கைப்பொருளும்
கேடாகி விழலர் ஆவார்!
செய்யிலே வளந்தழைத்த தண்டலையார்
வளநாட்டில் தெளிந்த தன்றோ!
கையிலே புண் இருக்கக் கண்ணாடி
பார்ப்பதென்ன கருமம் தானே?

(தொ - ரை.) செய்யிலே வளம் தழைத்த தண்டலை யார் வளநாட்டில் - கழனியிலே நெல் முதலியவற்றின் வளம் மிகுந்த தண்டலையாரின் வளம் பொருந்திய நாட்டினில், மையிலே தோய்ந்த விழி வஞ்சியரைச் சேர்ந்தவர்க்கு மறுமையில்லை - மை தீட்டிய கண்களையுடைய பொதுமகளிரைச் சார்ந்தவர்களுக்கு மறுமையில் நன்மையில்லை. மெய்யிலே பிணியும் உண்டாம் - (இம்மையிலும்) உடலில் நோய்கள் உண்டாகும், கைப்பொருளும் கேடு ஆகிவிழவர் ஆவார் - கையில் உள்ள பொருளையும் இழந்து (பிறர்க்குப்) பயனற்றவரும் ஆவார். தெளிந்தது அன்றோ - இது தெளிவானது தானே? கையிலே புண் இருக்கக் கண்ணாடி பார்ப்பது என்ன கருமம் - கையினிற் புண் இருக்கையில் (அதை நேரே பாராமற்) கண்ணாடியிலே பார்ப்பது என்னசெயல்?

(வி - ரை.) பொதுமகளிரை விழைவோரின் இல்லறம் கெடும். ஆகையாலே, அவர்கள் கைப்பொருளும் கேடாகி விழலர் ஆவது கைப்புண் போல வெளிப்படையாகத் தெரிவதால், 'கைப் புண் இருக்கக் கண்ணாடி பார்ப்பது என்ன கருமம் தானே?' என்றார். 'கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமோ?' என்பது பழமொழி.

அஎ. பனையடியிலே பால் குடித்தால்?

காலம்அறி தண்டலையார் வளநாட்டிற்
கொலைகளவு கள்ளே காமம்
சாலவரும் குருநிந்தை செய்பவர்பால்
மேவிஅறந் தனைச்செய் தற்கும்
சீலமுடை யோர்நினையார்! பனையடியி
லேயிருந்து தெளிந்த ஆவின்
பாலினையே குடித்தாலும் கள்ளென்பார்!
தள்ளென்பார்! பள்ளென் பாரே.

(தொ - ரை.) காலம் அறி தண்டலையார் வளநாட்டில் - காலம் அறிந்த தண்டலையாரின் வளநாட்டிலே, கொலை

களவு கள்ளே காமம் சாலவரும் குருநிந்தை செய்பவர் பால் - கொலையும் களவும் கட்குடியும் காமமும் நிறைய வரும் குருநிந்தையும் செய்பவரிடம், மேவி அறந்தனைச் செய்தற்கும் - சென்று அறங் கூறுவதற்கும், சீலம் உடையோர் நினையார் - ஒழுக்கம் உள்ளோர் எண்ணமாட்டார். பனை அடியிலேயிருந்து - பனையின் நிழலிலே தங்கி, தெளிந்த ஆவின் பாலினையே குடித்தாலும் - தெளிவான பசுவின் பாலையே குடித்தாலும், கள் என்பார் தள் என்பார் பள் என்பார் - (அப்பாலைக்) கள் என்றே கூறிக், 'குடித்தவனை நீக்குக! அவன் பள்ளன்' என்றும் கூறி விடுவர்.

(வி - ரை.) ஒழுக்கம் கெட்டவருக்கு அறங்கூறச் சென்று, அவர்களுடன் பழகினால், சென்றவர்க்கும் ஒழுக்கங் கெட்டவர் என்றபேரே வரும் என்பது கருத்து 'பனையடியிலிருந்து பாலைக் குடித்தாலும் கள் குடித்தானென்பர்' என்பது பழமொழி. 'காணவே பனையின் கீழாக் குடிப்பினும் கள்ளே யென்பர்' என்பது விவேக சிந்தாமணி.

அஅ. பொல்லாச் சூது

கைக்கெட்டா(து) ஒருபொருளும்! கண்டவர்க்கு
நகை யாகும்! கனமே யில்லை!
இக்கட்டாம் வருவதெல்லாம்! லாபமுண்டோ?
கவறு கையில் எடுக்கலாமோ?
திக்கெட்டே றியகீர்த்தித் தண்டலையார்
வளநாட்டிற் சீச்சீ யென்னச்
சொக்கட்டான் எடுத்தவர்க்குச் சொக்கட்டான்
சூது பொல்லாச் சூது தானே.

(தொ - ரை.) திக்குஎட்டு ஏறிய கீர்த்தித் தண்டலையார் வளநாட்டில் - எட்டுத் திக்கினும் பரவிய புகழை யுடைய தண்டலையாரின் வளம்பொருந்திய நாட்டிலே, சீச்சீ என்னச் சொக்கட்டான் எடுத்தவர்க்கு - சீச்சீ என இகழும்படி சொக்கட்டானைத் தொடுத்தவர்க்கு, ஒரு பொருளும் கைக்கு எட்டாது - எப்பொருளும் கிடை

யாது. கண்டவர்க்கு நகை ஆகும் - பார்த்தவர் இகழ்வர். கனமே இல்லை - மதிப்பே இராது. வருவது எல்லாம் இக்கட்டாம் - வருவது முற்றும் இடுக்கண் ஆகும். லாபம் உண்டோ - ஊதியம் இல்லை. (ஆகையால்), கவறு கையில் எடுக்கலாமோ - பாய்ச்சிகையைக் கையாலுந் தொடலாமோ? சொக்கட்டான் சூது பொல்லாச் சூதுதானே - சொக்கட்டான் எனும் சூதாட்டம் தீய சூதாட்டம் ஆகும்.

(வி - ரை.) 'வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம் - தூண்டிற்பொன் மீன் விழுங்கி யற்று' என்று வள்ளுவர் கூறினர். கவறு : சூதாடு கருவி.

அகூ. புற்றடிமண் முதலியவற்றின் பயன்

தனமேவும் புற்றடிமண் குருந்தடிமண்
பிரமகுண்டம் தன்னில் ஏய்மண்
மனமேவும் மணியுடனே மந்திரமும்
தந்திரமும் மருந்தும் ஆகி,
இனமேவும் தண்டலையார் தொண்டருக்கு
வந்தபிணி யெல்லாம் தீர்க்கும்!
அனுபோகம் தொலைந்தவுடன் சித்தியாம்
வேறும்உள அவிழ்தந் தானே.

(தொ - ரை.) தனம் மேவும் புற்றடிமண் குருந்தடிமண் பிரமகுண்டம் தன்னில் ஏய் மண் - செல்வம் மிக்க புற்று மண்ணும் குருந்தமரத்தடி மண்ணும் பிரமகுண்டத்தில் உள்ள மண்ணும், மனம் மேவும் மணியுடனே மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகி - உளம் விரும்பும் மணியும் மந்திரமும் ஆராய்ச்சியும் மருந்தும் என ஆகி, இனம் மேவும் தண்டலையார் தொண்டருக்கு வந்த பிணி எல்லாம் தீர்க்கும் - உறவாகிய தண்டலையாரின் அடியவர்க்கு வந்த நோயை யெல்லாம் போக்கும். வேறும்உள அவிழ்தம் அனுபோகம் தொலைந்தவுடன் சித்தியும் - மற்றும் உள்ள மருந்துகள் (முன்வினைப்) பயன் கழிந்த பிறகே நலந்தரும்.

(வி - ரை.) இறைவன் இருப்பிடத்தில் உள்ள மண்ணும் அடியவர் நோயை எல்லா வகையிலும் எப்போதும் போக்கும். வேறு மணியும் மருந்தும் மந்திரமும் பழவினைப் பயன் நன்றாக இருந்தால் மட்டும் நோய்களை நீக்கும்; தீமையாக இருந்தால் நோய்களை நீக்கமாட்டா.

௯௦. அரைக்காசுக்குப் போன அபிமானம்....

கானமரும் கவரியொரு மயிர்படினும்
 இறக்கும்! அது கழுதைக் குண்டோ?
மானமுடன் வாழ்பவனே மாபுருடன்!
 சுயோதனனை மறந்தார் உண்டோ?
ஆனகஞ்சேர் ஒலிமுழங்கும் தண்டலையா
 ரே! சொன்னேன்! அரைக்கா சுக்குப்
போனஅபி மானமினி ஆயிரம்பொன்
 கொடுத்தாலும் பொருந்தி டாதே.

(தொ - ரை.) ஆனகம் சேர் ஒலி முழங்கும் தண்டலையாரே - முரசு கலந்த ஓசை முழங்கும் தண்டலையாரே! கான் அமரும் கவரி ஒரு மயிர்படினும் இறக்கும் - காட்டில் இருக்கும் கவரிமான் ஒரு மயிரை இழந்தாலும் இறந்து விடும். அது கழுதைக்கு உண்டோ - அந்தப் பண்பு கழுதைக்கு இருக்கிறதோ? மானமுடன் வாழ்பவனே மாபுருடன் - மானத்தோடு வாழ்கின்றவனே ஆடவரிற் சிறந்தவன். சுயோதனனை மறந்தார் உண்டோ - துரியோதனனை மறந்தவர் யார்? அரைக்காசுக்குப் போன அபிமானம் இனி ஆயிரம் பொன் கொடுத்தாலும் பொருந்திடாதே.—

(வி - ரை.) ஆனகம்: முரசு. கவரி: கவரிமான். சுயோதனன்: சிறந்த போர் வீரன் (காரணப் பெயர்) யோதனன்: போர் வீரன். இவன் தன் சிற்றப்பன் மக்களான பாண்டவருக் கடங்கி வாழ விரும்பாமல் இறுதிவரையில் அவர்களைப் பகைத்துப் போர் செய்து உயிர் துறந்தான். மற்றும், பதினெட்டாம் நாட்போரிலே தனித்து நின்ற சுயோதனனைத் தருமன் பார்த்து மனமிரங்கித் தம்முடன் கூடி அவனையே உலகை ஆளும்படியும் ஒத்துப் போகும்

படியும் கூறினன். அதற்கு அவன் தன்னுடன் பிறந்தார் உறவினர் நண்பரை யெல்லாம் தனக்காக மடியவிட்டு, நாடு என்றவுடன் உயிருக்கும் செல்வத்திற்கும் ஆசைப்பட்டு ஒத்துப்போக முடியா தென்று கூறினன். ஆகவே, அவன் மானமுடையவனாகக் கருதப் பட்டான். **'அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது'** என்பது பழமொழி.

சுகூ. மலைமீதில் இருப்பவரைப் பன்றி பாயாது

நிலைசேரும் அதிகவித ரணசுமுக
துரைகளுடன் நேசம் ஆகிப்
பலநாளு மேஅவரை அடுத்தவர்க்குப்
பலன்உண்டாம் ! பயமும் இல்லை !
கலைசேரும் திங்கள்அணி தண்டலையா
ரே ! சொன்னேன் ! கண்ணிற் காண
மலைமீதில் இருப்பவரை வந்துபன்றி
பாய்வதெந்த வண்ணந் தானே ?

(தொ - ரை.) கலைசேரும் திங்கள் அணி தண்டலையாரே - (ஒற்றைக்) கலையுடன் பொருந்திய (பிறைத்) திங்களைச் சடையில் அணிந்த தண்டலையாரே! கண்ணில் காண மலை மீதில்இருப்பவரைப் பன்றி வந்து பாய்வது எந்த வண்ணம் - கண்ணிற் காணுமாறு மலைமேல் இருப்பவரைத் தரையிலிருக்கும் பன்றி வந்து எவ்வாறு பாயும்? (ஆகையால்), நிலைசேரும் அதிக விதரண சுமுக துரைகளுடன் நேசம்ஆகி - நிலைபெற்ற சிறந்த அறிவும் இன்முகமும் உடைய தலைவர்களுடன் நட்புக்கொண்டு, அவரைப் பலநாளும் அடுத்தவர்க்குப் பலன் உண்டாம் - அவர்களைப் பெரும்பாலான நாட்களில் அடைந்திருந்தவர்க்கு நன்மை உண்டு. பயமும் இல்லை - அச்சமும் உண்டாகாது.

(வி - ரை.) விதரணம் (வட) - அறிவு. சுமுகம் (வட) - இன்முகம். 'ஆம் பிள்ளாய்' எனத் தொடங்கும் (சச) செய்யுளிற் பெரியோரை அடுத்தவர் உயர்வு பெறுவார் என்று கூறினர். இச் செய்யுளிற், 'பெரியோரை அடுத்தவர்க்குத் தீமையில்லை; நன்மையும் உண்டாகும்' என்கிறார்.

சுஉ. 'நிறைகுடமோ தளும்பாது'

பொறுமையுடன் அறிவுடையார் இருந்தஇடம்
விளக்கேற்றிப் புகுத வேண்டும்!
கெறுவமுடன் அகந்தையுள்ளார் இறுமாந்து
நடந்துதலை கீழாய் வீழ்வார்!
வறுமையினும் மறுமையினும் காணலாம்
தண்டலையார் வாழும் நாட்டில்
நிறைகுடமோ தளும்பாது! குறைகுடமே
கூத்தாடி நிற்ப தாமே!

(தொ - ரை.) தண்டலையார் வாழும் நாட்டில்-, பொறுமையுடன் அறிவுடையார் இருந்த இடம் விளக்கு ஏற்றிப் புகுத வேண்டும் - பொறுமையும் அறிவும் உடையவர் இருக்கும் இடத்தை விளக்கு ஏற்றிச் சென்று காண வேண்டும். கெறுவமுடன் அகந்தை யுள்ளார் இறுமாந்து நடந்து தலைகீழாய் வீழ்வார் - செருக்கும் ஆணவமும் உடையோர் பணிவின்றி நடந்து தலைதடுமாறி அழிவார்கள். வறுமையினும் மறுமையினும் காணலாம் - வறுமைக் காலத்தினும் மற்றைக் காலத்தினும் இவர்கள் நிலையை அறியலாம். (எப்போதும் ஒரு மாதிரியே யிருப்பர்), நிறைகுடமோ தளும்பாது - நீர் நிறைந்த குடம் எனிலோ தளும்புவதுஞ் செய்யாது. குறைகுடமே கூத்தாடி நிற்பது ஆம் - நீர் குறைந்த குடந்தான் கூத்தாடி நிற்கும்.

(வி - ரை.) கருவம் என்னும் சொல் எதுகை மோனை நயங்களை நோக்கிக், 'கெறுவம்' ஆயிற்று. '**இருந்த இடம் விளக்கேற்றிப் புகுதவேண்டும்**' '**தலைகீழாய் வீழ்வார்**' என்பன மரபு மொழிகள். '**நிறைகுடம் தளும்பாது; குறைகுடம் கூத்தாடும்**' என்பது பழமொழி.

சுங. ஆலமரம் பழுத்தவுடன்....

ஞாலமுறு நல்லவர்க்குச் செல்வம் வந்தால்
எல்லவர்க்கும் நாவ லோர்க்கும்
காலமறிந் தருமையுடன் பெருமையறிந்
துதவிசெய்து கனமே செய்வார்;

மாலறியாத் தண்டலைநீள் நெறியாரே!
அவரிடத்தே வருவார் யாரும்!
ஆலமரம் பழுத்தவுடன் பறவையின்பாற்
சீட்டெவரே அனுப்பு வாரே?

(தொ - ரை.) மால் அறியாத் தண்டலைநீள் நெறியாரே - திருமாலும் அறியாத தண்டலைநீள் நெறியாரே! ஆலமரம் பழுத்தவுடன் பறவையின்பால் எவரே சீட்டு அனுப்புவார் - ஆலமரம் பழுத்தாற் பறவைகள் வர வேண்டும் என்று சீட்டனுப்புவோர் யார்? (அவ்வாறே), ஞாலம் உறு நல்லவர்க்குச் செல்வம் வந்தால் - உலகில் உள்ள நல்லோர்களுக்குச் செல்வம் கிடைத்தால், நாவலோர்க்கும் எல்லவர்க்கும் - புலவர்களுக்கும் இரவலர் முதலிய யாவருக்கும், காலம் அறிந்து அருமையுடன் பெருமை அறிந்து - காலமும் அருமையும் பெருமையும் உணர்ந்து, உதவி செய்து கனமே செய்வார் - பொருள் கொடுத்துப் பெருமைப் படுத்துவார்கள். அவரிடத்தே யாரும் வருவார் - அவரிடம் எல்லோரும் வருவார்கள்.

(வி - ரை.) 'மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி, இரந்தழைப்பார் யாவரும் அங்கில்லை' - என்பது இங்கு ஒப்பிடத் தக்கது.

௯௪. நாணம் அற்றார் நிலை

சேணிலகு மதிச்சடையார் தண்டலையார்
வளநாட்டிற் சிறந்த பூணின்
காணவரும் நாணுடையார் கனமுடையார்
அல்லாதார் கருமம் எல்லாம்
ஆணவலம்! பெண்ணவலம்! ஆடியகூத்(து)
அவலம்! என அலைந்து கேடாம்!
நாணமில்லாக் கூத்தியர்க்கு நாலுதிக்கும்
வாயிலெனும் நடத்தை ஆமே.

(தொ - ரை.) சேண் இலகும் மதிச் சடையார் தண்டலையார் வளநாட்டில் - வானில் உலவும் பிறைத்திங்களணிந்த சடையினரான தண்டலையாரின் வளம் பொருந்திய நாட்டில், சிறந்த பூணின் காணவரும் நாணுடையார் கனம் உடையார் அல்லாதார் கருமம் எல்லாம் - சிறப்பு மிக்க அணிகலன் போலக் காணப்படும் நாணமும் பெருமையும் இல்லாதவரின் செயல்கள் யாவும், ஆண் அவலம் பெண் அவலம் ஆடிய கூத்து அவலம் என அலைந்து கேடு ஆம் - 'ஆடவரும் வீணர்! பெண்டிரும் வீணர்! அவர்கள் நடத்திய கூத்தும் வீண்!' எனுமாறு அலைவுற்றுக்கேடு ஆகும். (அச்செயல்), நாணம் இல்லாக் கூத்தியர்க்கு நாலுதிக்கும் வாயில் எனும் நடத்தை ஆம் - வெட்கம் அற்ற கூத்தாடிச்சிகட்கு நான்கு திசையினும் வழி என்னுமாறு ஆய் விடும்.

(வி - ரை.) நன்றாகக் கூத்தாடும் திறமையற்ற கூத்தாடும் பெண்டிர்கள் தம்மைப் பலரும் பழிக்கும்போது வெட்கித் திசை நோக்காமல் ஓடுவர்; அதுபோல நாணமும் மானமும் இல்லார் கருமமும் பலரும் பழிக்கும்படி வீணாகும் என்க. '**ஆணவலம்! பெண்ணவலம்! ஆடிய கூத்து அவலம்!** "**நாணமில்லாக் கூத்தியர்க்கு நாலுதிக்கும் வாயில்**" என்பவை பழமொழிகள் போலும்.

௯௫. பிடாரிதனைப் பெண்டு வைத்துக் கொண்டது

அடுத்தமனை தொறும்புகுவாள்! கணவன்உணும்
முனம் உண்பாள்! அடக்கம் இல்லாள்!
கடுத்தமொழி பேசிடுவாள்! சிறுதனம்தே
டுவள்! இவளைக் கலந்து வாழ்தல்
எடுத்த விடைக் கொடியாரே! தண்டலையா
ரே! எவர்க்கும் இன்பம் ஆமோ?
குடித்தனமே கெடவேண்டிப் பிடாரிதனைப்
பெண்டு வைத்துக் கொண்ட தாமே.

(தொ - ரை.) எடுத்த விடைக்கொடியாரே - இடபக் கொடி உயர்த்தவரே! தண்டலையாரே!, அடுத்த மனை தோறும் புகுவாள் - அயல் வீடுகளிலெல்லாம் நுழைவாள். கணவன் உணும் முனம் உண்பாள் - கணவன் உண்பதற்குமுன் உண்பாள், அடக்கம் இல்லாள் - அடங்கியிராள், கடுத்தமொழி பேசிடுவாள் - வெறுப்பாகவே உரையாடுவாள். சிறுதனம் தேடுவள் - (தனியே) சிறு சேமிப்புச் செய்வாள். இவளைக் கலந்து வாழ்தல் எவர்க்கும் இன்பம் ஆமோ - இவளைக் கூடி வாழ்வது யாருக்குத்தான் மகிழ்ச்சியாயிருக்கும்? குடித்தனமே கெட வேண்டிப் பிடாரிதனைப் பெண்டு வைத்துக் கொண்டது ஆம் - குடிகெடுவதற்குப் பிடாரியை மனைவியாகக் கொண்டதாகும் அச் செயல்.

(வி - ரை.) சிவபிரானுக்குரியது விடைக்கொடி. பிடாரி - காளி. இவள் சிவனுடன் வாதாடினள் என்று கூறுவதால், அடங்கா மனைவியை, 'அடங்காப் பிடாரி' யெனல் மரபு.

௯௬. இளைத்தவன் பெண்டீர் என்றால்........

களித்துவரும் செல்வருக்கு வலிமையுண்டு!
மிடியருக்குக் கனந்தான் உண்டோ?
வளைத்தமலை யெனுஞ்சிலையார் தண்டலைசூழ்
தரும்உலக வழக்கம் பாரீர்!
ஒளித்திடுவர் தம்மனையிற் பெண்டிரைக்
கண்டவரும் ஒன்றும் பேசார்!
இளைத்தவன்பெண் டிரென்றால் எல்லார்க்கும்
மச்சினியாய் இயம்பு வாரே.

(தொ - ரை.) வளைத்த மலையெனும் சிலையார் தண்டலை சூழ்தரும் உலக வழக்கம் பாரீர் - வளைந்த மலையாகிய வில்லேந்திய சிவபெருமானின் தண்டலையைச் சூழ்ந்த உலகத்தின் வழக்கத்தைப் பாருங்கள்! தம்மனையில் பெண்டிரைக்கண்டு ஒளித்திருந்தவர்; அவரும் ஒன்றும் பேசார் - செல்வ வலிமையுடையோர் வீட்டில் உள்ள பெண்களைக்

கண்டு ஒளித்திடுவார்; ஒன்றும் பேசவும்மாட்டார். (எனினும்), இளைத்தவன் பெண்டீர் என்றால் எல்லோர்க்கும் மச்சினியாய் இயம்புவார் - ஆற்றலற்றவன் மனைவியெனிலோ யாவருக்கும் மைத்துனியாகக் கொண்டு நகையாடுவர். (ஆகையால்), களித்துவரும் செல்வருக்கு வலிமையுண்டு - களிப்புடன் வரும் செல்வர்களுக்கு ஆற்றலுண்டு. மிடியருக்குக் கனந்தான் உண்டோ - ஏழைகட்கு அப்பெருமை உண்டாகுமோ?

(வி - ரை.) சிவபிரான் மேருமலையை (திரிபுரமெரிக்கும் போது) வில்லாக வளைத்ததனால், 'வளைத்தமலை எனும் சிலையார்' என்றார். **இளைத்தவன் பெண்டாட்டி எல்லோருக்கும் மைத்துனி"** என்பது பழமொழி.

சஎ. பிறர் வருத்தம் அறியார்

நொந்தவரும் பசித்தவரும் விருந்தினரும்
விரகினரும் நோயுள் ளோரும்
தந்தமது வருத்தமல்லாற் பிறருடைய
வருத்தமது சற்றும் எண்ணார்!
இந்துலவும் சடையாரே! தண்டலையா
ரே! சொன்னேன் ஈன்ற தாயின்
அந்தமுலைக் குத்துவலி சவலைமக
வோசிறிதும் அறிந்தி டாதே.

(நொ - ரை.) இந்து உலவும் சடையாரே - பிறைமதி விளையாடும் சடையினரே! தண்டலையாரே!, ஈன்றதாயின் அந்த முலைக்குத்துவலி சவலைப் பிள்ளை சிறிதும் அறிந்திடாதே-பெற்ற அன்னையின் முலைக்குத்து நோயைச் சவலைப் பிள்ளை கொஞ்சமும் அறியாது. (அதுபோல), நொந்தவரும் பசித்தவரும் விருந்தினரும் விரகினரும் நோயுள்ளோரும்- வருந்தினோர், பசித்தோர், விருந்துண்ணவந்தோர், காமுகர், நோயினர் ஆகியோர், தந்தமது வருத்தம் அல்லால் பிறருடைய வருத்தமது சற்றும் எண்ணார் - தங்கள் தங்கள் வருத்தத்தை அன்றி மற்றவர்களின் வருத்தத்தைச் சிறிதும் நினையார்.

௬௮. நாழிநெல்லுக்கு ஒருபுடைவை

ஆழியெல்லாம் பாலாகி அவனியெல்லாம்
அன்னமயம் ஆனால் என்ன?
சூழவரும் இரவலர்க்குப் பசிதீர
உண்டிருக்கும் சுகந்தான் உண்டோ?
ஏழுலகும் பணியவரும் தண்டலையா
ரே! சொன்னேன்! எந்தநாளும்
நாழிநெல்லுக்கு ஒருபுடைவை விற்றாலும்
நிருவாணம் நாய்க்குத் தானே.

(நொ - ரை.) ஏழு உலகும் பணியவரும் தண்டலை யாரே - ஏழுலக மக்களும் வணங்கத் தேடிவரும் தண்டலை யாரே! எந்த நாளும் நாழி நெல்லுக்கு ஒரு புடைவை விற்றாலும் நாய்க்கு நிருவாணந்தான் - எக்காலத்திலும் படி நெல்லுக்கு ஒரு புடைவை விற்றபோதிலும் நாய் ஆடையின்றித்தான் இருக்கவேண்டும். (அதுபோல), ஆழியெல்லாம் பாலாகி அவனியெல்லாம் அன்ன மயம் ஆனால் என்ன - எல்லாக் கடல்களும் பாற்கடல்களாய் உலகம் முற்றும சோற்றுக் குவியலாய் ஆயினும் என்ன பயன்? சூழவரும் இரவலர்க்குப் பசிதீர உண்டிருக்கும் சுகந்தான் உண்டோ - (உலகைச்) சுற்றியலையும் பிச்சைக்காரர்களுக் குப் பசிநீங்க உண்டு களிக்கும் நலம் உண்டாகுமா? (உண்டாகாது).

(வி - ரை.) ஆழமாக இருப்பது ஆழி(கடல்). உலகம் எங்கும் சோற்றுப் பெருக்கும் கடலெங்கும் பாலுமாக இருந்தாலும் அவ் வாறு இருப்பதைப் பார்த்துவரும் இரவலர்க்கு அவர்கள் அவ்வுல கில் இருந்தாலும் பசிதீர உண்ணும் உரிமையில்லை யென்பதனை விளக்கச், 'சூழவரும் இரவலர்' என்றார். 'நாழி நெல்லுக்கு ஒரு புடைவை விற்றாலும் நாய் நிருவாணந்தான்' என்பது பழமொழியாய் இருந்திருத்தல் வேண்டும்.

கசுக. அச்சியிலே போனாலும்.......

கொச்சையிலே பாலும்உண்டோ? கூத்தியர்கள்
தம்பிடத்திற் குணந்தான் உண்டோ?
துச்சரிடத் தறிவுண்டோ? துச்சரெங்கே
போனாலும் துரையா வாரோ?
நச்சரவத் தொடையாரே! தண்டலையா
ரே! இந்த நாட்டல் லாமல்
அச்சியிலே போனாலும் அகப்பைஅரைக்
காசதன்மேல் ஆர்கொள் வாரே?

(தெ - ரை.) நச்சு அரவத் தொடையாரே - நஞ்சை யுடைய பாம்பை மாலையாக அணிந்தவரே! தண்டலையாரே - இந்த நாட்டு அல்லாமல் அச்சியிலே போனாலும் அகப்பை அரைக்காசதன் மேல் யார் கொள்வாரே - இந்த நாட்டிலே அன்றி அச்சிக்குச் சென்றாலும் அகப்பை அரைக் காசுக்குமேல் விலை போகாது. (ஆகையால், எங்கே சென்றாலும்), கொச்சையிலே பாலும் உண்டோ - வறட்டாட்டிலே பால் கிடைக்குமா? கூத்தியர்கள் தம்பிடத்திற் குணம்தான் உண்டோ - கூத்தாடும் மாதரிடம் நற்பண்பைக் காணமுடியுமா? துச்சர் இடத்து அறிவு உண்டோ - தீயருக்கு அறிவு உண்டாகுமா? துச்சர் எங்கே போனாலும் துரை ஆவாரோ - தீயர் எங்கே சென்றாலும் தலைமைக் கேற்றவர் ஆவாரோ?

(வி - ரை.) கூத்தியர் என்பவர் முற்காலத்திலே கூத்தாடுந் தொழிலையே மேற்கொண்டு, ஒழுக்கமின்றி ஊரூராகச் சென்று கொண்டிருந்தவர். அத்தகையாரையே இங்குக் கொள்ளுதல் சாலும். இந்நாளிலும் சில ஊர்களிற் 'கூத்தாடிக்' குடும்பங்கள் உள்ளன. 'துச்சர் துரை ஆவாரோ என்றது அவரிடத்துத் துரைக்குரிய பண்பிராது என்றபடி. துச்சர் தலைவராக இருத்தலைக் காண்கிறோமாகையால் அப்பண்பிராது என்றலே பொருத்தம். '**அச்சிக்குப் போனாலும் அகப்பை அரைக்காசுதான்**' என்பது பழமொழி.

௯00. பித்தளைக்கு நாற்றம் இயற்கை

நித்தம்எழு நூறுநன்றி செய்தாலும்
ஒருதீது நேர வந்தால்,
அத்தனையும் தீதென்பார்! பழிகருமக்
கயவர்குணம் அகற்றல் ஆமோ?
வித்தகஞ்சேர் தண்டலையார் வளநாட்டிற்
சாம்பர்இட்டு விளக்கி னாலும்
எத்தனைசெய் தாலும்என்ன? பித்தளைக்குத்
தன் நாற்றம் இயற்கை ஆமே.

(நொ - ரை.) வித்தகம் சேர் தண்டலையார் வளநாட்டில் - அறிவுத்துறையுடைய தண்டலையாரின் வளமிக்க நாட்டிலே, சாம்பர் இட்டு விளக்கினாலும் எத்தனை செய்தாலும் என்ன - சாம்பலைக் கொண்டு தேய்த்தாலும் என்ன செய்தாலும் பயன் ஏது? பித்தளைக்குத் தன் நாற்றம் இயற்கை ஆம் - பித்தளையின் களிம்பு நாற்றம் இயல்பானதே ஆகும். (அதுபோல), பழிகருமக் கயவர் - பழிப்புக்குரிய செயலைச் செய்யுந் தீயவர்களுக்கு, நித்தம் எழுநூறு நன்றி செய்தாலும் - நாள்தோறும் நூற்றுக்கணக்கான நன்மைகளைப் புரிந்தாலும், ஒரு தீது நேர வந்தால் அத்தனையும் தீது என்பார் - ஒரு தீமை (நம்மையறியாமலே) நேர்ந்து விட்டால் அவ்வளவு நன்மையையும் தீது என்றே கூறிவிடுவர். குணம் அகற்றல் ஆமோ - (அவர்) பண்பை மாற்ற இயலுமோ?

(வி - ரை.) பல தீமை செய்தாலும் ஒரு நன்றி செய்தால், தீமையை மறந்து நன்றியை நினைவில் வைப்பது நல்லோர் இயல்பு. 'கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த - ஒன்று நன்(று) உள்ளக் கெடும்' என்பது வள்ளுவர் வாய்மொழி. ஆனால், எத்துணை நன்றி செய்யினும் ஒரு தீமை செய்தால் அத்துணை நன்றியையும் மறந்து தீமையை மறவாதிருத்தல் தீயோர் இயல்பு. '**பித்தளை நாற்றம் போகாது**' என்பது பழமொழி. 'கற்பூரப் பாத்திகட்டிக் கத்தூரி யெருப்போட்டுக் கமழ்நீர் பாய்ச்சிப் - பொற்பூர உள்ளி தனை விதைத்தாலும் அதன் குணத்தைப் பொருந்தக் காட்டும்' என்பது விவேகசிந்தாமணி.

பிற பாடல்கள்

க. வம்பருக்குத் தலைமை

வம்பரெல்லாம் ஆதிக்கம் மிகுந்திருந்தால்
என்ன? அதுமாறி ஓய்ந்த
பம்பரமாய் மூலையினிற் கிடந்திட்டால்
என்ன? அதிற் பலன்உண் டாமோ
கம்புலவும் தண்டலையார் வளநாட்டில்
வருந்துபல கழுதை தாழும்
அம்புவியிற் கிடந்தென்ன? பாதாளந்
தனிற் கிடந்தென் ஆகுந்தானே?

(தொ - ரை.) கம்பு உலவும் தண்டலையார் வளநாட்டில் - சங்குகள் உலவும் நீர்வளம் பொருந்திய தண்டலையாரின் நாட்டிலே, வருந்து பல கழுதை தாழும் அம்புவியிற் கிடந்து என்ன - (திறனற்று) வருந்துகின்ற பல கழுதைகள் உலகிலே இருப்பதால் என்ன பயன்? பாதாளந் தனில் கிடந்து என் ஆகும் - பாதாளத்திலே கிடந்தால் மட்டும் என்ன கெட்டுவிடும்? (ஆகையால்), வம்பர் எல்லாம் ஆதிக்கம் மிகுந்திருந்தால் என்ன - வம்பர்களுக்கு எல்லா வகையினும் செல்வாக்கு மிகுந்திருந்தால் என்ன? அது மாறி, ஓய்ந்த பம்பரமாய் மூலையினிற் கிடந்திட்டால் என்ன - (அவைகள்) ஆதிக்கங் கெட்டு ஆடி யோய்ந்த பம்பரம்போல மூலையில் முடங்கிக் கிடந்தால் என்ன? அதின் பலன் உண்டாமோ - அதனால் ஏதாவது நலன் உண்டாமா?

(வி - ரை.) வம்பர் - வீணர். 'ஆடியோய்ந்த பம்பரம்' மரபுத் தொடர்மொழி.

---

* சில படிகளிலே மேலும் காணப்படும் தண்டலையார் சதகப் பாடல்கள்.

உ. கடுந் தேட்டுக் கண்ணைக் கெடுக்கும்

தண்டலையா ரடிபணிந்து தவம் தானம்
உபகாரம் தருமம் செய்து
கொண்டபொருள் விலைவாசி காணிதே
டிக்கோடி கொடுப்ப தல்லால்,
வண்டருமாய் ஒன்றுபத்து விலைகூறி
அநியாய வட்டி வாங்கிக்
கண்டவர்தம் கடுந்தேட்டுக் கண்ணை அறக்
கெடுக்குமிது கருமந் தானே.

(நொ - ரை.) தண்டலையார் அடிபணிந்து தவம் தானம் உபகாரம் தருமம் செய்து கொண்ட பொருள் - தண்டலையாரின் திருவடியைப் பணிந்து தவமும் தானமும் உதவியும் பிற அறமும் புரிந்து தேடிய பொருள், விலைவாசி காணிகோடி தேடிக்கொடுப்பது அல்லால் - விலைவாசியையும் நிலபுலனையும் கோடியெனத் தேடிக் கொடுக்குமேயல்லாமல், வண்டருமாய் ஒன்று பத்து விலைகூறி - தீயவராய் ஒன்றுக்குப் பத்தாக விலை சொல்லி, அநியாய வட்டி வாங்கிக் கண்டவர்தம் கடுந்தேட்டு - ஒழுங்கற்ற முறையிலே வட்டியை வாங்கிச் சேர்ப்பவருடைய சிக்கனமான பொருளீட்டம், கண்ணை அறக்கெடுக்கும் - வாழ்க்கையை முழுதும் கெடுக்கும், இது கருமந்தான் - இதுதான் உலகில் நடப்பது.

(வி - ரை.) விலைவாசி விலையிலே உயர்வு தாழ்வு. வாசி: கொடுக்கல் வாங்கல் எனினும் ஆம். கண்: ஆகுபெயராக வாழ்க்கை நெறியைக் குறிக்கும். 'கடுந் தேட்டுக் கண்ணைக் கெடுக்கும்' என்பது பழமொழி.

ங. புரட்டுச் செயல்

'இதுகருமம்; இதனாலே இதை முடிப்பாய்!'
எனத்தொழிலை யெண்ணிச் செய்தால்,
அதுகருமம் பாராமல் திருடியும் அள்
ளியும் புரட்டாய் அலைவ தெல்லாம்

மதியணியும் தண்டலையார் வளநாட்டில்
நீராடும் மாதர் தங்கள்
முதுகினைத்தேய் எனச் சொன்னால் முலைமீது
கையிட்ட முறைமை தானே.

(தொ - ரை.) மதி அணியும் தண்டலையார் வளநாட்டில் - பிறைமுடித்த தண்டலையாரின் வளம் பொருந்திய நாட்டினில், இது கருமம்; இதனாலே இதை முடிப்பாய் எனத் தொழிலை எண்ணிச் செய்தால் - 'இது நின் அறிவு இவ்வழியே இதனைச் செய்திடு' என்று ஒரு அறிவலை நினைத்து ஏவினால், அது கருமம் பாராமல் திருடியும் அள்ளியும் புரட்டாய் அலைவது எல்லாம் - அந்த அறிவலைச் சிந்தியாமல், மறைத்தும் எடுத்தும் மாறுபாடு செய்து திரிவது முற்றும், நீராடும் மாதர் தங்கள் முதுகினைத் தேய் எனச் சொன்னால் - நீரிற்குளிக்கும் பெண்கள் தங்கள் முதுகைத் தேய்க்கச் சொன்னால், முலைமீது கையிட்ட முறைமை தானே.

(வி - ரை) புரட்டரிடத்திலே ஒரு தொழிலைக் கொடுத்தால், அதைப் பலவகையினுங் கெடுத்துத் தங்கள் நலத்தையே நாடிக் கொள்வர்.

௯. ஊர்க்குருவிதான் உயரப் பறந்தாலும் ....

பார்க்குள் அறி விருந்தாலும் படித்தாலும்
கேட்டாலும் பணிந்து வேத
மார்க்கமுடன் நடந்தாலும் சிறியவர்க்குப்
பெரியவர்தம் மகிமை உண்டோ?
ஆர்க்கும் அருங் கதியுதவும் தண்டலையா
ரே! சொன்னேன்! ஆகாயத்தில்
ஊர்க்குருவி தானுயரப் பறந்தாலும்
பருந்தாகா(து) உண்மை தானே.

(தொ - ரை.) ஆர்க்கும் அருங்கதியுதவும் தண்டலையாரே - எல்லோருக்கும் நல்ல நிலைமை அருளும் தண்டலை

யாரே! ஊர்க்குருவி ஆகாயத்தில் உயரப் பறந்தாலும் பருந்து ஆகாது-ஊர்க்குருவி வானத்தில் உயரமான தொலைவிற் பறந்தாலும் பருந்தின் மதிப்பை அடைய முடியாது. உண்மைதானே - இது உண்மையே ஆகும் (ஆகையால்), அறிவு இருந்தாலும் படித்தாலும் கேட்டாலும் பணிந்து வேத மார்க்கமுடன் நடந்தாலும் - நுண்ணறிவிருப்பினும் கற்பினும் பெரியோர் சொற்பொழிவைக் கேட்பினும் அடங்கி மறை நெறியே ஒழுகினும், பார்க்குள் சிறியவர்க்குப் பெரியவர் தம் மகிமை உண்டோ - உலகிலே கீழ் மக்களுக்குச் சான்றோரின் சிறப்பு உண்டாகுமோ?

(வி - ரை.) 'உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது' என்பது பழமொழி. 'சங்கையறப் படித்தாலும் கேட்டாலும் பிறர்க்குறுதிதனைச் சொன்னாலும் - அங்கணுலகிற் சிறியோர் தாமடங்கி நடந்து கதியடையமாட்டார்' என்றார் முன்னே (கச): இச் செய்யுளில் அவ்வாறு நடப்பினும் மதிப்புப்பெறார் என்கிறார்.

ரு. இல்லது வாராது; நமக்கு உள்ளது போகாது

வல்லமையால் முடிவதுண்டோ? தலைகீழாய்
நின்றாலும் வருவ துண்டோ?
அல்லதுதான் அவன்செயலே அல்லாமல்
தன்செயலால் ஆவதுண்டோ?
புல்லறிவால் மயங்காமல், தண்டலையார்
அடிபணிந்து, புத்தி உண்டாய்,
இல்லது வாராது! நமக்(கு) உள்ளதுபோ
காதெனவே இருக்க லாமே.

(நே - ரை) வல்லமையால் முடிவது உண்டோ - (நம்) ஆற்றலாலே ஏதாவது முடியுமா? தலைகீழாய் நின்றாலும் வருவது உண்டோ - எவ்வளவு முயற்சித்தாலும் (நமக்கு வாராதது) வருமா? அல்லது - மேலும், அவன் செயலே அல்லாமல் தன் செயலால் ஆவது உண்டோ - இறைவன் ஆணைப்படியே நடக்குமன்றி ஒருவன் முயற்சி

யால் மட்டும் ஏதாவது முற்றுறுமா? (ஆகையால்), புல் லறிவால் மயங்காமல் - சிற்றறிவினாலே சிந்தை கலங்காமல், தண்டலையார் அடிபணிந்து - தண்டலையாரின் திருவடிகளை வணங்கி, புத்தி உண்டாய் - அறிவுபெற்று, நமக்கு இல்லது வாராது - நமக்கு (ஊழினாலே) வரத்தகாதது கிடையாது. உள்ளது போகாது - (ஊழினாலே) வரக்கூடியது வீணாகாது. என இருக்கலாம் - என்று (முயற்சியுடன் மட்டும்) இருத்தல் நலம்.

(வி - ரை.) எனவே : ஏ : அசை, இருக்கலாமே : ஏ : அசை. 'ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று - சூழினும் தான் முந்துறும்' என்ற வள்ளுவரே, 'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் - தாழாது ஞற்றுபவர்' எனக் கூறுவதால், இச்செய்யுள் முயற்சியைக் கூடாதென்று கூறியதாகக் கொள்ளலாகாது. 'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்' என்பதனாலே பயனை எதிர்பாராமல் முயற்சியைச் செய்க என்பதே கருத்தாகக் கொள்ளல் வேண்டும். 'இல்லாதது வராது : உள்ளது போகாது' என்பது கருத்து.

சு. குங்குமம் சுமந்த கழுதை

பேருரைகண் டறியாது தலைச்சுமைஏ
 டுகள்சுமந்து பிதற்று வோனும்,
போரில்நடந் தறியாது பதினெட்டா
 யுதம்சுமந்த புல்லி யோனும்
ஆரணிதண் டலைநாதர் அகமகிழாப்
 பொருள்சுமந்த அறிவி லோனும்,
காரியமொன் றறியாக்குங் குமம்சுமந்த
 கழுதைக்கொப் பாவர் தாமே.

(நொ - ரை.) ஆர் அணி தண்டலைநாதர் அகம்மகிழாப் பொருள் சுமந்த அறிவு இலோனும் - ஆத்திமாலை தரித்த தண்டலைப் பெருமனார் மனம்விரும்பாத பொருள்களைச் சுமந்த மூடனும், தலைச் சுமை ஏடுகள் பேர் உரை கண்டறியாது சுமந்து பிதற்றுவோனும் - தலைக்குச் சுமையாக நூல்களை அவற்றின் சிறந்த பொருளை அறியாமற் சுமந்து குளறுபடி செய்பவனும், போரில் நடந்து அறியாது

பதினெட்டு ஆயுதம் சுமந்த புல்லியோனும் - போருக்குச் சென்ற பழக்கமின்றி எல்லாப் படைக்கலங்களையும் சுமந்த இழிஞனும், காரியம் ஒன்று அறியாக் குங்குமம் சுமந்த கழுதைக்கு ஒப்பாவர் - (எதனைச் சுமக்கிறோம் என்ற) தன் அலுவல் ஒன்றையும் உணராமற் குங்குமத்தைச் சுமந்த கழுதைக்குச் சமம் ஆவர்.

(வி - ரை.) தண்டலைநாதர் மகிழாப் பொருள்கள் சைவச் சின்னம் அல்லாதவை. 'குங்குமஞ் சுமந்த கழுதை' என்பது பழமொழி.

"புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும்—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே! பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு." —நாலடியார்.

எ. பொற்பூவில் வாசனை

கற்பூர வல்லியொரு பாகர்செழுந்
தண்டலையார் கடலேழ் சூழ்ந்த
நற்பூமி தனிற்பிறந்தோர் எல்லோரும்
மக்களென நாட்ட லாமோ?
அற்பூரும் பண்புடையார் நற்குணமும்
பண்பிலார் அழகும் காணின்
பொற்பூவில் வாசனையும் புன்முருக்கம்
பூவுமெனப் புகலல் ஆமே.

(நொ - ரை.) கற்பூரவல்லி ஒருபாகர் செழுந்தண்டலையார் கடல் ஏழ் சூழ்ந்த நற்பூமிதனில் - கற்பூரவல்லியான உமையம்மையாரை ஒரு பங்கிலே கொண்ட இறைவராகிய வளமிக்க தண்டலையாரின் எழுகடலாற் சூழப்பெற்ற நல்ல நிலவுலகில், பிறந்தோர் எல்லோரும் மக்கள் என நாட்டல் ஆமோ - தோன்றியவர் யாவரும் மக்கட் பண்புடையவர் என உறுதிகூறல் ஒவ்வுமோ? அற்பு ஊரும் பண்பு உடையார் நற்குணமும் - அன்புமிகும் பண்பு கொண்டோரின் நல்ல தன்மையும், பண்பு இலார் அழகும் -

மக்கட் பண்பிலார் உடலழகும், காணின் - ஆராய்ந்தால், பொன்பூவில் வாசனையும் புன்முருக்கம் பூவும் எனப் புகலல் ஆம் - பொன்னாலான மலரிலே நறுமணமும் மண மற்ற புல்லிய முருக்கமலரும் போல இருக்கும் என்று இயம்பலாம்.

(வி - ரை.) அற்பூரும் பண்புடையார் நற்குணம் பொற்பூவில் வாசனையெனப் புகழ்பெறத் தக்கதாகும்; அரியதும் ஆகும். பண்பிலாரழகு (மணமற்ற) புன்முருக்கம பூவைப்போலப் பயனற்ற தாகும். குமரகுருபர அடிகளும் கல்வி கேள்வியிற் சிறந்து கற்ற வற்றை யெடுத்துச் சொல்லுந் திறம் பெற்றிருப்பது "பொன்மலர் நாற்றம் உடைத்து" என உவமை காட்டினர்.

அ. கலியாணப் பஞ்சம் இல்லை

சலியாமல் தண்டலையில் தாயகனார்
அருள்கொண்டு தருமம் செய்யப்
பொலிவாகிக் கொழுமீதில் வந்தபொருள்
ஈந்தவைதாம் போக மீந்தால்
மலிவாகிச் செல்வம்உண்டாம்! வயல்முழுதும்
விளைந்திடும் நன்மாரி ஆகும்!
கலியாணப் பஞ்சமில்லை! களப்பஞ்சம்
இல்லையொரு காலுந் தானே.

(தொ - ரை.) தண்டலையில் தாயகனார் அருள்கொண்டு சலியாமல் தருமம் செய்ய - தண்டலையில் எழுந்தருளிய தாயகனாரான இறைவரின் அருளை வாழ்த்தி அறம் புரிந்தால், கொழுமீதில் பொலிவாகி வந்த பொருள் - உழவுத் தொழிலிலே அழகுறக் கிடைத்த செல்வத்தில், ஈந்தவை போக மீந்தால் - (தென்புலத்தாருக்கும் தெய்வத் திற்கும் விருந்தினருக்கும் சுற்றத்தாருக்கும் தனக்கும் அரசனுக்கும் என ஆறு பங்காக்கிக்) கொடுத்தவை போக மிச்சமானால், மலிவாகிச் செல்வம் உண்டாம் - மிகுதியாகிச் செல்வம் கிடைக்கும். வயல் முழுதும் விளைந்திடும் நன்மாரி ஆகும் - நிலம் எங்கும் விளையத்தக்க மாரியாக அந்த

அறம் இருக்கும். கலியாணப் பஞ்சம் இலே - அவர்கள் அகத்திலே பல திருமணங்கள் நடைபெறும். களப்பஞ்சம் ஒருகாலும் இல்லை - விளைவுகொண்டு நெல்லடிக்கும் களத்திற்கும் ஒருபோதும் வறுமை இராது.

சூ. இரக்கப் போனாலும்....

இரக்கத்தால் உலகுஆளும் தண்டலையா
　　ரே!சிவனே! எந்த நாளும்
இரக்கத்தான் புறப்பட்டீர்! என்றனையும்
　　இரக்கவைத்தீர்! இதனால் என்ன?
இரக்கத்தான் அதிபாவம்! இரப்பதுதீ(து)
　　என்றாலும், இன்மை யாலே
இரக்கப்போ னாலுமவர் சிறக்கப்போ
　　வதுகருமம் என்னல் ஆமே.

(தொ - ரை.) இரக்கத்தால் உலகு ஆளும் தண்டலையாரே சிவனே - அருளாலே உயிர்களைக் காக்கும் தண்டலையில் எழுந்தருளிய சிவபெருமானே! எந்தநாளும் இரக்கத்தான் புறப்பட்டீர் - எப்போதும் இரக்கவே சென்றீர். என்றனையும் இரக்கவைத்தீர் - என்னையும் இரந்து உண்ண அமைத்துவிட்டீர்! இதனால் என்ன - இவ்வாறு செய்ததனால் என்ன பயன்? இரக்கத்தான் அதிபாவம் இரப்பது தீது - பிச்சை யெடுப்பது பெரிய பாவம்! ஆகையால் அது கெட்டது. என்றாலும் - என்று (அறிஞர்) கூறினாலும், இன்மையாலே இரக்கப் போனாலும் - வறுமையாலே பிச்சையெடுக்கச் சென்றாலும், அவர் சிறக்கப் போவது கருமம் என்னல் ஆமே - அவ்வாறு இரக்கப் போவோர் சிறப்புடன் செல்வது தகுதி என்று கூறுதல் வேண்டும்.

(வி - ரை.) "**இரக்கப் போனாலும் சிறக்கப் போ**" என்பது பழமொழி.

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

	பக்கம்
அடுத்தமனை தொறும்புகு	91
அட்டதிசை எங்கணும்	7
அந்தணரை நல்லவரை	36
அந்தணர்க்குத் துணைவேதம்	68
அருப்பயிலும் தண்டலைவாழ்	81
அருள்மிகுத்த ஆகமநூல்	44
அல்லமரும் குழலாளை	13
அள்ளித்தெண் ணீறணியும்	22
ஆம்பிள்ளாய் எனக்கொடுக்	47
ஆழியெல்லாம் பாலாகி	94
இது கருமம் இதனாலே	98
இரக்கத்தால் உலகுஆளும்	104
இரந்தனையித் தனைநாளும்	40
இழைபொறுத்த முலைபாகர்	81
உபசாரம் செய்பவரை	70
உரங்காணும் பெண்ஆசை	82
உருவெடுத்த நாள்முதலா	32
உழையிட்ட விழிமடவார்	19
உள்ளவரைக் கெடுத்தோரும்	53
எத்தருக்கும் உலுத்தருக்கும்	76
ஓதரிய தண்டலையார்	29
ஓதரிய வித்தைவந்	42
கட்டுமாங் கனிவாழைக்	28
கரப்பார்க்கு நல்லகதி	56
களித்துவரும் செல்வருக்கு	92
கறுத்தவிடம் உண்டருளும்	21
கற்பூர வல்லியொரு	102
கற்றவர்க்குக் கோபமில்லை	61
காதிலே திருவேடம்	33
காலம்அறி தண்டலையார்	84
கானமரும் கவரியொரு	87
குறும்பு எண்ண(து)	16
கூன்செய்த பிறையணியும்	6
கைக்கெட்டா(து)ஒருபொரு	85
கைசொல்லும் பனைகாட்டும்	35
கொச்சையிலே பாலும்	95
கொச்சையிற்பிள் ளைக்குத வும்	20
கொடியருக்கு நல்லபுத்தி	25
கோடாமற் பெரியவர்	37
சகமிக்க தண்டலையார்	71
சங்கையறப் படித்தாலும்	18
சலியாமல் தண்டலையில்	103
சிறியவராம் முழுமூடர்	60
சிறுபிறைதுன் னியசடை யார்	38
சின்னமெங்கே கொம் பெங்கே	38
சீரிலகும் தண்டலையார்திரு	51
சீரிலகும் தண்டலையார்வள	73
சீர்கொண்ட கற்பகத்	1
சுற்றமாய் நெருங்கியுள்	54
செழுங்கள்ளி நிறைசோலைத்	78
செங்காவி மலர்த்தடம்	26
சேணிலகு மதிச்சடையார்	90
சொன்னத்தைச் சொல்லும்	24
சோறென்ன செய்யும்	75
ஞாலம்உறு நல்லவர்க்குச்	89
தண்டலையா ரடிபணிந்து	98
தண்ணமரும் மலர்ச்சோலை	67
தத்தைமொழி உமைசேரும்	64
தனத்திலே மிகுத்தசெழுங்	79
தனமேவும் புற்றடிமண்	86
தன்மமது செயல்வேண்	8
தாயறிவாள் மகளருமை	27
தானவன் ஆ கியஞானச்	74
திருவிருந்த தண்டலையார்	14
துப்பிட்ட ஆலம்விதை	17

	பக்கம்
துன்மார்க்கர்க்(கு) ஆயிரங்	55
தேரோடும் மணிவீதித்	80
நன்றிதரும் பிள்ளைஒன்று	12
நாற்கவியும் புகழவரும்	41
நித்தம்எழு நூறுநன்றி	96
நிலைசேரும் அதிகவித	88
நேசமுடன் சபையில்வந்தால்	64
நேற்றுள்ளார் இன்றிருக்கை	45
நொந்தவரும் பசித்தவரும்	93
படுங்கோலம் அறியாமல்	57
பணந்தானே அறிவாகும்	71
பரங்கருணை வடிவாகும்	62
பரியாமல் இடும்சோறும்	30
பன்னகவே ணிப்பரமர்	76
பாரதியார் ‘அண்ணாவி’	43
பார்க்குள்அறி விருந்தாலும்	99
பிரசம்உண்டு வரிபாடும்	63
பிறக்கும்போ(து) ஒருபொரு	51
புல்லறிவுக்(கு) எட்டாத	9
புனங்காட்டும் மண்ணும்	72
பேரான கவிராச	77
பேரிசைக்கும் சுற்றமுடன்	39
பேருரைகண் டறியாது	101

	பக்கம்
பொலியவளம் பலதழைத்	49
பொறுமையுடன் அறிவுடை	89
பொற்குடையும் பொற்றுகி	15
போரஞ்சார் அதிவீரர்	69
மண்ணுலகா ளவும்பினை	23
மண்ணுலகிற் பிறர்குடியை	65
மற்றவரோ தமிழ்பாடி	49
மானென்று வடிவெடுத்து	34
முக்கணர்தண் டலைநாட்டிற்	10
முன்பெரியோர் தொண்டு	66
முன்னரிய மறைவழங்கும்	31
மேட்டுக்கே விதைத்த	18
மையிலே தோய்ந்தவிழி	83
வடியிட்ட புல்லர்தமை	48
வம்பரெல்லாம் ஆதிக்கம்	97
வரம்அளிக்கும் தண்டலையார்	5
வர்க்கத்தார் தமைவெறுத்த	46
வல்லமையால் முடிவதுண்	100
வள்ளுவர்நூ லாதிபல	4
வாங்காலம் உண்டசெழுங்	53
விசையம்மிகும் தண்டலையார்	59
விற்பனர்க்கு வாழ்வுவங்	58
வேதநெறி விளம்பிய	3
வைதிடினும் வாழ்ந்திடினும்	52

கழக வெளியீடு: சூ௪சூ

பதிப்பாளர்:

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை-1.

தலைமை நிலையம்:

24, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி.

விலை ரூ. 1-4.

அப்பர் அச்சகம், சென்னை-1.